தமிழ் கூறு நல்லுலகம்

முருகு சுப்பிரமணியம்

தமிழ்ப் புத்தகாலயம்
576. பைகிராப்ட்ஸ் ரோடு. சென்னை-5.

தமிழ்கூறு நல்லுலகம்

[இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டுக்
கருத்தரங்கு பற்றிய ஒரு கண்ணோட்டம்]

முருகு. சுப்பிரமணியன்

தமிழ்ப் புத்தகாலயம்
576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.

முதற்பதிப்பு: பிப்ரவரி, 1974.
உரிமை பதிவு

விலை ரூ. 3—00.

TAMIL PUTHAKALAYAM
576, Pycrofts Road,
TRIPLICANE MADRAS-5.

மலர்விழி அச்சகம், 16, முத்து முதலி தெரு, சென்னை-14

பதிப்பகத்தார் குறிப்பு

இந்நூல் தமிழகத்தின் தலைநகரில் நடந்த இரண்டாவது உலகத்தமிழ் மகாநாட்டின் முழுமையான விமர்சனமல்ல; அந்த மகாநாட்டில், வெளிநாட்டின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட பேராளர் ஒருவர், தாம் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் பற்றி விருப்பு வெறுப்பற்ற நிலையில் கூறும் அறிக்கை போன்றதேயாகும்.

இந் நூலாசிரியர் திரு. முருகு சுப்பிரமணியம் அவர்கள் பல ஆண்டுகளாக மலேசியாவின் சிறந்த நாளிதழான "தமிழ் நேசன்"னின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருபவர். ஆயினும் அவர் தென்பாண்டி நாட்டுத் தமிழ் மகன். தென் பாண்டி நாட்டிற்கே உரிய தெளிவும் செழுமையும் அவருடைய தமிழ் நடையில் இருப்பதை இந்நூல் முழுவதும் காணலாம்.

இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சிறப்புற நடந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அம்மாநாட்டில் நேரிடையாகக் கலந்துகொள்ளாத பலரும், அம்மாநாட்டின் சிறப்பினை ஓரளவேனும் உய்த்துணர உதவும் இந்த நல்ல நூலை வெளியிடும் வாய்ப்பினை எங்களுக்களித்த ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியம் அவர்கட்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

தமிழ்ப் புத்தகாலயத்தார்

மலேசியாவில் கிடைக்குமிடம்:

முருகு வெளியீடுகள்

CC, 3, ஈப்போ ரோட் கார்டன்
4-வது மைல் ஜாலான் ஈப்போ
கோலாலம்பூர்

ஆசிரியரின் முன்னுரை

சென்னையில் 1968ம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கில் மலேசியாவின் பேராளர்களில் ஒருவனாகக் கலந்து கொள்ளும் நல்ல வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு தமிழகத்தை மலேசியாவின் பிரதிநிதி என்ற முறையில் காணுகின்ற பேறு இனிய அனுபவமாக அமைந்தது.

கோலாலம்பூரில் 1966ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலகத் தமிழக் கருத்தரங்கின் அமைப்புக் குழுவில் அங்கம் வகித்து முக்கியப் பொறுப்புக்களை ஆற்றுகின்ற வாய்ப்பும் எனக்குக் கிட்டியிருந்ததால், சென்னைக் கருத்தரங்கின் சிறப்பினை நான் உன்னிப்பாகக் கவனித்தேன்.

தமிழ் மொழிக்கு உலக அரங்கில் சிறப்பிடம் பெறுகிற ஒப்பற்ற முயற்சி உலகத்தமிழ்க் கருத்தரங்கு. கோலாலம்பூரில் தொடங்கிய இம்முயற்சி தமிழகத்தின் தலைநகரில் மேலும் பெருவெற்றி கண்டது என்று சொல்வது மிகையாகாது.

இரண்டாவது உலகத்தமிழ்க் கருத்தரங்கின் பல்வேறு அம்சங்களையும் குறை நிறைகளைக் காணுகின்ற விமரிசனக் கண்ணோட்டத்தோடு இக்கட்டுரைகளை எழுதியிருக்கிறேன். அடுத்தடுத்து நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்க் கருத்தரங்குகளுக்கு வகுக்கப்படுகிற திட்டங்கள் மேலும் செம்மையாக அமைய வேண்டுமென்ற நன்னோக்கத்தில்தான் சில குறைகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறேன். தனிப்

பட்டயாரையும் புண்படுத்துவது என் நோக்கமில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இக்கட்டுரைகளை "தமிழ் நேசன்" ஞாயிறு பதிப்பில் 1968 பிப்ரவரி முதல் மூன்று மாதங்களுக்கு எழுதி வந்தபோது, மலேசியத் தமிழ் மக்கள் பெருவிருப்பத்துடன் படித்து வந்தனர். இப்பொழுது நூல் வடிவில் வெளியிடப்படுகிற இக்கட்டுரைகளுக்கு மலேசியத் தமிழர்கள் மட்டுமின்றி தமிழகம், இலங்கை முதலான நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களும் நல்ல ஆதரவளிப்பர் என்று நம்புகிறேன். இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கியிருக்கும் பெருமதிப்புக்குரிய செனட்டர் டத்தோ ஆதிநாகப்பன் அவர்களுக்கும் அழகுற இதனை வெளியிடுவதில் உறுதுணை புரிந்த தமிழ்ப் புத்தகாலய உரிமையாளர் திரு. கண. முத்தையா அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

25-9-73
கோலாலம்பூர்

முருகு சுப்பிரமணியன்

அணிந்துரை

சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு, தமிழ் மொழியின் வரலாற்றில் முக்கிய அத்தியாயமாகும்.

தமிழ்மொழி மட்டுமல்ல, தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் இவற்றுக்கு நிலைக்கண்ணாடி போன்று விளங்கிற்று அக் கருத்தரங்கு.

மலேசியா தொடக்கி வைத்த முதல் கருத்தரங்கின் வளர்ச்சியாக—தொடர்ச்சியாகச் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது கருத்தரங்கில், மலேசியாவிலிருந்து முப்பதுக்கு மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டார்கள். மலேசியாத் தமிழர்களின் வரலாற்றிலேயே இத்தனை அதிகமான பேராளர்கள் பேரார்வத்துடன் வேறு எந்த மாநாட்டிலும் வெளிநாட்டில் பங்கேற்றதில்லை.

சென்னைக் கருத்தரங்கில் பங்கேற்ற மலேசியாவின் முக்கியமான பேராளர்களில் ஒருவர் எனது நெருங்கிய நண்பரும் கோலாலம்பூர் 'தமிழ் நேசன்' நாளிதழின் ஆசிரியருமான திரு. முருகு சுப்பிரமணியன் ஆவார்.

கருத்தரங்கின் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி அதில் பங்குகொண்ட பல நாட்டுப் பேராளர்களின் கருத்துக்களை நன்கு செவி மடுத்து, எடை போட்டு, கருத்தரங்கின் பல்வேறு நிகழ்ச்சிகளில் தாமும் பங்கு பெற்று, அனுபவித்து, தமது கருத்துக்களை இந் நூலில் வழங்குகிறார் திரு. முருகு சுப்பிரமணியன், எளியநடையில், தெளிவான மொழியில், சுவையான கருத்தில்.

சென்னைக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன் என்ற தன்மையில், ஆசிரியரின் கருத்துக்களைத் தனிச் சுவையுடன் தரம் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

சம்பிரதாயப் புகழ்ச்சியில்லாமல், திரு. முருகு சுப்பிரமணியன் இந்நூலின் மூலம் சிறந்த கொடை வழங்கியுள்ளார் என்று கூறலாம்.

இந்நூல் ஒரு கருத்தரங்கின் அறிக்கையல்ல; சுற்றுலாக் குறிப்பல்ல; வெறும் வரலாறும் அல்ல; எளிதில் புரிய இயலாத வியாக்கியானமுமல்ல.

இது ஆசிரியரின் சுய அனுபவச் சித்திரமாகும். நிதானக் கண்ணோடு கருத்தரங்கின் நிகழ்ச்சிகளை அழகுடன் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.
ஆசிரியரின் இந்நன் முயற்சி தமிழுலகத்தின் பாராட்டுதற்குரியது. மேலும் மலேசியாவிலிருந்து இது மலருவது, இந்நாட்டுத் தமிழர்கட்குத் தனிப் பெருமை தரும் பணியாகும்.

ஏற்கனவே 'தமிழ் நேசன்' இதழ்களில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளியாகிறது.

பொருளுக்குப் பொருளாகவும், சுவைக்குச் சுவையாகவும் அமைந்துள்ள இந்நூல் தமிழ் மக்களின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டியது அவசியம். எங்கிருப்பினும், தமிழர்கள் எல்லோரும் இதற்கு நல்லாதரவு தருவர் என்று நம்புகிறேன்.

கோலாலம்பூர்
1—4—1973

டத்தோ செனட்டர் ஆதிநாகப்பன்
D.M.S., J.M.N, M.P.

தமிழ்கூறு நல்லுலகம்

1

1967 டிசம்பர் 31—ஞாயிற்றுக்கிழமை இரவு கோலாலம்பூரில் சுபாங் விமான நிலையம் அல்லோல கல்லோலப்பட்டது. பெரும்பாலும் அமைதிக்குப் பெயர் போன சுபாங் அனைத்துலக விமான நிலையம் அன்று வழக்கத்திற்கு மாறாகப் படுசுறுசுறுப்பாக இருந்தது.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கிற்கு அன்றிரவு மலேசியப் பேராளர் குழு. செனட்டர் டத்தோ ஆதி நாகப்பன் தலைமையில் ஏர் இந்தியா விமானத்தில் பயணமாயிற்று. வழியனுப்ப வந்த கூட்டம் பெருங்கூட்டமாக இருந்தது. விமானத்தில் ஏறிப்பார்த்த போதுதான் ஆயிரக்கணக்கில் மக்கள் மலேசியக்குழுவை வழியனுப்ப வந்திருந்தது முழுமையாகப் புலப்பட்டது.

பின்னர் சிங்காரச் சென்னையில் நாங்கள் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் திரளை முன்கூட்டியே அறிவுறுத்துவது போலச் சுபாங் விமான நிலைய வழியனுப்பு அமைந்திருந்தது என்று கூறுவது மிகையாகாது.

'தமிழுக்காக மலேசியாவிலிருந்து இத்துணைப் பெரிய தூதுக்குழு வெளிநாட்டுக்குச் செல்வது இதுதான் முதல் தடவை' என்று திரு முரசு நெடுமாறன் காதோடு காதாகச் சொன்னார். அவர் நெஞ்சு நிமிர்ந்திருந்தது.

மலேசியக் குழுவில் இளங் கவிஞர்கள் இருவருக்கு நமது மாண்புமிகு அமைச்சர் துன் வீ. தி. சம்பந்தன் அவர்கள் இடமளித்திருந்தார்கள். [மாண்புமிகு என்னும் சொல்லைப்பற்றி இடையில் ஒரு வார்த்தை. 'ஹானரபிள்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நீண்ட நெடுங்கால மாகக 'கனம்' என்னும் வார்த்தையே பயன்படுத்தப்பட்டு வந்தது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் அமைச் சரவை பதவியேற்ற பிறகு 'கனம்' என்னும் கண்ணராவி தூக்கியெறியப்படடு 'மாண்புமிகு' என்னும் பைந்தமிழ் வழக்கிற்கு வந்திருககிறது]

அந்த இளங்கவிஞர்களில் ஒருவர் கேரித் தீவு தமிழாசிரியர் முரசு நெடுமாறன். மற்றொருவர் அலோர்காஜா தமிழ்ப்பள்ளியில் ஆசிரியராகப் பணி புரியும் தம்பாய் முனியாண்டி.

இவர்கள் இருவரும் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் கருத்தரங்குக்கு வந்திருந்தார்கள்.

'உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு' என்னும் தொலைநோக்குள்ள திட்டம் உருவான பூமி மலேசியா. மலாயா பல்கலைக்கழக இந்தியப் பகுதியும் அதன் தலைவர் பேராசிரியர் தனிநாயகமும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும் இத்திட்டத்தின் மூலகர்த்தாக்கள் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். முதலாவது தமிழ்க் கருத்தரங்கை மலேசிய மண்ணில் நமது தேசத் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் தொடக்கி

வைத்தார்கள். நம் இன்பத் தாய்மொழி தமிழுக்கு உலக அரங்கை அமைக்கின்ற முதற்பேறு—நற்பேறு நமக்கு ஆம்!—மலேசியத் தமிழர்களுக்குக் கிட்டியது. செந் தமிழின் வரலாற்றில் தித்திக்கும் இச்செய்தி பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்படுவது உறுதி.

முதல் கருத்தரங்கு

1965ல் மலேசியத் தலைநகரத்தில் முதல்கருத்தரங்கு நிகழ்ந்தது. அவ்வகையில் இரண்டாவது கருத்தரங்கு மலேசியாவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கூறவேண்டியதில்லை.

ஆனால், சென்னை கருத்தரங்குக்கு மலேசியா விலிருந்து தூதுக்குழு ஒன்று செல்லுமா என்பது இறுதி நேரம் வரை கேள்விக்குறியாக இருந்தது பெரிய துரதிஷ்டமாகும். குழுவினர் புறப்பட்ட அன்றுதான் பெயர்ப்பட்டியல் பத்திரிகைகளில் வெளிவந்தது. அது வரையில் குழுவில் இடம் பெறுவோர் யார் என்பது மக்களுக்குத் தெரியாததால் வீண் சர்ச்சைகளும் ஐயப் பாடுகளும் பரப்பப்பட்டன.

குழுவைத் தேர்ந்தெடுப்பதில் வரம்புமிஞ்சிய காலத் தாழ்வும் மூடுமந்திரமும் தேவையில்லாமல் எப்படியோ நேர்ந்துவிட்டன. சென்னைக் கருத்தரங்கு அமைப்பாளர் களிடம் மலேசியக் குழுவினர் சிலர் தங்களைத் தாங்களே நேரில் அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டிய தரும சங்கடமும் இக்கட்டும் பரிதாபமும் இதனால் நேர்ந்தது.

என்றாலும் மலேசியக் குழு மலேசிய தமிழ்ச் சமுதாயத் தின் பல்வேறு பிரிவினரையும் பிரதிநிதிக்கும் முழுமை யான குழுவாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. மலையைக்

கல்லி 'எலி' பிடித்த ஏளனக் கதையாக அமையாமல் உண்மையில் புலிபிடித்த வெற்றிக் கதையாகக் குழுவினர் தேர்வு அமைந்தது.

காலத்தாழ்வு இல்லாமலும் தக்க முன்னறிவிப்புக் களோடும் தேர்வு நடைபெற்றிருந்தால் இடையில் கிளப்பி விடப்பட்ட புரளிகளுக்கும் தமிழக அமைச்சர்களுக்கு எழுதப்பட்ட மொட்டைக் கடிதங்களுக்கும் இடமில்லாமல் போயிருக்கும். இன்னும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மலேசியாவின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுப் படிக்கப் பட்டிருக்கும்.

மலேசியக் குழுவுக்குத் தலைவராக அமைச்சர் துன் சம்பந்தன் வருவதாக இருந்தது. கடைசி நேரத்தில் 'வேலைப் பளு' காரணமாக துன் சம்பந்தன் வரமுடியாமல் போய்விட்டது. குழுவின் தலைவராக டத்தோ ஆதி நாகப்பன் நியமிக்கப்பட்டு எங்களுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

எல்லா வகையிலும் தகுதியும் பொருத்தமும் உள்ள தலைவராக டத்தோ ஆதிநாகப்பன் மலேசியாக் குழு வுக்குப் பெருமை தேடித்தந்தார்.

டத்தோ ஆதிநாகப்பனைத் தவிர மற்றும் இரு வழக்கறிஞர்களும் மலேசியக் குழுவில் இடம் பெற்றிருந் தார்கள். பினுங்கு வழக்கறிஞர் திரு டி. சுப்பையா, அமைச்சர் திரு மாணிக்கவாசகத்தின் தம்பியும் கோலாலம் பூர் வழக்கறிஞருமான திரு வி. எல். காந்தன் ஆகிய இருவருமே அவர்கள்.

மலாயாப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகளாகப் பேராசிரியர் தனிநாயகம், டாக்டர் அரசரத்தினம், திரு ஈ. சா. விஸ்வநாதன், திரு எஸ் சிங்காரவேலு, குமாரி

லோக நாயகி. திருமதி சந்திரசேகரன், திருமதி சாம்ப மூர்த்தி திரு வி. என். ராமச்சந்திரன் ஆகியோர் குழுவில் இடம் பெற்றிருந்தனர். மாரா கல்லூரியில் மலாய்க்கார மாணவர்களுக்குத் தமிழ் படிப்பிக்கும் திரு எஸ் மார்க்கண்டுவும் மலேசியத் தொலைக்காட்சியில் பணிபுரியும் குமாரி லியோவும், மலேசிய வானொலியைச் சேர்ந்த திரு வி. சியாமகிருஷ்ணனும் எங்களுடன் வந்திருந்தனர். சிங்கப்பூர் வானொலியைச் சேர்ந்த திரு ஆர். ரமணியும் மலேசியக் குழுவில் இடமளிக்கப் பட்டிருந்தார்.

கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோவிலின் சார்பில் தேவஸ்தானத் தலைவர் திரு என். வீரையும், மாரா கல்லூரி விரிவுரையாளர் திரு எஸ். எம். பொன்னையாவும் அங்கம் வகித்தனர். மூவார் புலவர்மணி திரு முரு பழ. இரத்தினம் செட்டியாரும் கருத்தரங்கில் பங்குகொண் டார்.

நாட்டுக்கோட்டைச் செட்டியார் வர்த்தகச் சங்கச் சார்பில் திரு ஆர். எம். வள்ளியப்பனும், தமிழ் எழுத் தாளர் சங்கத்தின் சார்பில் திரு சி. வி. குப்புசாமி, திரு சி வேலுச்சாமி ஆகியோரும் பிரதிநிதித்துவம் பெற்றனர், மற்றும் சிறுகதை எழுத்தாளர் லாபு திரு சி. வடிவேல். மேடைப் பேச்சாளர் திரு சித. இராமசாமி, ஈப்போ திரு ஏ. டி சேவியர் ஆகிய மூவரும் தமிழ் இளைஞர் மணி மன்றத்தைப் பிரதிநிதித்தனர். அகில மலாயா திராவிடர் கழகத் தலைவர் திரு கே ஆர். இராமசாமியும் குழுவில் இடம் பெற்றிருந்தார். திரு நடனம், அலோர்ஸ்டார் திரு ரெ. இராமசாமி, திரு ஆலிவர் குணசேகர் முதலிய எழுத் தாளர்களும் அப்பர் தமிழ்ப் பள்ளியின் தலைமையாசிரியர்

திரு சி. குமாரசாமியும், தொழிலாளர் அமைச்சைச் சேர்ந்த திரு எஸ். கந்தையாவும், ஜொகூர் மாநில ம. இ. கா. தலைவர் மூவார், திரு ஜி. பாசமாணிக்கமும் மலேசியக் குழுவைச் சேர்ந்த மற்றவர்கள் ஆவர்.

மலேசியக் குழுவில் தமிழாசிரியர்கள் அதுவும் தமிழ்ப்பள்ளியின் தலைமை ஆசிரியர்களாகப் பலர் வந்திருந்ததும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் பலர் இடம் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. மலேசியக் குழுவைப் பற்றி இல்லாத பொல்லாத வதந்திகளைப் பரப்பியதோடு தமிழகத்திற்கு எதிர்ப்புத் தந்திகளும் மறுப்புக் கடிதங் களும் எழுதியவர்களும் எதிர்பார்த்ததற்கு நேர்மாற்ற மாகக் குழுவின் அமைப்பு இருந்தது. தேர்ந்தெடுக்கப் பட்ட குழுவைக் குறித்துப் பெரிய அதிர்வேட்டுக்களை கிளப்பக் கருதியவர்கள்கூட ஏமாற்றமடைந்து வாயடைத்துப் போனார்கள்,

அமைச்சரின் அறிவுரை

சுபாங் விமான நிலையத்தில் மலேசியக் குழு வினருக்குச் சில அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அமைச்சர் மாணிக்கவாசகம் வெளியிட்டார். தமிழகத்தில் இருக்கும்போது நாம் மலேசியாவின் பிரதிநிதிகள் என்பதை ஒவ்வொரு கணமும் நினைத்துக்கொண்டு பொறுப்புடன் நடந்துகொள்ளும்படி அவர் வலியுறுத் தியது பொருத்தமானதேயாகும். இந்தியாவின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிடவேண்டாம் என்பதை யும் அவர் அழுத்தமாகச் சொன்னார்.

''பாசமுள்ள இடத்திற்குப் போகிறோம். ஆகவே மிகவும் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்'' என்று

குழுவின் தலைவர் டத்தோ ஆதிநாகப்பன் சொன்னார். அதுவும் பொருள் பொதிந்த வார்த்தை ஆகும்.

தமிழகத்தை முதன்முதலாகப் பார்க்கப் போகிறவர்கள் பலர் மலேசியக் குழுவில் இருந்தார்கள். விமானத்தின் வேகத்தைவிட மிகவும் மனோ வேகத்தில் அவர்கள் கற்பனைச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தார்கள்.

இரவு 11 மணிக்குச் சென்னை போய்ச் சேர்ந்தோம். விமானத்திலேயே ஒருமுறை 1968ம் ஆண்டு மலேசிய நேரப்படி பிறந்துவிட்டது. மறுபடியும் இந்திய நேரப்படி மீனம்பாக்கம் விமான நிலையத்தில் புத்தாண்டை வரவேற்றோம்.

சென்னை விமான நிலையத்தில் எங்கள் குழுவை வரவேற்க தமிழக மேல்சபை உறுப்பினர் திரு என். வி. நடராசன், இந்திய நாடாளுமன்றஉறுப்பினர்திரு எஸ். கே. சம்பந்தம், சென்னை நகரத் துணைமேயர் திரு. பவள வண்ணன் ஆகியோர் வந்திருந்தனர்.

உலகத்தமிழ் மாநாட்டுக்குத் தனி அழைப்புப் பெற்றிருந்த தொழிற்கட்சிப் பிரமுகர் திரு வி. டேவிட்டும் எங்களுடன் சென்னை சேர்ந்தார். சிங்கப்பூர் குழுவைச் சேர்ந்தவர்கள் பலரும் எங்களுடன் பிரயாணம் செய்தனர்.

கருத்தரங்குக்கு வருகிற வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இந்தியப் பிரதிநிதிகளும் தங்குவதற்குப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள எம். எல். ஏ. விடுதியை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதன் வேலைகள் அப்பொழுது பூர்த்தி அடையாமல் இருந்ததால் பிரதிநிதிகளைத் தற்காலிகமாகச் சில ஓட்டல்களில் தங்க வைப்பதற்குத் திட்டமிட்டிருந்தார்கள். என் உறவினர்களும் 'நேசன்' சென்னைப்

பிரதிநிதியும் விமான நிலையத்திற்கு வந்திருந்ததால் எனக்குள்ள ஏற்பாடுகளைத் தெரிந்துகொண்டு நான் நேரே இம்பீரியல் ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

2

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறு நல்லுலகம்' என்பது தொல்காப்பியம். இது ஏறத்தாழ இன்றைய தமிழகத்தின் எல்லைப் பரப்பைக் குறிக்கும். ஆனால், தமிழ் பேசுகிற உலகம் முன்பு மிகவும் பரந்த அளவில் இருந்ததென்பது வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் முடிவு. 'தமிழ் இந்தியா'வாக இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் திகழ்ந்த பண்டைக்காலமும் உண்டு. ஆனால், காலப்போக்கில் தமிழ்கூறு நல்லுலகத்தின் எல்லை சுருங்கிவிட்டது. வடவேங்கடம்கூட இன்று தமிழகத்தின் எல்லைக்கு அப்பால் ஆந்திர நாட்டில்தான் இருந்துவருகிறது. இதனைக் காலவெள்ளத்தில் நேர்ந்த தாழ்வு என்று கருதலாம்.

ஆனால், தமிழ் கூறு நல்லுலகம் இப்பொழுது மீண்டும் விரிவடையத் தொடங்கியிருக்கிறது. அரசியல் ரீதியிலான எல்லைக்கோடுகளிலும் பரப்பிலும் மாற்றம் ஏதும் ஏற்படுவது சாத்தியமில்லை; அது அவசியமுமில்லை.

தமிழ் மொழியைப் பேசுகிற நாடுகள், தமிழின்பால் அக்கறையுள்ள உலகம் இப்பொழுது மிகவேகமாக விரிவடையத் தொடங்கியிருக்கிறது. இரண்டு ஆண்டுக்கு முன்பு கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்

தமிழ்க் கருத்தரங்கில் 20 நாடுகளைச் சேர்ந்த 200 அறிஞர்கள் பங்கு கொண்டார்கள். இப்பொழுது தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் நடைபெற்ற இரண்டாவது கருத்தரங்கில் 40 நாடுகளைச் சேர்ந்த 430 அறிஞர்கள் பங்குகொண்டனர். தமிழிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழ் இலக்கியங்களிலும் அக்கறையுள்ள நாடுகளின் எண்ணிக்கையும் அறிஞர்களின் எண்ணிக்கையும் இரட்டித்திருப்பது தமிழ்கூறு நல்லுலகம் விரிவடைந்து வருவதைக் குறிக்கிற நல்ல அறிகுறியாகும்.

தமிழகம், இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், பீஜிதீவுகள், இந்தோனேஷ்யா, மோரிஸ்தீவு, தென்னுப் பிரிககா முதலிய பலநாடுகளில் தமிழ் பேச்சு மொழியாக இருந்து வருகிறது. இந்தியாவின் மொழிகளில் தமிழ் மொழிகுள்ள தனிச்சிறப்பு இது. இந்தி முதலான மற்றும் சில மொழிகளும் இந்திய எல்லைக்கு அப்பால் வழக்கில் இருந்தபோதிலும் தமிழ்மொழி வழங்குகிற நாடுகளின் பரபபும் மக்களின் எண்ணிகையும் மிகப்பெரியவை. தமிழகத்தின் எல்லைக்கு அப்பாலும் தமிழ் ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவும், பேச்சு மொழியாகவும் திகழ்ந்து வருகிறது அதுமட்டுமின்றித் தமிழ்ப் புத்திலக்கியம தமிழக எல்லைக்கு வெளியிலும் பீடுநடை போட்டு வளர்ச்சியடைந்து வருகிறது. இது தமிழ்கூறு நல்லுலகத்தின் 'பரப்பு' நாளும் விரிவடைந்து வருவதையே குறிக்கிறது.

அரசியல் பூச்சாண்டி

ஆனால், இது அரசியல் படையெடுப்புப் பூச்சாண்டியும் அன்று, அகண்ட தமிழகம் அமைக்கும் ஏகாதிபத்திய முயற்சியும் அன்று. இலங்கையில் திருமதி சிரிமாவோ

பண்டார நாயக்கா அண்மைக் காலங்களில் பரப்பி வருகிற அகண்ட தமிழகப் பூச்சாண்டிக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. சிங்களவர்களைத் தம் கட்சிப் பக்கம் திருப்புவதற்காக திருமதி சிரிமாவோ கையாளுகிற அரசியல் தந்திரமே இந்தப் பிரச்சாரம். அரசியல் ரீதியாகத் 'தமிழ்ப் பேரரசு' ஒன்று அமைவது நடைமுறையில் சாத்தியமல்ல என்பது குருடனுக்கும் தெரியும். ஆகவே இலங்கை அரசியல்வாதிகள் தாங்களே கற்பித்துக்கொண்ட ஒரு பித்துக்குளித்தனத்தில் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாம் கூறுகிற தமிழ்கூறு நல்லுலகம் தமிழ்மொழியின்பால் அக்கறைகொண்ட அறிஞர் பெருமக்களையும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட நன்மக்களையும் உள்ளடக்கியதாகும். இது அரசியல் அடிப்படையில் அதிகாரப் பேராசையில் உருவாகிற பேரரசு அன்று; 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்னும் தமிழ்நெறியின் அடிப்படையில் தோன்றியிருக்கிற பண்பாட்டு நல்லுலகமே இது.

இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமன்றி மற்ற மாநிலங்களிலிருந்தும் அறிஞர்கள் பலர் உலகத் தமிழ்க் கருத்தரங்கிற்கு வந்திருந்தார்கள். தமிழகத்திலும் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த அறிஞர்கள் நூற்றுக் கணக்கில் பங்குகொண்டார்கள். தமிழ் ஆராய்ச்சி இத்துணை பரந்த உலகப் பரப்பையும் அறிஞர்களின் அக்கறையையும் அடைந்திருப்பது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நமக்கு உண்மையிலேயே பூரிப்பைத் தருகின்ற நிலைமை ஆகும்.

அபாயம் சூழ்ந்தது

சென்னையில் என்னுடைய இம்பீரியல் ஹோட்டல் வாசத்திற்கு ஜனவரி முதல் தேதியன்று அபாயம் சூழ்ந்தது. பகல் 12 மணிக்கெல்லாம் அறையைக் காலி செய்ய வேண்டுமென்று கூறிவிட்டார்கள். வரவேற்புக் குழுவினருடன் தொடர்புகொண்டதில் அவர்கள் 'எங்கேயும் போகவேண்டாம், அங்கேயே இருங்கள்' என்று அழுத்தமாகச் சொன்னார்கள். ஆனால், என்னுடைய அறைக்கு வேறொருவர் வரவிருந்ததால் நான், என் பெட்டிகளை நண்பர் திரு. பாசமாணிக்கம் அவர்கள் தங்கியிருந்த அறைக்கு மாற்றினேன். ஆனால் அந்த அறைக்கும் மாலை 5 மணிக்கு வெளியேற்ற நோட்டீஸ் கிடைத்து விட்டது. ஆகவே, அன்றிரவு எங்கே தங்குவது என்னும் பிரச்னை தோன்றி மைலாப்பூரிலுள்ள 'லெட்சுமி லாட்' ஜில் அடைக்கலம் புகுந்தேன்.

சென்னை நகர ஹோட்டல்களில் எங்கும் இட நெருக்கடி. எந்த இடத்திற்குப் போனாலும் 'அறை கிடையாது' என்று தெரிவித்தார்கள். நல்ல வேளையாக 'நேசன்' பிரதிநிதி திரு விசுவநாதஐயர் அவர்களின் முயற்சியினால் 'லெட்சுமி லாட்'ஜில் ஒண்ட முடிந்தது. மறுநாள் பொழுதுவிடிந்த பிறகுதான் இப்பிரச்னைக்கு 'விடிவு காலம்' பிறந்தது. 'தாசப் பிரகாஷ் ஹோட்டலில் அறை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பெட்டிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டு வாருங்கள்' என்று திரு பாசமாணிக்கம் தொலைபேசி மூலம் அழைத்தார். அவருடைய விடாமுயற்சியாலும் போராட்டத்தாலும்தான் இம்முனையில் நாங்கள் வெற்றிபெற முடிந்தது.

தாசப் பிரகாஷ் ஹோட்டலில் என்னுடன் திரு. தம்பாய் முனியாண்டியும் தங்கியிருந்தார். என் பிரச்னைகளையும் கவலைகளையும் பாதிப்பங்கு அவர் சுமந்துகொண்டார். இளைஞர் ஆதலால் கனத்த சிக்கல்களையும் அவரால் தாங்க முடிந்தது. அலோர்காஜா தமிழ்ப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுகிற திரு. தம்பாய் சென்னையில் இறுதிவரை என்னுடன் இணைபிரியாத உற்றதோழராக இருந்தார்.

நாங்கள் இம்பீரியல் ஹோட்டலிலிருந்து தாசப் பிரகாஷுக்கு மாறிக் கொண்டிருந்த அதே சமயத்தில் மலேசியக் குழுவினரைச் சேர்ந்த மற்றவர்கள் ஹோட்டல் அருணிலிருந்து புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு மாறினார்கள். எங்களுக்காவது விமானத்தில் இறங்கிய அன்று ஹோட்டல் இம்பீரியலில் உடனே இடம் கிடைத்து விட்டது. ஆனால், பெரும்பாலான மலேசியக் குழுவினருக்கு எந்த ஹோட்டலில் இறங்குவது என்பதே பெரிய பிரச்னை ஆகி இறுதியில் அமிஞ்சிக்கரையிலுள்ள ஹோட்டல் அருணில் இடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் அன்றைய அனுபவம் தனிக்கதை ஆகும்.

ஆனால், ஜனவரி 2ந் தேதி காலையிலிருந்து நெருக்கடிகள் அகன்று நிலைமை சுமுகமாக மாறியது. தங்குமிடம், போக்குவரவு வசதி முதலான துறைகளில் எவ்வித சங்கடமும் நேராதபடி திரு. சிவகடாட்சம், திரு. வரதராசன் ஆகியோர் தாசப்பிரகாஷ் ஹோட்டலில் இருந்த பேராளர்களைக் கவனித்துக் கொண்டார்கள். அதன் பிறகுதான் கருத்தரங்கைப்பற்றி எங்களால் சற்று ஆற அமரச் சிந்திக்க முடிந்தது.

ஜனவரி முதல் தேதி அண்ணுவின் சிலைத் திறப்பு விழா நடந்தேறியது. எங்கள் அவதியில் அவ்விழாவில் நாங்கள் பங்குகொள்ள முடியாமற் போய்விட்டது. மவுண்ட்ரோடு சந்திப்பில் காமராஜர் சிலைக்குச் சற்று தொலைவில் தமிழக முதலமைச்சர் அண்ணுவின் சிலை வைக்கப்பட்டிருக்கிறது.

ஜனவரி 2-ந் தேதிதான் தமிழ் வளர்த்த ஆன்ருேர் சான்ருேர்களுக்குக் கடற்கரையில் சிலையெடுப்பு விழா நடைபெற்றது. அவ்விழாவில் முதலமைச்சர் அண்ணு உட்பட எல்லா அமைச்சர்களும் கலந்துகொண்டார்கள.

மெரீஞ கடற்கரையில் வரிசையாகக் கடற்கரை நெடுஞ்சாலை ஓரத்தில் திருவள்ளுவர், ஔவையார், கம்பர், ஜி. யூ. போப், கால்டுவெல், பாரதியார், பாரதி தாசன், வ. உ. சி., வீரமாமுனிவர், கண்ணகி ஆகிய பத்துச் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

பத்துப்பேர் பேசினர்

இச்சிலைகளைத் திறக்கும் விழா புதுமையாக நடந்தேறியது. மேடைக்கருகே பத்துச் சிலைகளின் படங்களை வரிசையாக நிறுத்தி வைத்திருந்தார்கள். ஒவ்வொரு சிலை திறக்கும்போதும் அந்தந்தப் படத்தைச் சுற்றிலுமுள்ள மின்விளக்குகள் எரிந்தன. அதே சமயத்தில் ஆங்காங்குள்ள அசல் சிலைகளும் தொலைபேசி மூலம் தகவல் கொடுக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன.

சிலையெடுப்பு விழா பொறுமையைச் சோதிக்கும் விதத்தில் மிகவும் நீண்டநேரம் நடைபெற்றது. ஒவ்வொரு சிலைத் திறப்புக்கும் ஒவ்வோர் அமைச்சர் தலைமையுரை ஆற்றினுர். அதன் பிறகு சிலைத் திறப்பாளர்களாகப்

பத்துப்பேர் பேசினர், சிலையெடுப்பு விழாவின் அருமை பெருமையை அளவுக்கு மிஞ்சிய பேச்சுக் கச்சேரி ஓரளவு கெடுத்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

எனினும் உருப்படியான சில பேச்சுக்களையும் அவ் விழாவில் செவிமடுக்க முடிந்தது. 'ஔவையார்' திரைப் படத்தின் மூலம் புகழ்பெற்ற திரு. எஸ் எஸ். வாசன் தமிழ் மூதாட்டி ஔவையின் சிலையைத் திறந்து வைத்துப் பேசும்போது ராஜாஜி ஔவையார் படத்தை ரகசியமாகப் பார்த்த தகவலை வெளியிட்டார். அப்போது ராஜாஜி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். யாருக்கும் தகவல் சொல்லாமல் தாமே படமேடைக்கு வந்து காசு கொடுத்து டிக்கட் வாங்கவும் போயிருக்கிறார். அந்தச் சமயத்தில் படமேடை அதிபர் அவரைக் கண்டு உள்ளே அழைத்துச் சென்று பிறகு திரு. வாசனுக்கும் தகவல் கொடுத்திருக்கிறார்.

இத்தனை முனைப்போடு 'ஔவையார்' படத்தைப் பார்த்த ராஜாஜி நான்கு வார்த்தை அதனைப் பாராட்டிக் கடிதம் எழுதவுமில்லை, நேரில் கூறவுமில்லை. இது படாதிபதி வாசனுக்கு ஏமாற்றந்தான். என்றாலும் அவர் 'ஔவையார்' படத்தை வந்து பார்த்ததையும் அதனைப் பற்றிக் குறையேதும் அவர் கூறவில்லை என்பதையும் வாசன் மனநிறைவோடு குறிப்பிட்டார்.

அடுக்கு மொழிகள், அலங்காரங்கள் இல்லாவிட்டாலும் வாசன் பேச்சில் கருத்துப் பொதிந்திருந்தது.

பாரதிதாசன் சிலையைத் திறந்துவைத்த பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனாரும் கண்ணகி சிலையைத் திறந்து வைத்த சிலம்புச் செல்வரும் உணர்ச்சிப் பிழம்பாகக் கருத்துக்களைக் கொட்டினார்கள்,

நீதி தவறிய நெடுஞ்செழியன்

கண்ணகி சிலைத் திறப்புக்குத் தலைமை வகித்த அமைச்சர் கருணாநிதி நீதி தவறிய நெடுஞ்செழியனைப் பற்றிச் சற்று அதிகமாகப் பேசித் தம் சகோதர அமைச்சர் நெடுஞ்செழியனுக்குச் சற்று தருமசங்கடத்தை உண்டாக்கி விட்டார். கடைசியில் பாண்டியன் நெடுஞ்செழியன் செய்த பிழைக்குக் கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் காலத்தில் இச்சிலைத் திறப்பு மூலம் கழுவாய் தேடப்படுகிறது என்று குறிப்பிட்டு நாவலரை இக்கட்டிலிருந்து காப்பாற்றினார்.

போப்பய்யரின் சிலையைத் திறந்துவைத்த பிஷப் லெஸ்லி நியூபிகின் அழகு தமிழில் பேசி ஆங்கிலக் கல்வியை ஆர்வத்துடன் கற்கும் தமிழ் இளைஞர்கள் தங்களின் இணையற்ற தமிழ் மொழியைப் புறக்கணிப்பது பற்றித் தம்முடைய 'நாலடியார்' ஆங்கிலப் பதிப்பில் போப்பையர் வருந்தி இருப்பதையும் குறிப்பிட்டார்.

போப்பையர் வருந்திய அந்தப் புறக்கணிப்பு நிலை இன்றும் தமிழகத்தில் நீடிப்பது குறித்து என் மனம் அப்போது மேலும் வருந்திற்று. எந்தக் காலத்திலும் இல்லாத அளவு 'ஆங்கில மோகம்' தமிழகத்தில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட கான்வெண்ட் பள்ளிகளுக்குத் தங்களின் பிள்ளைகளைப் படிக்க அனுப்புவதைப் பெருமையாகக் கருதுகிற பெற்றோர்களைத் தமிழகத்தில் இன்னும் காண முடிகிறது. 'தமிழ் வாழ்க' என்னும் பேரொலி விண்ணதிர ஒலித்த போதிலும் தமிழக மக்களுக்கு இன்னும் தங்களின் தாய்மொழியில் முழு நம்பிக்கை பிறந்திருக்கும் அறிகுறிகளைக் காண முடியவில்லை.

தமிழ்ப் பாடமொழி பற்றிய பிரச்னே கருத்தரங்கில் மிகவும் முதன்மை பெற்றது. அதைப்பற்றிப் பின்னர் தனியாக எழுதுகிறேன்.

கம்பர் சிலேயைத் திறந்து வைத்த பழைய முதலமைச்சர் பக்தவத்சலம் ஆந்திர நாட்டிலும் மலேயாளத்திலும் கோவில்களில் கம்பராமாயணம் பாராயணம் செய்யப் படுகிறது என்று குறிப்பிட்டார்.

வீரமா முனிவரின் சிலேயைத் திறந்து வைத்த ஆர்ச்பிஷப் அருளப்பரின் பேச்சு ரத்தினச் சுருக்கமாகவும் கருத்துப் பொலிவோடும் அமைந்தது.

ரோமாபுரியைப் பழமைச் சின்னங்கள் நிறைந்த நகரம் என்று பெருமையாகச் சொல்வார்கள். அங்கு திரும்பும் இடமெல்லாம் சிலேகளேப் பார்க்கலாம். ரோமா புரியை நான் இரண்டுநாள் சுற்றிப் பார்த்தேன். அதில் முக்கால்வாசி நேரம் நான் புராதன சிலேகளேத்தான் பார்த்தேன். சென்னே மாநகருக்கும் 'சிலே நகரம்' என்னும் பெருமை விரைவில் கிட்டுமானுல் வியப்படையத் தேவை யில்லே.

சிலேயெடுப்பு விழா தமிழகத்தில் பெரிய சர்ச்சைகளேக் கிளப்பி விட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர் களுக்கு 'ஆறுமுக நாவலர்' சிலே நிறுவவில்லே என்று வருத்தம். இலங்கைத் தமிழ் ஏடுகளில் இது முக்கிய பிரச்னேயாக எழுதப்பட்டு வருகிறது.

கண்ணகி சிலே வைத்தவர்கள் மாதவிக்கும் சிலே எடுத்திருக்க வேண்டும் என்பது கலே ரசிகர்களின் வாதம். கண்ணகியைக் காவியத்தில் உருவாக்கிக் கொடுத்த இளங்கோ அடிகளுக்கு அன்றே சிலே நாட்டியிருக்க வேண்டும் என்று தமிழ்ப்புலவர்களில் சிலர் கேட்கிருர்கள்.

மேலும் பல சிலைகள்

'கல்கி' பத்திரிகையின் அதிபர் சதாசிவம் உலகத் தமிழ் அறிஞர்களுக்குத் தான் அளித்த விருந்தில் ரசிக மணி டி. கே. சி க்கும் கல்கிக்கும் சிலை எடுக்கும்படியும் அதற்காகத் தாம் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை தருவ தாகவும் அறிவித்தார். ஆகவே, மெரினா கடற்கரையில் மேலும் பல ஆன்றோர் சான்றோர்களின் சிலை பெருகுவது தவிர்க்க முடியாத நிலைமை ஆகும்.

வீரமா முனிவர், கால்டுவெல், போப்பையர் போன்ற அயல்நாட்டுக் கிறித்தவப் பாதிரியார்களுக்குச் சிலை யெடுப்பு விழாவில் தக்க இடம் வழங்கப்பட்டு விட்டது. அதே சமயத்தில் தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்களுக் குச் 'சிலை' வைக்கப்படவில்லை என்பது பெரிய விவகார மாக எழுந்தது. உருவ வணக்கம் இஸ்லாத்திற்கு விரோத மாதலால் சிலை நாட்டுவதில் சிக்கல் எழுந்தது. இறுதி யில் உமறுப்புலவர்க்கு நினைவுச் சின்னம் எழுப்புவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். அதிலும் முஸ்லிம் புல வர்களின் பெயர்களை எழுதுவதில் கருத்து வேறுபாடு தோன்றி நினைவுச் சின்ன யோசனையும் கைவிடப்பட்டது. அதற்கு ஈடாகத்தான் சென்னையின் சில பகுதிகளுக்கு உமறுப் புலவர் நகர், சீதக்காதி நகர் என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியின் இந் நடவடிக்கை தமிழ் முஸ்லிம்களின் மனக்குறையை நீக்க உதவியிருக்கிறது.

எல்லாருக்கும் சிலையெடுப்பதென்றால் தமிழ் ஆன் றோர், சான்றோரின் எண்ணிக்கை ஏராளமாக இருக் கிறது. 'தக்கவர்கள்' என்று பொறுக்கி எடுக்க முயன்றால் கூட நூற்றுக்கணக்கில் சிலைகளை நிர்மாணிக்க நேரிடும்.

இப்பொழுதே சிலைகளை வரிசையாக வைத்துக் கடற்கரையின் அழகைக்கெடுத்து விட்டார்கள் என்று ஒரு சாரார் குறைப்படுகிருர்கள். ஆகவே சிலையெடுப்பதில் சற்று பொறுமையாகத் தமிழகத் தலைவர்கள் நடந்துகொள்வது தான் அறிவுடமை.

சிலைகளும் அவசர அவசரமாக வடிக்கப்பட்டதால் நின்று நிலைத்துப் பார்க்கக்கூடிய முறையில் பெரும் பாலானவை இல்லை. சிவாஜி கணேசனின் உபயமான திருவள்ளுவர் சிலை ஒன்றுதான் சிறப்பாகப் பெருமிதத்தோடு காட்சியளிக்கிறது.

மற்ற சிலைகளுக்கு விரைவில் மாற்றுச் சிலைகள் வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்தரங்கின் தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த கலைக் காட்சியிலிருந்த கண்ணகி சிலை அற்புதமான உயிர்க்களையோடு திகழ்கிறது. புதிதாக வடித்த சிலையானுலும் புராதனச்சிலை போலக் காட்சியளிக்கும் அந்தச் சிலையைக் கடற்கரையில் வைக்க ஏற்பாடு செய்தால் பொருத்தமாக இருக்கும்.

3

ஜனவரி 3ந்தேதி புதன்கிழமையன்று உலகத் தமிழ்க் கருத்தரங்கு ஆரம்பமாயிற்று. அன்று ஏராளமான நிகழ்ச்சிகள்.

காலை 9 மணிக்குப் பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் கலைக்காட்சியைச் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்

சாரியார் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருந்த சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவைத் தமிழக முதல்வர் அண்ணா திடீரென ரத்துச் செய்தார்.

பிற்பகலில் உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலமும் மாலையில் கடற்கரையில் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழாப் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

கலைக்காட்சி மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. சுதந்திரா கட்சிப் பிரமுகர் திரு. சா. கணேசனும் தமிழக அரசாங்கத்தின் தொல்பொருள்துறை இயக்குநர் திரு. இரா நாகசாமியும் கலைக்காட்சியின் சிறப்புக்கு முழுப்பொறுப்பாளிகள். பார்த்தவர்கள் அனைவரும் கலைக்காட்சியை ஒருமுகமாகப் பாராட்டினார்கள். பத்திரிகைகள் அனைத்தும் மனமாரப் புகழ்ந்து எழுதியிருந்தன. தமிழ்க் கருத்தரங்கின் சிறப்புக்கு மிகவும் இன்றியமையாத முக்கிய அம்சமாக இக் கலைக்காட்சி திகழ்ந்தது.

1966-ம் ஆண்டில் மலேசியாவிலும் கலைக்காட்சி ஓரளவுக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்காகத் தமிழகத்திலிருந்து காட்சிப் பொருட்களைக் கப்பலில் கொண்டு வந்து இங்கு அவற்றைக் காட்சியில் வைப்பதற்கு திருவாளர்கள் சா. கணேசன், இரா. நாகசாமி ஆகிய இருவரும் அரும்பாடுபட்டதையும் நாம் மறப்பதற்கில்லை. கோலாலம்பூர் புதிய இடமாதலாலும் இங்கு உள்ள ஏற்பாட்டாளர்களுக்கு கலைக்காட்சியின் தேவை அப்போது அத்துணை புரியாமற்போனதாலும் கருத்தரங்குக கலைக்காட்சி இங்கு அரை குறைப் பிரசவமாகவே அமைந்தது. ஆனால் இக்குறைபாடு எதற்கும் இடமின்றித் தமிழகக் கணகாட்சி அற்புதமாக அமைந்தது.

இரண்டு மணி நேரம்

கலைக்காட்சியைத் திறப்பு விழா அன்று முழுமையாகப் பார்க்க முடியவில்லை. பின்னர் ஒருநாள் இரண்டு மணி நேரத்திற்குமேல் சுற்றிப் பார்த்தேன். இரண்டு மாதம் பார்த்தால்கூட அதனை மனநிறைவோடு பார்த்து முடித்துவிட முடியாது. அத்துணை கலைச் செல்வங்களையும் நின்று நிலைத்து நினைத்துப் பார்க்கப் பல மாதங்களைச் செலவிட்டால்தான் மனம் முழுமையாக நிறைவடையும்.

தமிழ்க்கலையின் எல்லாப் பகுதிகளுக்கும் காட்சியில் இடமளித்திருந்தார்கள். சிற்பங்களும் சித்திரங்களும் பழமையையும் புதுமையையும் தெளிவாகச் சித்தரித்துக் காட்டிக்கொண்டிருந்தன.

சித்த மருத்துவப் பகுதி கலைக்காட்சியில் பெரிய இடத்தைப் பிடித்துக்கொண்டது. அங்கு சித்த வைத்தியர்கள் சித்த மருத்துவத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிக்கல் கோவிலைச் சேர்ந்த மூன்று தங்க வாகனங்களையும் காட்சியில் வைத்திருந்தார்கள். அந்தத் தங்க வாகனங்கள் 14 காரட் தங்கக் கட்டுப்பாடு வருவதற்கு நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே 21 காரட் தங்கத்தில் செய்யப்பட்டவை என்று வாகனங்களுக்குப் பக்கத்தில் இருந்தவர் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

தங்க வாகனத்தோடு வெள்ளி ரதம், மாதிரித் தேர் முதலியவற்றையும் மிகவும் அரும்பாடுபட்டுக் கலைக் காட்சியில் கொண்டு வந்து நிறுத்தியிருந்தார்கள்.

தமிழகக் கோவில்களில் மூர்த்திகளுக்குப் பயன்படுத்தப்படும் விலையுயர்ந்த அணிகலன்களையும் காட்சியில்

காணமுடிந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஆண்டாளின் கொண்டையலங்காரத்தைக் காணக் கண்கோடி வேண்டும் என்று சொல்லலாம். நவரத்தின அணிகலன்களின் கண்காட்சியை மிகுந்த போலீஸ் பாதுகாப்போடுதான் பார்க்க நேர்ந்தது.

பழந்தமிழ் ஏடுகளும் செப்பேடுகளும் உள்ளத்தைப் பரவசப்படுத்தின. பூதக்கண்ணுடி வைத்துத்தான் அந்த ஏடுகளை நாம் படிக்க முடிகிறது. எழுத்துக் கூட்டிப் படிக்கலாமே தவிர அந்த ஏடுகளின் சாராம் சத்தை முழுமையாக அறிந்துகொள்ள நம்மால் முடியாது. ஏடுகளைப் படித்துப் பழக்கப்பட்ட பண்டிதர்கள், ஆராய்ச்சியாளர்களால்தான் அவற்றைப் படித்துணர முடியும். அச்சுப்பொறியில்லாத அந்தக் காலத்தில் இத் துணை ஏடுகளையும் எழுத்தாணி கொண்டு எழுதிய அசகாய சூரர்களின் ஆதிநாள் முயற்சியை என் உள்ளம் மனமாரப்பாராட்டியது. இப்போது இப்படி ஏடுகளில் எழுதக்கூடிய 'பொறுமை'யை எவரிடமும் எதிர்பார்க்க முடியாது.

தமிழ்த் தாத்தா சாமிநாத ஐயர்

பழந்தமிழ் ஏடுகளைத் தேடித் துருவிப் பொறுமையாகப் பல ஆண்டுகளாக ஆராய்ந்து பதிப்பித்து நமக்குக் கைக்கும் கருத்துக்கும் அடக்கமாக வழங்கியிருக்கும் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் போன்ற பெருமக்களும் அவர்தம் வழியில் நின்று இன்று ஏடுகளைப் பதிப்பித்து வருகிற சென்னை பண்டை ஏட்டுச் சுவடிக் கருவூலமும், தஞ்சை மகால் சரஸ்வதி நூலகமும் தமிழ் கூறு நல்லுலகத்தின் நன்றிக்குரியவை ஆகும்.

ஏட்டுச் சுவடிகளுக்குப் பக்கத்தில் புதிய தமிழ் வெளியீடுகளை வைத்திருக்கிறார்கள். அச்சுத் தேர் ஏறிக் கண்களைக் கவரும் பதிப்புக்களாகத் தமிழ் நூல்கள் ஆயிரக்கணக்கில் எல்லாத் துறைகளிலும் வெளிவந்திருக்கின்றன. ஜனநாயகத்திற்கேற்ப அறிவுப் பங்கீடு எல்லாருக்கும் எளிதில் கிட்டுவதற்கு அச்சு நூல்கள் அற்புதமாக உதவி வருகின்றன.

புத்தம்புதிய தமிழ் நூல்களை நான் வியந்து பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில் என் பக்கத்தில் நின்ற பெரியார் ஒருவர் 'எழுத்தெண்ணிப் படிக்கும் ஆழ்ந்த அறிவாளிகளை இன்று காண முடியாததற்கு இந்த அச்சு நூல்களே காரணம்' என்று குறிப்பிட்டார். ஓலையேடுகளின் காலத்தில் இலக்கியத்திற்கும் அறிவுச் செல்வத்திற்கும் இருந்த அருமை பெருமை இன்றைய மலிவுப் பதிப்புக்களால் மலிந்து போய்விட்டது என்று அவர் அழுத்தமுறச் சொன்னார். அவர் கருத்தை என்னால் மறுக்க முடியவில்லை.

அச்சு நூல்களின் மூலம் அறிவு வெகு வேகமாகப் பரவியபோதிலும் ஆழ்ந்த கல்வி குறித்து ஒரு விதமான அலட்சியமும் அக்கறையற்ற போக்கும் வளர்ந்துவருவதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். 'கையில்தான் புத்தகம் இருக்கிறதே, எப்பொழுது வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம்' என்றே பலரும் நினைக்கிறார்கள். அதனால் நுனிப்புல் மேய்கிற 'அறிஞர்கள்' பெருகி வருகின்றனர்.

சென்னைப் பொருட்காட்சியிலுள்ள மரச்சிற்பமான ஆறுமுகப் பெருமான் என்னைப் பெரிதும் கொள்ளை கொண்டது. 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட அச்

சிற்பம் இன்று செய்யப்பட்டதுபோல உயிர்க்களையோடு விளங்குகிறது. தமிழகத்தின் கலைப்பழைமைக்குக் கலைக் காட்சியில் குவித்து வைக்கப்பட்டிருந்த எண்ணற்ற சான்றுகளில் ஒன்று இது.

பாம்பு நாகசுரம்

பழந்தமிழ் இசைக் கருவிகளை ஒரு பகுதியில் வைத்திருந்தார்கள். அங்கே நாகசுரம் ஒன்று நெளியும் பாம்பு வடிவத்திலேயே செய்துவைக்கப்பட்டிருந்தது. திருவாரூர்க் கோவிலில் தந்தத்தில் செய்த நாகசுரத்தையும் கருங்கல்லில் செய்த நாகசுரத்தையும் பார்த்தேன். மற்ற நாகசுரங்களைப் போல அந்தக் கல் நாகசுரத்திலிருந்தும் நாதம் இனிமையாகப் பிறப்பதைச் செவியாரக் கேட்டு உலகத் தமிழ் அறிஞர்கள் மெய்மறந்து போனார்கள்.

அந்தக் கல்நாகசுரம் என் நினைவில் வட்டமிட்டுக் கொண்டிருந்த தருணத்தில் கலைக்காட்சியில் கண்ட பாம்பு நாகசுரம் என்னைப் பிரமிக்க வைத்துவிட்டது. கல் நாகசுரம், தந்த நாகசுரம் முதலியவை பழைமையானவை. திருவாரூர்க் கோவிலில் அவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், பாம்பு நாகசுரமோ புதிய தயாரிப்பு. அதனைச் செய்த குடந்தைக் கலைஞர் தன் பாம்பு நாகசுரத்தை ஊதிக்காட்டி என்னை மகிழ்வித்தார். தமிழரின் அபூர்வ கலைத் திறமை செத்துவிடவில்லை அது இன்னும் உயிரோடும் உணர்வோடும் வாழ்ந்து வருகிறது என்பதைப் பாம்பு நாகசுரம் மெய்ப்பிக்கிறது.

கலைக்காட்சியின் மற்றொரு பகுதியில் வைக்கப்பட்டிருந்த இன்றையத் தமிழகத்திலுள்ள புதிய ஓவியக் கலைஞர்களின் வண்ணப் படைப்புக்களைப் பார்க்கும்

போதும்தமிழ்க்கலை இன்னும் வாழும் கலையாகத் திகழ்வதை உணரமுடிந்தது. கண்காட்சியில் கம்பீரமாகநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணகி சிலையும் என் கருத்தை அரண் செய்தது. எங்கோ தோண்டியெடுத்த பழைய சிலைபோல அந்தப் புதிய சிலை உயிர்ப்பொலிவோடு காட்சியளிக்கிறது. இத்தகைய உயிர்ச் சிலைகளை செய்யும் அற்புதம் படைத்த சிற்பிகளுக்கு தமிழக அரசாங்கம் தனிச் சிறப்புக்களையும் பதவிகளையும் வழங்க முன் வர வேண்டும். அவர்களை இன்னும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் முனைய வேண்டும்.

சிறப்பான கையேடு

கலைக்காட்சியின் மற்றொரு சிறப்பு அதன் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் 'கையேடு' என்னும் மலராகும். 15 ரூபாய் விலையில் வெளியிடப்பட்டிருக்கும் இக்கையேடு ஒவ்வொரு நூலகத்திலும் இடம் பெறவேண்டிய கலைப் புதையலாக, கருத்துப் புதையலாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தொகை அகராதிபோலத் தமிழ்க் கலையுடன் தொடர்புள்ள பல செய்திகளை விரிவான முறையில் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். தமிழைப் பயில்வோருக்கு நல்ல மேற்கோள் புத்தகம் ஒன்று கிடைத்துவிட்டதென்றுதான் சொல்லவேண்டும்.

கலைக்காட்சி பெரிய சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். தலைக்கு ஒருரூபாய் கட்டணம் வைத்து அதன் மூலம் லட்சக்கணக்கில் பணத்தைத் திரட்டிக் கலைக் காட்சிக்காக அரசாங்கமோ கருத்தரங்கோ பணம் செலவிட அவசியமில்லாமல் 'லாபம்' காட்டியிருக்கிறார், கலைக்காட்சிக் குழுவின் தலைவர் திரு சா கணேசன்.

ஆகவே, அவரையும் திரு இரா. நாகசாமியையும் நேரில் பார்த்து என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்பினேன். அச்சந்தர்ப்பத்தில் திரு. நாகசாமியின் எதிர்பாராத விருந்துபசரிப்பும் கிடைத்தது. திரு. கணேசன் கலைக்காட்சியை ஒரு நிரந்தரக் காட்சியாக நிறுவுவதற்குத் தாம் எடுத்து வருகிற முயற்சிகளை என்னிடம் சொன்னார். யுனெஸ்கோ நிறுவனமும் இக் காட்சியை இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் பிறநாடுகளிலும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யவிருப்பம் தெரிவித்திருக்கிறது. 'எல்லாம் தமிழக அரசாங்கத்தின் தீர்மானத்தைப் பொறுத்திருக்கிறது' என்று திரு. கணேசன் குறிப்பிட்டார்.

தமிழ்க் கலைக்கும் பண்பாட்டுக்கும் நிலையான இருப்பிடமாக ஒரு கலைக்காட்சி தமிழகத்தின் தலை நகரத்தில் அமைவது மிகப் பொருத்தமாக இருக்கும். தமிழ்த்துறை ஆராய்ச்சிகளில் உலக அக்கறை தோன்றி இருக்கிற இத்தருணத்தில் இத்தகைய கலைக்காட்சி ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். தமிழ்க் கலையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதான ஒரு கலைக்காட்சியை நிறுவுவதற்கு இப்பொழுது சேகரிக்கப் பட்டிருக்கும் பொருட்களின் தொகுப்பு ஒரு நல்ல ஆரம்பமாகவும் இருக்கும். இவ்வகையில் திரு. கணேசன், நாகசாமி ஆகியோரின் ஆவல் நிறைவேறுவதற்குத் தமிழன்னை அருள் புரிவாள் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழில் பேசினர்

கலைக்காட்சிக்குக் கிடைத்த மற்றொரு வெற்றி சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு.

இலட்சுமண சுவாமி முதலியார் அதன் ஆரம்பவிழாவில் தமிழில் பேசியதாகும். திரு ஏ. எல். முதலியார் தமிழில் பேசியது இதுதான் முதல் தடவை என்று சென்னைப் பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன. பிரிட்டிஷ் காலனித்துவத்தின் நேர் வர்ரிசு என்று சொல்லத்தக்கவர் ஏ. எல். முதலியார். ஆங்கிலம் இல்லாவிட்டால் உலகம் குடி முழுகிப் போய்விடும் என்று கருதுபவர். கல்லூரியில் தமிழ் பாடமொழி ஆவதற்குப் பெரிய 'எதிரியாக' விளங்கி வருபவர்.

அத்தகைய ஆங்கிலப் பாதுகாவலரே தமிழில் சில வார்த்தைகள் பேசவேண்டிய அவசியத்தை உலகத்தமிழ் மாநாட்டுச் சூழ்நிலையும் கலைக்காட்சியின் நேர்த்தியும் உண்டாக்கி விட்டன. இப்பொழுது தமிழைப் பயிற்சி மொழி ஆக்குவதற்குத் தாம் எதிரி அல்ல என்று அவரே பேச ஆரம்பித்திருப்பது தமிழ் மொழியின் நற்காலமே ஆகும்.

உலகத் தமிழ்க் கருத்தரங்கை ஒட்டி இந்திய அரசாங்கம் வெளியிட்ட அஞ்சல் தலையில் இந்தி எழுத்துக்களைப் பொறித்தது சர்ச்சைக்கிடமான பெரிய விவகாரமாக வளர்ந்திருக்கிறது. கலைக்காட்சித் திறப்புவிழாவுக்குப் பிறகு சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு நடைபெற விருந்தது. அந்த விழா நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக தமிழகத்தின் முதலமைச்சர் அண்ணு அறிவித்தது, உலகத்தமிழ் அறிஞர்களுக்கு மட்டுமின்றி புதுடில்லிக்கும் பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

அஞ்சல் தலையில் தமிழ் எழுத்துக்கள் இடம் பெருமல் போனதற்குத் தமிழக அரசாங்கமே பொறுப்பு என்று

புதுடில்லி மந்திரி பழியைத் திருப்பிப் போட்டார். அதன் பிறகு நடந்த ஆராய்ச்சியில் தமிழக அரசாங்க அதிகாரி ஒருவர் தமிழ்க் கருத்தரங்குச் சின்னத்தின் தமிழ்ப் பகுதியை அனுப்புவதற்குப் பதில் ஆங்கிலப் பகுதிகளை புதுடில்லிக்கு அனுப்பிய 'தவறு' கண்டு பிடிக்கப்பட்டது. கடைசியில் தமிழக அரசாங்க அதிகாரியும் புதுடில்லி அதிகாரி ஒருவரும் இந்த தவற்றுக்குப் பொறுப்பாளிகள் என்று முடிவெடுத்தார்கள்.

சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு சம்மந்தமாகத் தமிழக அரசாங்கம் முன்கூட்டியே சற்று கவனத்தோடு நடந்து கொண்டிருந்தால் தமிழ் வாசகங்கள் சிறப்பு அஞ்சல் தலையில் பொறிக்கப்பட்டிருப்பது திண்ணம். தேவையில்லாத வாக்கு வாதங்களும் வளர்ந்திருக்க மாட்டா. மௌனம் சாதிக்க வேண்டிய தருமசங்கடமும் தமிழகத்தின் முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்காது.

கரைபுரண்டோடிய தமிழ் உணர்ச்சி வெள்ளப் பெருக்கில் கவனக் குறைவாக இச் சிறு குறை நேரிட்டு விட்டதென்றுதான் கருதவேண்டும்.

4

ஜனவரி 3ந் தேதி பிற்பகல் சென்னை மாநகரத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலம் அதனைக் கண்கொண்டு பார்த்தவர்கள் ஒவ்வொருவருக்கும் 'வாழ்வில் ஒரு திருநாள்' என்று சொல்லத்தக்க இன்பப் பேரனுபவமாகும்.

கண்கொள்ளாக் காட்சி என்று அடிக்கடி நாம் அலங்காரமாகச் சொல்வதுண்டு. அந்த ஊர்வலத்திற்கு மட்டுமே அந்தத் தொடர் நூற்றுக்கு நூறு விழுக்காடு பொருந்தும். நம் கண்களில் 'அடக்க' முடியாத அளவு இன்பம் விரிந்த பெருங்காட்சியாக அது அமைந்தது. கண்கள் பெற்ற பயனை அன்று பெற்றேன் என்று சொல்வதும் 'தமிழ் நாகரிகம்' என்னும் தொடரின் முழுப் பொருளை அன்றுதான் உணர்ந்தேன் என்று கூறுவதும் மிகையாது.

உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்ததுபோல் அலங்கார வாகன ஊர்வலம் நிகழ்ந்தது. பார்த்தவர்கள் எத்தனை பேர்? சென்னை ஏடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக எழுதியிருந்தன. 10லட்சம் என்று சில எழுதின—20 லட்சம் என்று சில குறிப்பிட்டன. சென்னை நகரத்தின் மக்கள் தொகையே 20 லட்சம். இதைத் தவிர தமிழ் நாட்டின்பல பகுதிகளிலிருந்தும் இலவசப் பேருந்துகளில் மக்களும் மாணவர்களும் சென்னைக்குத் திரட்டிக் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். தமிழகத்தின் தலைநகரின்மீது உலக நாடுகளின் அறிஞர்கள், இந்தியாவின் மற்ற மாநில அறிஞர்கள் ஆகியவர்களின் படையெடுப்புடன் தமிழகத்தின் உட்பகுதியிலிருந்தும் பலத்த படையெடுப்பு நிகழ்ந்திருந்த தென்றுதான் சொல்லவேண்டும். அப்படிப் பார்க்கும் போது ஊர்வலத்தைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்திற்கும் மிக அதிகமாகவே இருக்கவேண்டும்.

அடங்காத கூட்டம்

ஊர்வலம் சென்ற பாதை முழுவதிலும் கண்ணுக்கு அடங்காத கூட்டம்! எங்கு பார்த்தாலும் எந்த இடத்தி

லும் ஒரே ஜன நெரிசல்! தனிப் பேருந்து வண்டிகள் எங்களைச் சென்னை கலைக் கல்லூரிக்கு எதிரேயுள்ள தனிப் பந்தலுக்கு அழைத்துச் சென்றன. எங்களுக்கு எதிரே இருந்த மற்றொரு பந்தலில்தான் இந்திய அதிபர், தமிழக மாநில ஆளுநர், தமிழகத்தின் முதல்வர் முதலானோர் அமர்ந்து ஊர்வலத்தைக் கண்டனர். ஊர்வலத்தையும் அதனைக் காணவந்திருந்த மக்களின் உலக வலத்தையும் காணுகின்ற பேறு உலகத் தமிழ் மாநாட்டு அறிஞர்களுக்குக் கிட்டிற்று. இத்துணை நெரிசல்களுக்கு மத்தியில் உடலும் உள்ளமும் சிறிதும் நோகாமல் ஊர்வலத்தில் வந்த எல்லா வண்டிகளையும் கண்டோம், களிபேருவகை கொண்டோம்.

பூம்புகாரில் நிகழ்த்தப் பெற்ற நூற்றுக்கணக்கான பேருரைகள், பட்டிமன்றச் சொல்லாடல்கள், கவியரங்கங்களின் தமிழ்த் தேனூறு, நூற்றாண்டு விழா மண்டபத்தில், படிக்கப்பெற்ற நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், அவற்றின்மீது நடைபெற்ற கருத்துள்ள விவாதங்கள், சென்னை பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் நடைபெற்ற அற்புதமான கலைக்காட்சி—இத்தனையையும் விட இன்னும் ஏதுமிருந்தால் அத்தனையையும்விட ஆயிரம் பங்குசிறப்புமிக்கதாகத் தமிழ்மாநாட்டு அலங்கார பவனி விளங்கியது என்று சொல்வேன்!

பல உலகத் தமிழ் மாநாடுகளாலும் ஆயிரக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளாலும்கூடச் சாதிக்க முடியாத அற்புதமான அருஞ்சாதனையாக அந்த ஊர்வலம் என் உள்ளத்தில் ஒவ்வொரு விநாடியும் இன்ப உணர்வை எழுச்சி அலையைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் நிமிர்ந்து நின்றன. கூனிக் குறுகிய மனிதர்களையே காண முடியவில்லை. தமிழ் நெறிக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் பழைமைக்கும் உலகமே திரண்டு அஞ்சலி செலுத்திய அந்த வேளையில் நாங்கள் எல்லாம் கற்பனைச் சிறகடித்து யாரும் அண்டமுடியாத உயரத்தில் வான வெளியில் பறந்து கொண்டிருந்தோம்.

தமிழகத்தின் மாண்புமிகு அமைச்சர் கலைஞர் கருணாநிதியின் சொற்களில் சொல்ல வேண்டுமானால் 'அதனைக் காணக் காண அந்நாள் தமிழகத்தில் நாம் நடைபோடுகிறோம் என்ற உணர்வே ஒவ்வோர் தமிழ் மகனுக்கும்' ஏற்பட்டது. அந்நாள். என்பது பாண்டியர் சோழர் சேரர் ஆண்டிருந்த அந்நாள். தமிழ்மொழி. தமிழ் நாகரிகம். தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ்வாழ்க்கை முறை முதலியவற்றைச் சித்தரித்துக் காட்டும் 27 அலங்கார வண்டிகளைப் பாடாதிபதி எஸ். எஸ். வாசன் தலைமையில் அமைந்த திரைப்பட மேதைகள் குழு உருவாக்கியிருந்தது.

திருவள்ளுவர் கண்ட தமிழகம் வந்தது! திருப்பாவை பாடியதிருச்செல்வி ஆண்டாளைத்தரிசித்தோம். கண்ணகி வழக்குரைக்கும் காட்சியைக் கண்டோம்! முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, தமிழுக்குத் தலைகொடுத்த குமணன், ஔவைக்கு நெல்லிக்கனிகொடுத்த அதியமான், சொக்கநாதரின் நெற்றிக்கண்ணைக் கண்டும் அஞ்சாத புலவர் பெருமான் நக்கீரர், தமிழ்நீதிக்கு விளக்கமான ஆராய்ச்சிமணி, பண்டைத் தமிழகத்தில் தள்ளாத விளைச்சல் வளத்தைப் புலப்படுத்தும் யானை கட்டிப் போர

டித்த அழகான தென்மதுரை, முதலான காட்சிகளை ஒன்றுக்குப்பின் ஒன்ருகக்காண உள்ளம் பெருமிதத்தால் விம்மிற்று.

கோட்டைப்போரைச் சித்தரிக்கும் வண்டி தமிழ் வீரத்தையும், பூம்புகார் வாணிபம் தமிழரின் உலகளாவிய வாணிபத் தொடர்பையும் விளக்கின. தமிழ்மக்களின் இணையற்ற தமிழ்ப் பாசத்தை முரசு கட்டிலில் நித்திரை கண்ட மோசிகீரனாரும் தமிழ்ச் சிற்பக் கலையின் சிறப்பை மாமல்லபுரமும் அருமையாக அழகாக நினைவுறுத்தின.

நாகசுர இசைக்கலைஞர்கள் 16பேர் முதல் வண்டியில் தமிழகத்தின் மங்கல இசையை ஒலித்தார்கள். பொம்மலாட்டம், கரக ஆட்டம், காவடி ஆட்டம், பொய்க் கால்குதிரை ஆட்டம் முதலான தமிழ்க்கலைகளும் பவனி வந்தன.

தமிழ் மாநாட்டு ஊர்வலம் அத்துணை முழுமையாக தமிழ் நாகரிகத்தின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. ஏதையேனும் சேர்க்க விட்டு விட்டார்களா என்று என் உள்ளம் துருவித் துருவித் தேடிக் கொண்டிருந்தது. சீரு பாடிய உமறுப் புலவருக்கும் வள்ளல் சீதக்காதிக்கும் ஒரு வண்டி வழங்கியிருக்கலாமே என்று என் உள்ளத்தின் ஓரம் ஒலித்தது. முதலாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டைக் கூட்டிப் புதிய வரலாற்றை உண்டாக்கிய மலேசியாவுக்கு ஒரு வண்டியை அலங்கரித்து அதில் சோழ மன்னர்களின் வாரிசான நம் தேசத் தந்தையைக் கொலு வீற்றிருக்க வைத்திருக்கலாமே என்றும் என் மனதில் ஒரு நப்பாசை எழுந்தது. இலங்கைத தமிழரின் ஏற்றத்தையும் ஒரு வணடி ஏந்தி வந்திருக்கலாம. உலகத் தமிழ் மாநாடு அதனை ஒட்டிய ஊர்வலம் என்பதால் மற்ற நாடுகளிலும்

தமிழர்கள் வாழ்கின்றுர்கள், தமிழ் வாழ்கிறது என்னும் சிந்தனையை உண்டாக்கியிருக்கலாம். இக்கருத்துக்களை நான் ஒரு குறையாக அடுக்க நினைக்கவில்லை. ஏனெனில் ஊர்வலம் ஒச்சம் சொல்லமுடியாத அளவு அத்துணை துல்லிதமாக அமைந்திருந்தது.

எந்த வண்டி சிறப்பு?

ஒவ்வொரு வண்டியும் மிகவும் கருத்தோடும் கவனத்தோடும் உருவாக்கப்பட்டிருந்தது. வளரும் தமிழ்க் கலைஞர்களின் அற்புதச் சிற்பத் திறமையை அலங்கார வண்டிகள் மெய்ப்பித்தன. ஒவ்வொரு வண்டியும் மற்றவற்றை மிஞ்சும் விதத்தில் சிறப்பாக இருந்தது. எந்த வண்டி சிறப்பு, எது சிறப்பில்லை என்று கூறமுடியாது. பார்க்குந்தோறும் பவனிவந்த ஒவ்வொரு வாகனமும் பிரமிப்பையும் பயபக்தியையும் உண்டாக்கிக் கொண்டிருந்தன.

வண்டிகளுக்கு மத்தியில் நல்ல இடைவெளி, அமைதியாகக் கண்களால் பருகுவதற்கும் தனித்தனி இசையைச் செவிமடுப்பதற்கும் எவ்வித இடையூறும் இன்றி ஊர்வலம் திட்டமிடப்பட்டிருந்தது. அலங்கார வண்டிகளின் செறிவையும் திட்பத்தையும் கலையழகையும் நன்கு ஆற அமர மனத்தில்கொள்ள முடிந்தது. 'சலிப்பு' ஏற்படாதபடி இடையிடையே சீரணித் தொண்டர்கள், மாணவர் குழாம் மாதர் குழாம் அணிவகுப்பு விதவிதமான உடைகளில நடந்தது. அலங்கார வண்டிகளின் சிறப்பை மேலும் எடுப்பாக எடுத்துக் காட்டுவதற்கு வண்டிகளுக்கு இடையே அமைந்த அணிவகுப்பு உதவிற்று என்று சொல்லவேண்டும்.

இத்துணை நேர்த்தியாக குறை ஏதும் சொல்லமுடியாதபடி ஊர்வலத்தைத் தயாரித்த தமிழகத்தின் படாதிபதிகளை எத்துணை பாராட்டினாலும் தகும். நாம் எதிர்பார்த்த அத்தனையும் நாம் நினைத்த அத்தனையும் ஊர்வலத்தில் இருந்தன. இல்லை என்று சொல்ல ஏதுவுமே இல்லை.

இந்திய அதிபர் டாக்டர் ஜாகீர் உசேன் 'என் வாழ்நாளில் இத்துணை சிறப்பான ஊர்வலத்தைப் பார்த்ததில்லை' என்று பூரிப்போடு கூறியிருக்கிறார். இந்தியக் குடியரசுதின அணிவகுப்புக்களையும் மிஞ்சுகிற விதத்தில் தமிழ் மாநாட்டு பவனி அமைந்துவிட்டதென்று புதுடில்லியிலிருந்து வந்திருந்த அன்பர்கள் கூறினார்கள். இந்திய அதிபர் பார்த்தார்! தமிழகத்தின் முதல்வர் அண்ணா பார்த்தார்! நூற்றுக் கணக்கான உலகத் தமிழறிஞர்கள் பார்த்தார்கள்! தமிழகத்தின் லட்சக்கணக்கான மக்கள் பார்த்தார்கள். அத்தனை பேருடைய மனமும் நிறைந்தது! பாமரர்களுக்கு மட்டுமன்றிப் படித்த மேதைகளுக்கும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக ஊர்வலம் திகழ்ந்தது!

உலகத் தமிழறிஞர்களில் பலர்-மேனாட்டவர்கள், ''இது ஆயுட்கால அனுபவம்'' என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டார்கள். இனி ஒருமுறை இத்தகைய ஊர்வலத்தை நம் வாழ்நாளில் காணமுடியாது என்று அனைவரும் ஒருமுகமாகக் கருத்துரைத்தார்கள்.

எவ்வளவு எழுதினாலும் ஊர்வலத்தின் சிறப்பை உங்களுக்கு முழுமையாக உணர்த்த முடியாது. அச்சிறப்பின் ஒரு துளியைத்தான் நான் உங்களுக்குப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறேன்.

கடற்கரையில் தொடக்க விழா

அன்று மாலை கடற்கரையில் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்கவிழா பொதுக்கூட்டம் சிலைத் திறப்புவிழா நடந்த அதே மேடையில் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் முன்னிலையில் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் இந்திய அதிபர் டாக்டர் ஜாகிர் உசேன் நிகழ்த்திய உரை தமிழ்மொழியின் பழமைக்கும் பெருமைக்கும் நற்சான்ருக அமைந்தது. 'தமிழ் மாண்புமிக்கது. இந்தியரின் வடக்கு—தெற்கு தொடர்புகளை இணைத்துள்ளது. வெளிநாடுகளிலும் வழங்குவதால் தமிழ் அனைத்துலக மொழியாக இருக்கிறது' என்று இந்திய அதிபர் குறிப்பிட்டார்.

'தென்கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த பண்பாட்டின் ஓர் களஞ்சியமாகத் தமிழ் விளங்குகிறது. மலாயா பல்கலைக் கழகம், மலேசிய அரசாங்கம் ஆகியவற்றின் ஆதரவில் முதலாவது உலகத்தமிழ்க் கருத்தரங்கு கோலாலம்பூரில் நடைபெற்றதில் வியப்பில்லை' என்று டாக்டர் ஜாகிர் உசேன் தம் உரையில் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டினுர். மலேசியாவின் முதல் முயற்சிக்கும் நமது பகுதியில் தமிழ்ப்பண்பாடு வகித்துவருகிற முதன்மைக்கும் ஓர் அழுத்தமான அங்கீகாரத்தை இந்திய அதிபரின் உரைகொண்டிருந்தது எனக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது.

தமிழின் அருமை பெருமைகளைத் தமது நீண்ட உரையில் அளவிட்டுக் காட்டுவதற்கு இந்திய அதிபர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். அதே சமயத்தில் தமிழரின் பரந்த பண்பாடுகளையும் அனைத்துலக மனப்

பான்மையையும் அறிவுறுத்தி இன்றைய தமிழகத்தின் கொந்தளிப்பான அரசியலில் ஒரு புதிய திருப்பம் காணும் தம் விருப்பத்தையும் அவர் புலப்படுத்தத் தவறவில்லை. தேசியக்கவி பாரதியின் பெயரால் அவர் தமிழகத்திற்கு விடுத்த உருக்கமான வேண்டுகோள் மிகவும் பொருள் பொதிந்ததாகும்.

யாரும் எதிர்பாராதவிதத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ் மாநாட்டுப் பேராளர்களை வரவேற்று உரை நிகழ்த்தினர். தமிழகத்தில் கடைப்பிடிக்கப்படும் அரசியல் நாகரிகத்தின் முதிர்ச்சியாகக் காமராஜுக்கு வழங்கப்பட்ட இந்த இடம் அமைந்தது.

'இந்த மாநாடு இரண்டாவது மாநாடு. முதல் மாநாடே இங்கு நடைபெற்றிருக்கவேண்டும். ஆனாலும் கடல் கடந்து வாழும் நம் சகோதரர்கள் அந்த முயற்சியை எடுத்து வெற்றிகரமாக முதலாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி முடித்துவிட்டார்கள்,' என்று திரு. காமராஜ் மலேசியாவின் வெற்றியைக் குறிப்பிட்டதைக் கேட்கும்போது மலேசியாவிலிருந்து சென்ற பேராளர்களுக்கு ஆனந்தமாக இருந்தது.

5

உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழாவான கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் தமிழகத்தின் முதல்வர் அண்ணா நிகழ்த்திய உரை மிக நீண்ட உரையாக அமைந்து, குறிப்பாக கூடியிருந்த அறிஞர் பெருமக்களைச்

சற்று பொறுமையிழக்கச் செய்துவிட்டது என்று சொல்வதில் தவறில்லை.

தமிழகத்தில் பேச்சுக்கலை அற்புதப் பெருங்கலையாக வளர்ந்திருக்கிறது என்று கூறுவது மிகையாகாது. அதுவும் பேச்சுக்கலையின் முடி மன்னரான அண்ணவின் யுகத்தில் ஆயிரக்கணக்கில் தம்பிமார்கள் சண்டப் பிரசண்டப் பேச்சாளர்களாக விளங்கி வருவதில் வியப்பில்லை. ஆனல் அர்த்தமில்லாமல் கவைக்குதவாத சொற்களை அழகாக அடுக்கி அலங்காரம் செய்கிற பேச்சுக்கலை தான் அங்கு அதிகம் பெருகியிருக்கிறது. தமிழகத்தின் மக்கள் ஒவ்வொரு நாளும் இத்தனை பேச்சுக்களையும் எப்படிப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்று அடிக்கடி நான் எனக்குள் கேட்டுக் கொண்டேன்.

பொதுக் கூட்டங்களுக்கு லட்சக்கணக்கில் மக்கள் கூடுகிருர்கள். ஐந்து மணி நேரம் அதிகமாகவே எனக்குப்பட்டது.

'திரைப்படம் பார்ப்பது போலப் பொதுக்கூட்டங்களும் சொற்பொழிவுகளும் மக்களுக்கு இங்கு ஒரு நல்ல பொழுதுபோக்காக மாறிவிட்டன. திரைப்படமாவது காசு கொடுத்துப் பார்க்கவேண்டும். பொதுக்கூட்டங்களுக்கு அதுவும் தேவையில்லை. அதனுல்தான் எந்தப் பொதுக்கூட்டத்திற்கும் மக்கள் திரண்டு வருவது சர்வசாதாரணமாகிவிட்டது.'

தமிழகத்தின் உண்மை நிலை இதுவென்ருல் நாம் பெரிதும் வருந்த வேண்டியவர்களாகவே இருக்கிறேம். பேச்சில் பெரும் பகுதிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் தலைவர்களையும் மந்திரிகளையும் ஒரு புறமும்

பொதுக் கூட்டங்களைப் பொழுதுபோக்காகக் கருதி அரிய நேரத்தை வீணுக்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு மக்களை ஒருபுறமும் எண்ணி நாம் பரிதாபப்படவே வேண்டும். இத்தகைய பேச்சு மேடைகளும் அதனை மொய்த்து நிற்கும் ரசிகர் கூட்டமும் உண்மையான முன்னேற்றத்தைக் காண விரும்பும் எந்த ஒரு நாட்டுக்கும் பெரிய தடைக்கல் என்பதே என் கருத்து.

உலகத் தமிழ் மாநாட்டுப் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளும் தமிழகத்தின் பெரும் பேச்சுக்கு எடுத்துக்காட்டாக அமைந்ததில் வியப்பில்லை.

நினைவு வந்தது போலும்!

'வரவேற்பு இதழுக்குப் பிறகு பல பேச்சுத்களைக் கேட்க நேர்ந்ததால் மாநகராட்சி வரவேற்பில் யாது கூறினுர்கள் என்பதையே மறந்துவிட்டேன்' என்று இந்திய அதிபர் குறிப்பிட்டது அடுக்கடுக்காகத் தமிழகத்தில் நிகழும் அர்த்தமற்ற பேச்சுக்களுக்கு மறைமுகமான ஒரு சூடாகவே எனக்குத் தோன்றிற்று.

திருக்குறள் ஆராய்ச்சி

பொதுக்கூட்டத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று, சென்னை, அண்ணுமலை, மதுரை பல்கலைக் கழகங்களுக்குத் திருக்குறள் ஆராய்ச்சிக்கு நிதி வழங்கியதாகும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இந்த நிதியை வழங்கும் சடங்கில் மாண்புமிகு மந்திரிகள் கருணுநிதி, மதியழகன், முத்துச்சாமி ஆகிய மூவரும் பேசினுர்கள். நல்ல வேளையாக நிதியைப் பெற்றுக்கொண்ட மூன்று துணைவேந்தர்கள் பேச்சுக் கச்சேரி நடத்தவில்லை. அந்த மூவருக்

கும் சேர்த்து அண்ணுமலே பல்கலேக்கழக இணேவேந்தர் ராஜா சர் முத்தையா செட்டியார் நன்றியுரை நிகழ்த்தினுர். ராஜா அவர்கள் தமது உரையில் உருப்படியான சில யோசனேகளே வெளியிட்டதோடு மலேசியாவில் நடந்த முதல் கருத்தரங்கைப் பற்றியும் மறவாமல் குறிப்பிட்டது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

திருக்குறள் ஆராய்ச்சிக்கு ஒன்பது லட்சம் ரூபாய் வழங்கியது பற்றியும் புலவர் பெருமக்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. மூன்று பல்கலேக்கழகத்திலும் திருக்குறள் ஆராய்ச்சி தேவையா என்று கேட்கப்பட்டது. ஒரு பல்கலேக்கழகம் இதற்குப் போதும், மற்ற பல்கலேக் கழகங்களில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற ஆராய்ச்சிக்கு இந்நிதியை வழங்கியிருக்கலாம் என்னும் கருத்தைப் பல அறிஞர்கள் கூறினுர்கள். தமிழக அரசின் செவிகளுக்கு இக்கருத்துக்கள் எட்டியிருப்பது திண்ணம். ஆகவே காலங்கடப்பதற்கு முன்பு ஒவ்வொரு பல்கலேக்கழகமும் மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சித் துறைகளேத் திட்டவட்டமாக தெளிவுபடுத்தத் தமிழக அரசாங்கம் ஏற்பாடு செய்யுமென்று நம்புகிறேன்.

திருக்குறள் ஆராய்ச்சிக்கு நிதி வழங்கிய பிறகு யுனெஸ்கோவின் பொதுச்செயலாளர் திரு மால்கம் ஆதிசேஷையா தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசினுர். உலக அரங்கத்தில் பெரிய பதவியை நீண்டகாலமாக வகித்து வருகிற ஆதிசேஷையா தமிழ் மொழியின்மீது கொண்டிருக்கும் தனிப்பற்று எல்லாரையும் வியப்பில் ஆழ்த்திற்று. நிலே உயர்ந்தவுடன் தம் சொந்த மொழியையும் பண்பாடுகளேயும் மறந்துவிடுகிற பெரியவர்களுக்கு மத்தியில்

திரு. ஆதிசேஷையா மற்றவர்களும் பின்பற்றத் தக்க சிறப்பு மிக்கவராகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் தோற்றுவிக்கப்பட இருக்கும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையத்திற்கு யுனெஸ்கோ நன்கொடை கொடுக்க முன் வந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களை உலகப் பேரிலக்கியங்களின் வரிசையில் இணைத்து உலக மொழிகளில் அறிமுகப் படுத்துகிற நற்பணியையும் யுனெஸ்கோ இனிமேல் முனைப்பாகச் செய்யுமென்று எதிர்பார்க்கலாம். நாலடியார், சீவக சிந்தாமணி, திருக்குறள் ஆகிய நூல்களை பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பாணியம், அரபு முதலான மொழிகளில் ஆக்க யுனெஸ்கோ திட்டமிட்டிருப்பதாகவும் திரு. ஆதிசேஷையா அறிவித்தார்.

மாநாட்டு மலர்

உலகத் தமிழ் மாநாட்டு மலர் முப்பது ரூபாய் விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. நயமான ஆர்ட் தாளில் மிகவும் உயர்தரமான முறையில் உருவாக்கப்பட்டிருக்கும் அந்த மலரைத் தமிழகத்தின் ஆளுநர் (கவர்னர்) திரு. உஜ்ஜல் சிங் வெளியிட்டு உரை நிகழ்த்தினர்.

அதன் பின்னர், வாழ்த்துரை நல்குகிற வாய்ப்பு இலங்கையின் ஊராட்சி அமைச்சர் திருச்செல்வத்திற்குக் கிடைத்தது. தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசிய அவர், தமிழ் வளர்ச்சிக்கு இலங்கை ஆற்றி வருகிற பணிகளையும் குறிப்பாக இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் பாடம் போதிக்கப்படுவதையும் எடுத்துச் சொன்னர்.

அடுத்து, மலேசியாவின் சார்பில் மலேசியக் குழுவின் தலைவர் செனட்டர் டத்தோ ஆதிநாகப்பன் வாழ்த்துரை வழங்குவார் என்று கடற்கரையில் கூடியிருந்த லட்சக் கணக்கான மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். சிறப்புப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் மலேசியாவின் சார்பில் மந்திரி துன் சம்பந்தன் வாழ்த்துரை வழங்குவார் என்று அச்சிடப்பட்டிருந்தது. ஆகவே, அந்த இடத்தில் துன் சம்பந்தனுக்குப் பதில் டத்தோ ஆதிநாகப்பன் பேசுவார் என்றுதான் மலேசியக் குழுவினர் உட்பட அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்த இடம் காலியிடமாக அமைந்து பெரிய ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் மலேசியப் பேராளர்களுக்கு உண்டாக்கிவிட்டது.

உலகத் தமிழ்க் கருத்தரங்கு என்னும் எதிர்கால நோக்குள்ள புரட்சிகரமான ஒரு மாபெரும் திட்டத்திற்கு வழி வகுத்த நாடு மலேசியா. தமிழகம் இதுபற்றிச் சிந்திப்பதற்கு முன்பே இதனைப்பற்றி சிந்தித்து மகத்தான முறையில் தமிழ்மொழிக்கு ஓர் உலக அரங்கத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் மலேசியத் தமிழ் மக்கள், மலேசிய அரசாங்கமும் மலாயா பல்கலைக் கழகமும் இம் மாபெரும் முயற்சிக்கு உறுதுணையாக நின்றதையும் மறப்பதற்கில்லை. தமிழக அரசாங்கத்திற்கும் சென்னையில் உலகத் தமிழ்க் கருத்தரங்கை நடத்தியவர் களுக்கும் இந்த உண்மைகள் அனைத்தும் நன்கு தெரியும். இன்று தமிழக அரசின் கல்வி அமைச்சராக இருந்துவரும் மாண்புமிகு நெடுஞ்செழியன் முதலாவது கருத்தரங் கிற்குப் பக்தவத்சலனார் தலைமையில் மலேசியாவுக்கு வந்து சென்றவர். சென்னையில் கருத்தரங்கின் முழுப் பொறுப்பையும் அவர் நேரடியாகக் கவனித்துக்கொண்

டிருந்தார். அப்படியிருக்கும்போது மலேசியக் குழுவின் தலைவருக்குக் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் இடம் வழங்கவிட்டுப் போனது அதிர்ச்சியூட்டுவதாகவே எங்களுக்கு அமைந்தது.

டத்தோவின் அறிக்கை

மலேசியக் குழுவினரின் ஏமாற்றத்தை மக்களுக்குப் புலப்படுத்தும் ஓர் அறிக்கையை டத்தோ ஆதிநாகப்பன், பொதுக் கூட்டத்திற்கு மறுநாள் பத்திரிகைகளுக்குக் கொடுத்திருந்தார். அந்த அறிக்கையைத் தமிழகத்தின் பத்திரிகைகள் தக்க முக்கியத்துவத்தோடு வெளியிட்டிருந்தன. அதனைப் பார்த்த தமிழக மக்களுக்கெல்லாம் மலேசியக் குழுவின் மீது ஓர் அனுதாபம் பிறந்தது. உண்மையில் அந்த அறிக்கை வந்த பிறகுதான் மலேசியாவில் இருந்து ஒரு பெரிய குழு வந்திருக்கிறதென்னும் செய்தி கூடத் தமிழகத்தில் பலருக்குத் தெரிந்ததென்று சொல்லலாம்.

எங்களைச் சந்தித்த எல்லாரும் 'துக்கம்' விசாரிப்பது போல் எங்களுக்காக அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்தார்கள்.

'மந்திரி துன் சம்பந்தன் அவர்கள் வந்திருந்தால் வாழ்த்துரைக்கு இடம் கிடைத்திருக்கும். அந்த இடம் மந்திரிக்கு மட்டுமே. அங்கு மற்றொருவரைப் பேச வைப்பது முடியாத காரியம்' என்று கூறப்பட்ட விளக்கங்கள் கவைக்குதவாதவை.

அச்சிட்ட நிகழ்ச்சி நிரலில் ஏற்கனவே இடம் பெறாத—மந்திரி அந்தஸ்து இல்லாத பலர் அன்றையப் பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்

போது டத்தோ ஆதிநாகப்பன் அவர்களுக்கு மட்டும் கதவை ஏன் அடைத்திருக்க வேண்டும்?

கருத்தரங்கு அமைப்பாளரான திரு. ஏ. சுப்பையா, 'கடற்கரைப் பொதுக்கூட்டம் தமிழக அரசாங்கத்தின் ஏற்பாடு. எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை' என்று தெரிவித்து விட்டதாகக் கூறினார்கள். பிறகு அமைச்சர் நெடுஞ்செழியனிடமும் டத்தோ வந்திருக்கும் தகவல் கூறப்பட்டது.

"அப்படியா? அவரை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்று அமைச்சர் அவர்கள் பதிலளித் திருக்கிறார்கள். அத்துடன் 'கதை' முடிந்துவிட்டது.

கருத்தரங்கு ஏற்பாட்டாளர்களுக்கும் அமைச்சர் நெடுஞ்செழியனுக்கும், மந்திரி துன் சம்பந்தனுக்குப்பதில் டத்தோ ஆதிநாகப்பன் குழுவுக்குத் தலைமை ஏற்றுவரு கிற தகவல் முன்கூட்டியே தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் 'ஏனோதானோ' வென்று, யார் வந்திருக்கிறார்கள் என் பதே தங்களுக்குத் தெரியாத மாதிரி தமிழக அரிசினரும் கருத்தரங்கைக் கூட்டியவர்களும் நடந்துகொண்டதும் மலேசியக் குழுவின் முகத்தில் கரியைப் பூசியதும் அறி யாமல் தெரியாமல் நடந்துவிட்ட காரியமென்று நான் நினைக்கவில்லை. வேண்டுமென்றே திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட புறக்கணிப்பு என்றே நான் இதனைக் கருது கிறேன்.

மலேசியக் குழுவின் தலைவர் யார், எங்கே தங்கி யிருக்கிறார் என்று தேடிப்போய் வாழ்த்துரை வழங்கும் படி அவரிடம் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். அவ் வாறு தாங்களாகவே செய்யாமலும் நினைவூட்டிய பின்ன

ரும் இடமளிக்க மறுத்த 'பெருந்தன்மை' பெரிதும் வேதனை தருவதாகும்.

கருத்தரங்கு முடிகின்ற தருணத்தில் மலேசியக் குழுவின் சார்பில் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு விருந்து வழங்கப்பட்டது. அவ்விருந்திற்கு திரு. நெடுஞ் செழியன் உட்பட பல அமைச்சர்கள் வந்திருந்தனர். அவ் விருந்தில் அமைச்சர் நெடுஞ்செழியன் மலேசியாவின் முதல் கருத்தரங்கு முயற்சிகளை வானளாவப் புகழ்ந்து பேசினர். மலேசியா காட்டிய வழிகளில்தான் தமிழகத் தில் எல்லா ஏற்பாடுகளும் சற்று விரிவாகச் செய்யப்பட் டிருப்பதாகவும் மனமாரக் குறிப்பிட்டார். ஏதாவது தவறு நிகழ்ந்திருந்தால் மனக்குறை ஏற்பட்டிருந்தால் பெரிய கல்யாண அமளியில் தற்செயலாக நிகழ்ந்து விட்ட ஒன்ருகக் கருதி அதனை மன்னித்துவிடவேண் டும்' என்றும் கேட்டுக்கொண்டார். மலேசியப் பேராளர் களுக்கும் அவ்விருந்துக்கு வந்திருந்த இரு நூற்றுக்கு மேற்பட்ட பெருமக்களுக்கும் அமைச்சர் நெடுஞ்செழி யனின் பேச்சு சற்று ஆறுதலை அளித்தது. மலேசியா வின் மனப்புண்ணைச் சிறிது ஆற்றியதென்றும் சொல்ல லாம்.

பேச வேண்டிய இடம்

ஆனல் கடற்கரைக் கூட்டத்தில் பத்து லட்சம் பேர் கூடியிருந்த மக்கள் கடலில் இந்த வார்த்தைகளை மாண்புமிகு நெடுஞ்செழியன் கூறியிருந்தால் மலேசியா வுக்கு உண்மையிலேயே அது பெருமை செய்ததாக இருக்கும். மலேசியாவைப் புகழ்ந்து பேசியிருக்கவேண் டிய இடம் கடற்கரைப் பொதுக்கூட்டம். ஆனல் அந்தக் கூட்டத்தில் நம் டத்தோவுக்கு ஐந்து நிமிஷப் பேச்சுக்குக்

கூட வாய்ப்பு வழங்கவில்லை. அதுமட்டுமன்றி திரு. நெடுஞ்செழியனும் அக்கூட்டத்தில் மலேசியாவின் முதல் முயற்சிகளை அங்கீகரிக்கிற மாதிரி சில பாராட்டு களைப் பேசாதது பெரிதும் ஏமாற்றமாக இருந்தது. இறுதி யில் பேசிய பேரறிஞர் அண்ணா அவர்களாவது தம்பி விட்ட குறையை நிறைவுபடுத்துவார் என்று எதிர்பார்த் தேன். அவருடைய பேச்சும் மலேசியாவுக்குப் பெரிய ஏமாற்றத்தையே உண்டாக்கிற்று.

'மலேசியா முதல் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது' என்று காமராஜ் குறிப்பிட்டதைத் தொட்டுப் பேசிய அண்ணா இதனை மட்டும்தான் தமது நெடிய உரையில் கூறினார்; காங்கிரஸ் தலைவர் காமராஜ் சொன் னபடி முதலாவது உலகத் தமிழ் மாநாட்டையே சென்னை யில் நடத்தி இருக்க வேண்டும். என்ன காரணத் தினாலோ மலேசியாவில் உள்ளவர்கள் முந்திக் கொண் டார்கள். எப்போதுமே அண்ணன் அக்கறை காட்டா விட்டாலும் தம்பி மிகுந்த அக்கறையுடன் இருப்பதைக் குடும்பங்களில் காணலாம்.'

மலேசியாவில் முதல் மாநாடு நடந்தது பற்றி அண்ணா தமது உரையில் ஐந்து நிமிஷமாவது பேசுவார், வழிகாட்டிய மலேசியத் தமிழ் மக்களை மனமாரப் புகழ் வார், நமது பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் உலகத் தமிழ்க் கருத்தரங்கைத் திறந்து வைத்து நிகழ்த்திய உரையைப் பற்றிப் பேசுவார், மலேசிய அர சாங்கம் தமிழின் எதிர்கால நல்வாழ்வுக்கு மனமாரத் தந்த ஆதரவைப் பாராட்டுவார், மலாயாப் பல்கலைக்கழக இந்தியப் பகுதியின் எதிர்கால நோக்குள்ள பணிகளை வர

வேற்பார் என்றெல்லாம் நான் ஆவலோடு எதிர்பார்த்தேன்.

எவ்வளவோ பயன்

நமது பெருமதிப்புக்குரிய பேரறிஞர் அண்ணு அவர்கள் அவ்வாறு சில வார்த்தைகள் மலேசியாவைப் புகழ்ந்து பேசியிருந்தால் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அவருடைய சொற்களுக்கு இயல்பாக இருக்கும் மதிப்பின்படி நமக்கு மலேசியாவிலுள்ள நமக்கு, அதனுல் எவ்வளவோ பயன் விளைந்திருக்கும்! தூரத் தொலைவில் தமிழ் மொழியை வளர்க்கும் நமது முயற்சிகளை தமது சில பாராட்டுக்களின் மூலம் அண்ணு பலப்படுத்தியிருக்க முடியும். ஆனுல் 'அண்ணன், தம்பி' என்னும் அளவோடு முதல் மாநாடு நடத்திய மலேசியாவுக்கு அண்ணுவின் பாராட்டு முடிந்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

நம் டத்தோவுக்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்பு வழங்காத ஏமாற்றத்தோடு, அண்ணுவின் பேச்சிலும் மலேசியாவின் முன்னேடி முயற்சிக்கு அங்கீகாரம் கிடைக்காதது மேலும் பெரிய ஏமாற்றமாக அமைந்தது.

தமிழக ஏடு ஒன்றில் 'நேசன்' பிரதிநிதியான திரு. ஜி. சி. இளங்கோ மாநாட்டுக்கு முன்பு ஒரு பாட்டு எழுதியிருந்தார். அந்தப் பாட்டில் நமது பிரதமர் துங்குவுக்கு தமிழகம் சிலை எடுத்திருந்தால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். இல்லையென்ருலும் அவருடைய உருவப் படத்தையாவது தொடக்க விழாவில் திறந்து வைக்க வேண்டுமென்று கூறியிருந்தார்.

தமிழக அரசும் மாநாட்டைக் கூட்டியவர்களும் இது பற்றி எள்ளளவும் கருத்தைச் செலுத்தாததோடு மலேசி

யாவை மனமாரப் பாராட்டுவதற்குக்கூட கல்யாண அமளியில், மறந்துவிட்டார்கள்.

தமிழகத்தில் 'தமிழ் வாழ்க' என்று உரக்கக் கூவு வதும் தமிழ் விழா நடத்துவதும் தமிழ் மொழியை வளர்ப் பதும் எளிதான காரியம், இயல்பான காரியம். ஆனால் மலேசியா, இலங்கை போன்ற பல்வேறு சமூகங்கள் வாழுகிற சேய் நாடுகளில் தமிழ் வளர்க்கிற முயற்சி அரிய முயற்சி ஆகும்; தமிழகத்திற்கு முற்றிலும் மாறு பட்ட சூழ்நிலையில் இங்கு தமிழ் வளர்க்கின்ற முயற்சி களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த அடிப் படையில் பார்த்தால்தான் இலங்கையிலும், மலேசியா விலும் தமிழன்னைக்குச் செய்யப்படுகின்ற தொண்டின் அருமையை உணரமுடியும். உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டிய தமிழகத்தின் அரும்பெரும் தலைவர்கள் தமிழகத் திற்கு அப்பால் நிகழ்ந்து வருகிற தமிழ் வளர்க்கும் முயற் சிகளைப் பற்றியும் சிறிதுநேரம் சிந்திப்பது அவசியமாகும்.

தமிழகத்திலுள்ள பெரியவர்களுக்கு உள்நோக்கு மிகுந்திருக்கிற அளவுக்கு, வெளிநோக்கும் உலகத்தைக் காண்கிற பரந்த நோக்கும் மிகவும் தேவை, ஏராளமான உள்நாட்டு அரசியல் பிரச்னைகளில் தமிழகத் தலைவர்கள் மூழ்கிக் கிடக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், உலகத் தமிழ் மாநாடு கூட்டி நாற்பது நாடுகளின் பேராளர்கள் வந்திருக்கிறபோது தமிழகப் பிரச்னைகளி லிருந்து மீண்டு வெளியுலகத்தைச் சற்று நிமிர்ந்து பார்த்திருக்க வேண்டும். அந்தத் தொலை நோக்கும் வெளி நோக்கும் இருந்திருக்குமானால் மலேசியாவுக்கு இத்தகைய புறக்கணிப்பு சிங்காரச் சென்னையிலே நிகழ்ந்திருக்காது.

எதிர்காலத்திலாவது தூரந்தொலேவில் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகிற தமிழ்ச் சகோதரர்களே மடியில் தூக்கி வைத்துக்கொண்டு ஏற்றிப் போற்றுகிற பெரும் பண்பு தமிழகத் தலேவர்களுக்கு உண்டாகும் என்று நம்புவோமாக. 'யாதும் ஊரே யாவரும் கேளிர், என்பது வெறும் கிளிப்பிள்ளேப் பாடமாகப் பேசுவதற்கு மட்டும் உரியதன்று—நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய குறிக்கோள் அது.

6

உலகத் தமிழ்க் கருத்தரங்கின் தொடக்க விழாவாக நடைபெற்ற கடற்கரை பொதுக் கூட்டத்தில் மலேசியாவுக்கு இழைக்கப்பட்ட 'அநீதி'க்கு, மறுநாள் ஜனவரி 4-ந்தேதி காலேயில் சென்னேப் பல்கலேக்கழகத்தின் நூற்ருண்டு விழா மண்டபத்தில் ஆரம்பமான ஆராய்ச்சிக் கருத்தரங்கின் முழுக்கூட்டத்தில் ஓரளவு 'பரிகாரம்' காணப்பட்டதென்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

பூம்புகாரில் தனியே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையும் நூற்ருண்டு விழா மண்டபத்தில் நிகழ்ந்த உலக அறிஞர்களின் ஆராய்ச்சிக் கருத்தரங்கையும் இணைத்து ஒரே பொதுத் தொடக்க விழாவாகக் கடற்கரையில் நடத்திஞர்கள். அந்தத் தொடக்க விழா தமிழக அரசாங்கத்தின் நேர் பார்வையில் நடைபெற்றதாகக் கூறிஞர்கள்.

ஆராய்ச்சிக் கருத்தரங்கு உண்மையில் ஜனவரி 4-ந் தேதியன்றுதான் தொடங்கிற்று. மலாயா பல்கலைக் கழக இந்தியப் பகுதியின் தலைவரான பேராசிரியர் தனி நாயகம் அவர்களின் தலைமையில் 40 நாடுகளைச் சேர்ந்த 430 அறிஞர்களின் முன்னிலையில் கருத்தரங்கின் முதல் கூட்டம் ஆரம்பமாயிற்று.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் திருக் குறள் கடவுள் வாழ்த்துடன் ஆராய்ச்சிக் கருத்தரங்கு ஆரம்பமாயிற்று. கருத்தரங்கின் அமைப்பாளரான திரு. ஏ. சுப்பையா வரவேற்புரை நிகழ்த்தினர். பின்னர் பேராசிரியர் தனிநாயகம், 1964ல் புதுடில்லியில் தோற்று விக்கப்பட்ட அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தைப் பற்றியும் அதனைத் தொடர்ந்து மலேசியாவில் நிகழ்ந்த முதல் கருத்தரங்கு பற்றியும் குறிப்பிட்டு, இரண்டாவது கருத்தரங்குக்கு 40 நாடுகளைச் சேர்ந்த 430 அறிஞர்கள் வந்திருப்பது பெரிய வளர்ச்சி என்று பெருமிதத்தோடு கூறினர், உலக அரங்கத்தில் தமிழாராய்ச்சித்துறை இத்துணை விரைவாகவும், விரிவாகவும் பெருகியிருப் பதற்குப் பேராசிரியர் தனிநாயகம் சூத்திரதாரியாக விளங்கி அருந்தொண்டாற்றி வருகிறார் என்பதைத் தமிழுலகம் மறக்கக்கூடாது. திருவாளர்கள் ஏ. சுப்பையா செக் நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபில், பிரெஞ்சுப் பேரறிஞர் ஜான் பீலியோசா ஆகிய பெரியவர்களையும் தமிழ்கூறு நல்லுலகம் என்றும் நன்றியுடன் நினைத்துக் கொள்ளவேண்டும். இவர்களின் இடைவிடாத அரு முயற்சியின் பலனே இரண்டாவது கருத்தரங்கின் பெரு வெற்றி என்று சொல்வதும் மிகையாகாது.

பொருத்தமான மண்டபம்

பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா மண்டபம் கருத்தரங்கிற்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. குட்டி ஐ நா. பேரவை ஒன்று கூடியிருந்ததுபோல அம்மண்டபத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களையும் பார்வையாளர்களையும் காண்பது மனத்திற்குப் பெரிதும் மகிழ்ச்சியை அளித்தது. மேலைநாட்டுப் பெண்மணிகள் பலர் வண்ண வண்ணத் தமிழ் நாட்டுச் சேலைகளில் தங்களைச் சிங்காரித்துக் கொண்டு வந்து கருத்தரங்கிற்கு மேலும் கவர்ச்சியளித்தனர்.

கருத்தரங்குக்கு மொத்தம் 250 கட்டுரைகள் வந்திருந்ததாகவும் இவற்றில் 150 கட்டுரைகள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் கருத்தரங்கின் பொதுச் செயலாளரான திரு. கமில் சுவலபில் அறிவித்தார். சிறப்பான கட்டுரைகள் பல கருத்தரங்கில் படிக்கப்பட்டன. தமிழ்த் துறையின் ஆராய்ச்சிப் பரப்பு மிகவும் விரிவடைந்திருப்பதைத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த கட்டுரைகள் நன்கு புலப்படுத்தின. குறிப்பாகத் தமிழகத்தைச் சேர்ந்த புதிய தலைமுறையான இளம் புலவர்களின் ஆராய்ச்சி நோக்கும் ஆய்வுத்திறனும் உலக அறிஞர்களைப் பெரிதும் கவர்ந்தன. கட்டுரைகள்மீது நடைபெற்ற விவாதங்களில் தமிழக இளம் புலவர்களின் நுணுக்கமான ஆராய்ச்சிப் புலமை நன்கு வெளிப்பட்டது.

கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தது குறித்துத் தமிழகத்தின் பெரும் புலவர்களுக்குக்கூட மனநிறைவு இல்லை. இது குறித்து செக் நாட்டு அறிஞர் கமில் சுவலபில் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானார். தமிழ

கத்தின் பேரறிஞர்கள் பலர் கருத்தரங்கில் பங்குகொள்ள முடியாதபடி 'ஒதுக்கி' வைக்கப்பட்டார்கள் என்றும் கூறப்பட்டது.

மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் முது பெருந்தமிழறிஞருமான பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கட்டுரைகள் தேர்ந்தெடுக் கப்படாதது குறித்துத் தமது மனக் குறையைக் கருத்தரங் கிலேயே வெளியிட்டார். 'தமிழகத்திற்கு அப்பால் தமிழ் வளர்ச்சி' என்னும் தலைப்பில் தாம் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரை என்ன ஆயிற்று என்று அவர் கேட்டார். அக் கட்டுரை கருத்தரங்கில் படிக்கப்படுவதற்குத் தேர்ந் தெடுக்கப்படாமல் போனது பெரிதும் கண்டிக்கத் தக்க நிலைமை என்பதில் ஐயமில்லை.

கருத்தரங்கின் நிகழ்ச்சி நிரலில் கட்டுரைகளின் பட்டியலில் தமிழகத்திலுள்ள குறிப்பிடத்தக்க பல பேரறி ஞர்களின் பெயர்கள் காணப்படாதது ஒரு பெருங்குறை யாகவே எனக்குப்பட்டது. ஆனால் இதற்கு யாது காரணம்?

ஒரே மூச்சில் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்களை - ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்த குழுவினரைக் குற்றஞ் சொல்லி இதனை மூடி மறைப்பது நியாயமன்று என்பதே என் கருத்து.

தமிழ் ஆராய்ச்சித்துறை என்பது தமிழ்ப் புலமை யுள்ள அனைவருக்கும் பொதுவானதாகும். செறிவான ஆழ்ந்த புலமையுள்ள அறிஞர் பெருமக்களை எங்கோ ஒரு மூலையில் தள்ளிவிட்டு ஆராய்ச்சி நடத்துவது கேலிக் கூத்து. ஆங்கிலம் முதலான பிறமொழிப் புலமையும்

ஆராய்ச்சிப் புதுநோக்கும் வெளியுலக அறிஞர் தொடர்பும்கொண்டிருக்கும் ஆராய்ச்சி அறிஞர்கள் பெரிதும் முனைப்போடு தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் உழைப்பும் விடாமுயற்சியுமே தமிழுக்கு ஓர் உலக அரங்கத்தைப் படைத்துக் கொடுத்திருக்கிறது. புதுநோக்கும் பன்மொழிப் புலமையும் உள்ள இவர்களை 'ஆழ்ந்த தமிழறிவு' அற்றவர்கள் என்று புலவர் பெருமக்கள் 'ஒதுக்க' நினைப்பதும் பெரிய தவறாகும்.

கரம் கோர்த்து

தமிழ் ஆராய்ச்சித்துறை பண்படுவதற்கும் செம்மையடைவதற்கும் புலவர் பெருமக்களும் புதுநோக்கு ஆராய்ச்சித்துறை அறிஞர்களும் கரம் கோர்த்துச் செயல்படுவது அவசியமாகும். அதுமட்டுமின்றித் தமிழில் புத்திலக்கியம் படைத்து அதனை வளர்த்துக் கொண்டிருக்கும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் அரவணைப்பும் ஈடுபாடும ஆராய்ச்சித்துறைக்கு இன்றியமையாதது.

எந்தப் பொதுக் காரியத்திலும் ஒரு கூட்டத்தின் மீது இன்னொரு கூட்டம் பழி சுமத்துவதுதான் பெரும்பாலும் தமிழ் நாட்டிலும் மற்றும் தமிழ்ச் சமுதாயம் வாழ்கிற மற்ற நாடுகளிலும் காணப்படுகிற நிலைமை. தமிழ்க் கருத்தரங்கின்மீது தமிழகப் புலவர் பெருமக்களிடம் காணப்பட்ட அதிருப்தியும் இந்நிலைமையின் பிரதிபலிப்பே ஆகும்.

தமிழுக்கு வாழ்நாள் முழுவதும் அயராது அருந்தொண்டாற்றி வருகிற புலவர் பெருமக்கள் தாங்களே ஆராய்ச்சித் துறையில் முதல் முயற்சிகளை மேற்கொள்ள

முன் வரவேண்டும். தாங்கள் தூங்கிக்கொண்டிருந்து விட்டு மற்றவர்கள் யாராவது ஏதாவது உருப்படியாகச் செய்ய முன் வந்தால் அதனைக் குறை கூறுவதும் முணு முணுப்பதும் புலவர் கூட்டத்தின் பழக்கமாகிவிட்டது என்று கூறப்படுவதிலும் உண்மை இல்லாமலில்லை.

அரைகுறையான தமிழ்ப் புலமை உள்ளவர்கள் வெறும் ஆங்கிலப் புலமையை மட்டும் அடிமுதலாக வைத்துக் கொண்டு ஆராய்ச்சி மேடையில் முன்னே நிற்கிறார்கள் என்றால் அதற்குத் தமிழ்ப் புலவர்களின் கூச்சமும் தயக்கமுமே காரணமாகும். ஆழ்ந்த தமிழ்ப் புலமையுள்ளவர்கள் திரைக்குப் பின்னேயிருந்து முணுமுணுப்பதில் பொருளில்லை. அவர்கள் ஆராய்ச்சி அரங்கததின் தலைவாயிலில் நிற்கவேண்டும். அதே சமயத்தில் புது நோக்கு ஆராய்ச்சி அறிஞர்கள் பிறமொழிகளில் தமிழ் மொழியைப் பற்றியும், தமிழ்ப் பண்பாடு பற்றியும் எழுதி வருகிற நற்பணிகளுக்கும் தமிழ்ப் புலவர்கள் பக்கபலமாக நின்று அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

புதுநோக்கு ஆராய்ச்சி அறிஞர்களும் தமிழ்ப் புலவர்களை 'அசடுகள்' என்று கருதாமல் அவர்களின் புலமையை ஆராய்ச்சித் துறைகுப் பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும். வெளிநாடுகளுக்குச் சென்று தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பங்குகொள்ளும்படி பல வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களிடம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பலனாகவே நல்ல பிரதிநிதித்துவமுள்ள உலக அறிஞர் கூட்டத்தைச் சென்னை மாநகரத்தில் நூற்றாண்டுவிழா மண்டபத்தில் தரிசிக்க முடிந்தது. அதைப் போலத் தமிழகத்திலும் ஒரு தூதுக்குழு தலைசிறந்த புலவர் பெரு

மக்களைக் கண்டு பேசி அவர்களைக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு கேட்டுக்கொண்டிருந்தால் கருத்தரங்குக்கு மேலும் சிறப்புஏற்பட்டிருக்கும். மேலும் பலபயன்மிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தமிழுலகம் பெற்றிருக்கும்.

அடுத்து நிகழும்

நடந்து முடிந்ததைப்பற்றி இனிப் பேசிப் பயனில்லை. அடுத்து நிகழும் கருத்தரங்குகளிலும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற உலக நிறுவன அமைப்புக்களிலும் புலவர் பெருமக்களும் ஆராய்ச்சிப் புதுநோக்கு அறிஞர்களும் இணைந்து செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். இருதரப்பாரிடமும் தமிழாராய்ச்சிக்கு வேண்டிய திறமும் புலமையும் இருக்கின்றன. இரண்டு குழுக்களும் இணைந்து பணிபுரிந்தால் தமிழாராய்ச்சித்துறை இன்னும் செம்மையும் செழிப்பும் அடையும்.

புலவர் கூட்டத்திற்கும் ஆராய்ச்சி அறிஞர்களுக்கும் இடையே 'மனக் குமுறல்' இருந்தது போலவே தீவுத்திடலில் பூம்புகார் நகரத்தில் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கும் நூற்றாண்டுவிழா மண்டபத்தில் நடந்த உலகத் தமிழ்க் கருத்தரங்குக்கும் இடையே ஒருவகையான கெடுபிடிப் போர் நடப்பதை ஊகிக்க முடிந்தது. இரண்டு விழாக்களும் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு தேவையானவை. இரண்டும் எதிர்பார்க்கப்பட்டதைவிடச் சிறப்பாக நடந்தேறின. எனினும் இரண்டு விழாக்களுக்கிடையே தக்க இணைப்பும் புரிந்துணர்வும் இருந்திருந்தால் வெற்றியும் பலனும் இன்னும் பன்மடங்கு பெருகியிருக்கும்.

உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்களை முறையாக அழைத்துப் பூம்புகார் மேடையில் அறிமுகம் செய்திருக்க வேண்டும். எல்லா நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அங்கு பேசுவதற்கு இடமளித்திருக்க வேண்டும். இதற்கு மாருகப் பூம்புகார் வெறும் 'உள்ளூர் மேளமாகத்தான்' ஒலித்தது. சென்னை நகரத்தில் திரண்டுவிட்ட லட்சக்கணக்கான மக்களின் தமிழ்ப் பசிக்கு அங்கு நிறைய விருந்து கிடைத்தது என்பது உண்மையே. தமிழகத்து அறிஞர்கள் அனைவருக்கும்—எவருக்கும் மனக் குறையின்றி—அங்கு இடமளித்திருந் ததும் குறிப்பிடத்தக்கது. பெரிய தமிழ்த் திருவிழாவாகத் தமிழகத்தின் புலமை, கலைத்திறன் முதலியவற்றின் பிரதிபிம்பமாகப் பூம்புகார் நிகழ்ச்சிகள் அமைந்தன.

எனினும் உலகத் தமிழறிஞர்களை லட்சக்கணக்கான தமிழ் மக்களின் முன்னிலையில் அறிமுகப்படுத்துவதற்கு பூம்புகார் குழுவினர் தக்க முன்னேற்பாடுகள் செய்ய வில்லை. அக்கறையும் காட்டவில்லை. தற்செயலாகப் பூம்புகாருக்கு அவர்களாகப் போனவர்களுக்கும் 'பேச வேண்டும்' என்று சீட்டு எழுதிக் கொடுத்தவர்களுக்கும் இடம் கொடுத்தார்கள். மற்றும் தற்செயலாக கண்ணில் பட்ட சில வெளிநாட்டு அறிஞர்களுக்கும் 'மேடை'யும் விளம்பரமும் கிடைத்தன. நமது மலேசியக் கவிஞர் களான உலகநாதனும், முரசு நெடுமாறனும் முண்டியடித் துத் தக்க சிபாரிசுகளை நாடியதால் கவியரங்கத்தில் பாடு கிற வாய்ப்பைப் பெற்ருர்கள்.

இப்படி 'வாய்ச்சான் போச்சான்' நிலைமை இல்லா மல் கருத்தரங்கிற்கு வந்திருந்த எல்லா அறிஞர்களுக் குமே அங்கு முறையான வாய்ப்பும் பெருமையும் வழங்கப்

பட்டிருக்க வேண்டும். முத்தமிழ்க காவலர் முதுபெரும் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பூம்பு காரின் ஏகபோகக் காவலராகச் செங்கோலோச்சினர். அவருக்கு நூற்ருண்டுவிழாக் கருத்தரங்கின்மீது இருந்த கோபத்தாலோ என்னவோ கருத்தரங்கிற்கு வெளிநாடு களிலிருந்து வந்திருந்த உலக அறிஞர்களின்மீதும் ஒரு வகையான காட்டமிருந்தது. கருத்தரங்கு முத்திரைகளைக் குத்திக் கொண்டு சென்றவர்களை எல்லாம் அவர் ஒருவித மான மாற்ருந்தாய்ப் போக்கில்தான் பார்த்தார். பூம்பு காருக்குச் சென்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் முத்தமிழ்க் காவலரின் பராமுகத்திற்கு ஆட்பட்டதில் வியப்பில்லை.

முத்தமிழ்க் காவலர் போன்ற பெரியவர்களிடம் கருத் தரங்கு குறித்து ஒருவிதமான உட்காய்ச்சலும், புகைச் சலும் இருந்ததால்தான் உலக அறிஞர்களைப் பூம்புகார் நன்கு பயன்படுத்துக் கொள்ள முடியாமற் போய்விட்டது.

நூற்ருண்டு விழா மண்டபத்தில் மலேசியாவின் மனக் குறை சற்று அகல்வதற்குக் கருத்தரங்கு ஏற்பாட்டாளர் கள் கருணையோடு உதவி புரிந்தனர். குறிப்பாக பேராசி ரியர் தனிநாயகம் இதில் தமக்களிக்கப்பட்டிருந்த வாய்ப்பை மலேசியக் குழுவின் தலைவரான செனட்டர் டத்தோ ஆதிநாகப்பனுக்கு வழங்க முன்வந்தது குறிப் பிடத்தக்கது.

மலேசியாவில் நடைபெற்ற முதல் கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் முதல் தொகுதியை வெளியிட்டு அதனை அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவரான பிரெஞ்சு அறிஞர் பீலியோசாவிடம் வழங்கினர், டத்தோ ஆதிநாகப்பன்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளின் இரண்டாவது தொகுதியும் விரைவில் வெளியிடப்படுமென்று குறிப்பிட்டு 1977-ம் ஆண்டில் மீண்டும் மலேசியாவில் ஆராய்ச்சிக் கருத் தரங்கு நடத்துவதற்கும் டத்தோ அழைப்பு விடுத்தார்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளின் முதல் தொகுதி கடற் கரைப் பொதுக்கூட்டத்தில் மலேசியக் குழுவின் தலைவ ரால் வெளியிடப்பட்டுத் தமிழக முதலமைச்சரிடம் வழங்கப்படுமென்றும் அத்தொகுதிகளை தமிழக முதல மைச்சர் மற்ற அறிஞர்களுக்கு வழங்குவாரென்றும் எதிர் பார்க்கப்பட்டது. மலேசியக் குழு கோலாலம்பூரிலிருந்து புறப்பட்ட தருணத்திலும் இவ்வாறுதான் கூறப்பட்டது. ஆனால் சென்னை நகரத்திற்குச் சென்றதும் மலேசியக் குழுவுக்கு எல்லாம் ஏமாற்றமாகத்தான் அமைந்தது.

கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் டத்தோவுக்கு ஐந்து நிமிஷம் பேச அனுமதி வழங்காதவர்கள் கட்டுரைத் தொகுதியை வெளியிடுகிற பொறுப்பை எப்படிக் கொடுத்திருப்பார்கள்?

நல்ல வேளையாக நூற்றாண்டு விழா மண்டபத்திலே னும் மலேசியாவுக்குச் சிறப்பை வழங்குகிற முறையில் டத்தோவுக்குக் கட்டுரைத் தொகுதியை வழங்குகின்ற வாய்ப்பு வழங்கப்பட்டது சற்று மன ஆறுதலையளித்தது.

7

உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கின் விவாதங் களை எந்த மொழியில் நடத்துவது? 40 நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் கூடியிருக்கிற ஒரு பேரவையில்

பெரும்பாலோர் விஷயங்களைப் புரிந்துகொள்கிற வகையில் ஒரு பொது மொழியைக் கருத்தரங்கு மொழியாகத் தேர்ந்தெடுப்பதில் நியாயம் இருக்கிறது.

ஐ நா. சபை போன்ற உலக அரங்கங்களில்—உலக நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடவேண்டியிருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும் தத்தம் கருத்துக்களைத் தடங்கலின்றி வெளியிடவும் மற்றவர்களின் பேச்சுக்களை எளிதாகப் பின்பற்றவும் மொழி அமைப்பு தடையாக இருக்கக்கூடாது. அதனால்தான் ஐ. நா. பேரவைக் கூட்டங்களை ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானியம், ரஷியமொழி, சீனம் ஆகிய ஐந்து மொழிகளில் நடத்துகிறார்கள். பேராளர்கள் இந்த ஐந்து மொழிகளில் ஏதாவது ஒரு மொழியில் பேசலாம், ஆனால் அவருடைய பேச்சு மற்ற நான்கு மொழிகளிலும் அவர் பேசிக்கொண்டிருக்கும் தருணத்திலேயே மொழி பெயர்க்கப்படுகிறது. இதற்குத்தான் ஏககால மொழி பெயர்ப்பு முறை என்று சொல்கிறார்கள்.

பேசுகிறவர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியில் பேசுவதற்கும் அதனைச் செவிமடுப்பவர் தங்களுக்குத் தெரிந்த மொழியில் அந்த உரையைக் கேட்கவும் இம்மொழி ஏற்பாடு உதவியாக இருக்கிறது.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளுக்கு ஏககால மொழி பெயர்ப்பு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பேசுகிறவர் சீனத்தில் பேசினால்கூட அந்தப் பேச்சை அதேசமயத்தில் தமிழில் நாம் கேட்பதற்கு அங்கு வசதியிருக்கிறது.

மலேசிய நாடாளுமன்றத்தில் தேசியமொழி, ஆங்கிலம் இரண்டு மொழிகளுக்கு மட்டும் ஏககால மொழி பெயர்ப்பு வசதி இருக்கிறது.

உலகத் தமிழ்க் கருத்தரங்கிலும் நியாயமாக இப்படி ஏககால மொழி பெயர்ப்பு வசதிக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். லட்சக்கணக்கில் பணத்தைத் தண்ணீர் போல் செலவழித்தவர்கள் நினைத்திருந்தால் இக்காரியத்தை எளிதாகச் செய்திருக்க முடியும்.

ஆனல் கருத்தரங்கை நடத்தியவர்கள் கோலாலம்பூரில் முதல் கருத்தரங்கின்போது செய்த அதே தவற்றைச் சென்னைக் கருத்தரங்கிலும் செய்திருந்தார்கள்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் எழுதப்பட வேண்டுமென்று நிபந்தனை விதித்தார்கள். தமிழிலோ மற்ற மொழிகளிலோ கட்டுரைகள் எழுதினல் அக்கட்டுரைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பும் உடன் அனுப்பவேண்டுமென்று கூறியிருந்தார்கள். இதன் பயனக தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதக்கூடிய பலருக்கு—அவர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாக எழுதத் தெரியாத காரணத்தினல் கதவு அடைக்கப்பட்டது. தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்குக்கு தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரை அனுப்பக்கூடாது என்று சொல்வது தமிழுக்கு இழைக்கும் அநீதி என்றுதான் கருதப்படவேண்டும்.

இன்னும் ஏராளமாக

இவ்வாறு கதவு அடைக்கப்படாமல் இருந்தால், தலை சிறந்த இன்னும் ஏராளமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை கருத்தரங்கு பெற்றிருக்க முடியும். அவற்றைக் கருத்

தரங்கு அமைப்புக் குழு ஆங்கில மொழியில் பெயர்த்துப் பயன்படுத்தியிருக்கவும் முடியும்.

கோலாலம்பூரில் தமிழ்க் கருத்தரங்கிலும் தமிழ்க் கட்டுரைகள் வரவேற்கப்படவில்லை. வந்த தமிழ்க் கட்டுரைகளைக்கூட அச்சிட்டுக் கொடுக்காமல் தூங்கப் போட்டு வைத்தார்கள். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் கோலாலம்பூரில் தட்டெழுத்துப் பொறி மூலம் நன்கு அச்சிடப்பட்டுப் பேராளர்களுக்கு முன் கூட்டியே வழங்கப்பட்டன. பேராளர்கள் முன் கூட்டியே அவற்றைப் படித்துக்கொண்டு விவாதங்களில் பங்குகொள்ள அந்த ஏற்பாடு உதவியாக இருந்தது. சென்னையில் முழுக் கூட்டங்களில் படிக்கப்பட்ட கட்டுரைகளை மட்டுமே அச்சிட்டுக் கொடுத்தார்கள். மற்ற கட்டுரைகளின் 'சுருக்கம்' மட்டுமே புத்தக வடிவில் கொடுக்கப்பட்டது. அதன் பயனாகக் கட்டுரைகள்மீது பேராளர்கள் நன்கு விவாதிக்க முடியாமற் போய் விட்டது.

சென்னை ஏற்பட்டாளர்கள் கட்டுரைகளை அச்சிட்டுக் கொடுக்க முடியாமற்போனதற்குக் காரணம் தெரியவில்லை. பெரும்பாலான கட்டுரைகள் தாமதமாக வந்ததென்று சொன்னார்கள். அப்படியிருந்தாற்கூட சென்னை போன்ற நகரங்களில் அச்சக வசதிகள் மிகுதி. முயன்றிருந்தால்—பல அச்சகங்களின் உதவியை நாடியிருந்தால் படிக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தையும் அச்சிட்டு வழங்கியிருக்க முடியும். அப்படிச் செய்திருந்தால் விவாதங்கள் இன்னும் பயனுள்ள முறையில் நடந்திருப்பதோடு, குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சிகளை

அறிஞர்கள் தொடர்வதற்கும் அக்கட்டுரைகள் உதவியாக இருந்திருக்கும்.

கோலாலம்பூரில் தமிழ்க் கட்டுரைகளை மட்டும் அச்சடிக்காமல் புறக்கணித்தது பெரிய சர்ச்சைகளை உண்டாக்கியது அன்பர்களுக்கு நினைவிலிருக்கும். சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கொதித்தெழுந்து கூக்குரல் கிளப்பிய பின்னர் தமிழ்க் கட்டுரைகளை அச்சிட்டுக் கொடுத்தார்கள்.

அதைப் போலவே கருத்தரங்கு விவாதங்களை ஆங்கிலத்தில் மட்டும் நடத்துவதற்குச் செய்யப்பட்டிருந்த நடை முறையும் கோலாலம்பூரில் உடைபட்டது. தமிழிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. தமிழிலும் விவாதங்கள் நடைபெற்றன.

கோலாலம்பூரில் இத்தகைய அனுபவம் ஏற்பட்டிருந்தும் சென்னை அமைப்பாளர்கள் ஆங்கிலத்தில்தான் கட்டுரை, ஆங்கிலத்தில்தான் விவாதம் என்று வரையறுக்க முற்பட்டது முதல்தரமான பைத்தியக்காரத்தனமாகும். நடைமுறை நோக்குப் புரியாமல் செய்யப்பட்ட இந்த ஏற்பாடு நூற்றாண்டு விழா மண்டபத்தில் கருத்தரங்கின் முதல் நாள் கூட்டத்திலேயே தகர்ந்து போயிற்று.

பேராசிரியர் இலக்குவனர்

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவரான திரு பீலியோசாவின் கட்டுரையே கருத்தரங்கில் படிக்கப்பட்ட முதல் கட்டுரை ஆகும். அக்கட்டுரை மீது நடந்த விவாதத்தில் பேராசிரியர் இலக்குவனர் தமிழில் கேள்வி எழுப்பத் தொடங்கினர். ஆங்கிலத்தில் மட்டும்

என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு அப்போது சரியத் தொடங்கிற்று. இலக்குவனார் தமிழில் கேட்ட கேள்வி களை அறிஞர் பீலியோசாவுக்கு மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டிய சங்கடம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் தனிநாயகத்திற்கு ஏற்பட்டது.

இத்தகைய மொழிச் சங்கடத்தைப் பெரும்பாலும் எல்லாக் கட்டுரையாளர்களும் எதிர்நோக்க நேரிட்டது. கருத்தரங்கு அமைப்பாளர்கள் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கும் ஏககால மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்திருந்தால்கேள்வி கேட்பவர்களுக்கோ பதில் சொல்பவர்களுக்கோ மொழிச் சங்கடங்கள் நேர்ந்திருக் காது. மண்டபத்தில் அமர்ந்திருந்த பேராளர்களும் விவாதங்களை நன்கு பின்பற்றியிருக்க முடியும்.

இத்தகைய கருத்தரங்குகளுக்கு ஏககால மொழி பெயர்ப்பு மிக இன்றியமையாதது. எதிர்வரும் கருத் தரங்குகளிலேனும் தமிழைப் புறக்கணிக்காமல் ஆங்கிலத் தோடு சரியாசனம் தருவதற்கு அமைப்பாளர்கள் கருத்துச் செலுத்துவர் என்று நம்புகிறேன்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது பெருந்தவறு. தமிழ்த்துறைகளைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தமிழில் வளமாக எழுதக் கூடியவர்களை ஏன் தடுக்க வேண்டும்? அவர்களையும் எழுத அனுமதிக்க வேண்டும். முடிந்தவர்கள் தம் கட்டுரைகளுககு ஆங்கில மொழி பெயர்ப்பையும் அனுப்பும்படி சொல்லலாம். அப்படி ஆங்கில மொழிபெயர்ப்புடன் வராத கட்டுரைகளைக்கருத் தரங்கு மொழிபெயர்ப்புக் குழு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும். அதைப்போல ஆங்கிலம் முதலான

பிறமொழிகளில் எழுதியனுப்பப்படுகிற கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் அந்தக் குழு கைகொடுக்க வேண்டும்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் கட்டுரைகளை எழுத முடியாதவர்களும் இருக்கக்கூடும். அவர்கள் தங்களுக்கு இயன்ற மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பிககவும் தடையிருக்கக கூடாது. இக்கட்டுரைகளையும் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆக்குவது கருத்தரங்கு மொழிபெயர்ப்புக் குழுவின் பொறுப்பாக இருக்கும்.

கோலாலம்பூர் கருத்தரங்குக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் மட்டும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால்தான் அக்கட்டுரைகளில் கூறப்பட்டிருக்கிற ஆராய்ச்சிக் கருத்துகள் அறிஞருலகத்தில் நன்கு பரவி மேலும் அதன் தொடர்பான ஆராய்ச்சிகள் நிகழ முடியும். சென்னையில் இத்தகைய மொழி பெயர்ப்பை எளிதாகச் செய்து முடிக்க ஆட்களும், சாதனங்களும் இருக்கின்றன.

கோலாலம்பூர் கருத்தரங்குக் கட்டுரைகள் மட்டுமின்றி சென்னையில் நடைபெற்ற இரண்டாவது கருத்தரங்குக் கட்டுரைகளும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படுவது அவசியமாகும். ஆராய்ச்சித்துறை பரந்த அடிப்படையில் செம்மையாக வளர்வதற்கு இந்த இருமொழி ஏற்பாடு கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

மற்ற நாட்டு அறிஞர்களைக் கூட்டிவைத்துக் கொண்டு நாம் தமிழில் பேசிக் கொண்டிருந்தால் அவர்

களுக்குச் சள்ளேயாக இருக்காதா என்று கேட்கப்படு கிறது. தமிழறிஞர்கள் தமிழில் தனியே ஆராய்ச்சிக் கருத் தரங்கு நடத்தலாமே—அதில் தங்களின் ஆராய்ச்சிக் கருத்துக்களைக்கொட்டலாமே என்றும் சொல்லப்படு கிறது. அனைத்துலகக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளுக்கு ஓர் அனைத்துலக மொழியே சாலப்பொருத்தம் என்றும் வற் புறுத்தப்படுகிறது.

இதிலுள்ள நியாயத்தையும் நாகரிகத்தையும் நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஏககால மொழிபெயர்ப் புச் சாதனம் ஏற்பாடு செய்துவிட்டால் தமிழ்ப் பயிற்சி சரளமாக இல்லாத பிற அறிஞர்கள் விவாதங்களை ஆங் கிலத்தில் கேட்க முடியும். அதே சமயத்தில் ஆங்கிலத் தில் சரளமாய் இல்லாதவர்களும் தங்களின் கருத்துக் களைத் தடையின்றிச் சொல்லமுடியும்.

கொள்கை அடிப்படை

இதில் அடிப்படைக் கொள்கை ஒன்றும் இருக்கிறது. தமிழ்க் கருத்தரங்கில் தமிழ் மொழிக்கு இடமளிக்கா விட்டால் தமிழர்களாகிய நாம் தமிழுக்கு அனைத்துலக அடிப்படையில் முதலிடம் வழங்காவிட்டால் மற்றவர்கள் நம்மை எப்படி மதிப்பார்கள்? நமது தமிழை எப்படி மதிப்பார்கள்? தமிழுக்கு முதலிடம் தருவதை இத்தகைய கருத்தரங்கில் கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

சென்னைக் கருத்தரங்கில் தமிழ்க் கட்டுரைகளைத் தனிப் பகுதியாகப் பிரித்துத் தென்னாப்பிரிக்காவில் கறுப் பர்களுக்கு தனியிடம் வழங்குவதுபோல அவற்றுக்குச் 'சேரி' வாழ்வு அளித்தார்கள். ஆங்கிலக் கட்டுரையாக இருந்தாலும், தமிழ்க்கட்டுரையாக இருந்தாலும் அந்தந்த

ஆராய்ச்சிப் பிரிவின்கீழ் படிக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மொழியியல் பற்றிப் பல கட்டுரைகள் படிக்கப் பட்டன. தமிழில் மொழியியல் பற்றிய கட்டுரை வந்திருந் தால் அதனையும் அந்தப் பகுதியிலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் படிக்க அனுமதித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் தமிழில் வந்த கட்டுரைகள் அனைத் தையும் ஒரு கதம்பமாக்கி ஒரு தனிப்பகுதியை ஒதுக்கி னர்கள். தமிழ்க் கட்டுரைகளை கேட்க வந்தவர்கள் அதிகமாக இருந்ததால் பலர் உட்காரவும் முடியாமல் நிற்கவும் முடியாமல் திண்டாடினர்கள். தமிழ்க் கட்டுரை களுக்கு தனி இடம் ஒதுக்கியவர்கள் அதிகம் பேர் உட் கார்கிற மாதிரி பெரிய மண்டபத்தையாவது கொடுத் திருக்க வேண்டும்.

நூற்றுண்டு விழா மண்டபத்தில் முழுக் கூட்டங்கள் காலைநேரத்தில் நடைபெற்றன. அதில் எல்லாப் பேராளர் களும் கலந்துகொண்டார்கள். இரண்டு பெரிய கட்டுரை கள் படிக்கப்பட்டன. கட்டுரைகள் படிப்பதிலேயே நேரம் போய்விட்டதால் பரந்த அடிப்படையிலும் ஆழ மாகவும் விவாதம் நடப்பதற்கு முடியாமற் போய்விட்டது. கேள்வி கேட்க எழுந்து நின்ற பலருக்கு வாய்ப்புக் கிடைப் பது அரிதாக இருந்தது. ஏதோ ஒருவர், இருவர் மட்டுமே ஒவ்வொரு கட்டுரைக்கும் அந்த வாய்ப்பைப் பெற்றனர்.

கருத்தரங்கில் ஒட்டியும் வெட்டியும் பேசுவது மிகவும் முக்கியமான அம்சமாகும். அதற்குக் கூடுதலான நேரம் இருக்கும்படி நிகழ்ச்சிகள் அமைக்கப்பட வேண்டும். பெரும்பாலான கட்டுரைகள் கைகளில் கிடைக்காத

குறையோடு கேள்வி கேட்பதற்கு வாய்ப்புக் கிடைக்காத குறையும் பேராளர்கள் பலருக்கு ஏமாற்றத்தையளித்தது.

பிற்பகலில் கருத்துக்கோவைகள் நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றன. அதில் சித்த மருத்துவம், இசைத்துறை, மொழிபெயர்ப்புத்துறை முதலியவற்றுக்கு இடம் கொடுத்திருந்தார்கள். குறிப்பிட்ட ஒரு துறை பற்றிப் பலர் கட்டுரைகளைப் படிக்க இக்கருத்துக் கோவை வாய்ப்பு அளித்தது. மொழிபெயர்ப்புத் துறை பற்றிய கருத்துக் கோவை மாண்புமிகு அமைச்சர் நெடுஞ் செழியன் தலைமையில் நடைபெற்றது. அதில்தான் தகவல் சாதனங்களின் மொழிபெயர்ப்புச் சிக்கல் பற்றிய கட்டுரையைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. இசைத் துறைக் கருத்துக் கோவைக்கு இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் தலைமை வகித்தார். சித்தமருத்துவ ஆராய்ச்சிக் கருத்துக் கோவை டாக்டர் ரத்னவேலு சுப்பிரமணியன் தலைமையில் நிகழ்ந்தது.

மொழியியல் ஆராய்ச்சிக்குக் கருத்தரங்கில் மிகுதியான இடம் கொடுக்கப்பட்டுவிட்டதென்று குறைகூறப் பட்டது பிற்பகலில் நடந்த தொகுதி விவாதங்களில் இரண்டு அறைகளில் மொழியியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. மொழியியலில் மட்டும் மொத்தம் 39 கட்டுரைகள் படிக்கப்பட்டன.

இலக்கியத்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் தனித் தொகுதியாக நடைபெற்றன. அப்பகுதியில் மலேசியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் சமர்ப் பித்திருந்த கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. புத்திலக்கியத்திற்கு புதுமைப் பித்தனின் பணி என்னும் தலைப்பில் விரிவுரையாளர் திரு. ஈ. ச. விசுவநாதன் படித்த

கட்டுரை பலருடைய பாராட்டைப் பெற்றது மலேசியத் தமிழ்ப் புதினம் ஒன்றைப் படம் பிடித்துக் காட்டி திரு வி என் ராமச்சந்திரன் ஒரு கட்டுரை வழங்கியிருந்தார். உதவி விரிவுரையாளரான திருமதி தேவபூபதி நடராஜா 'பெண்மையின் அழகு' பற்றியும் திருமதி லலிதா சாமப மூர்த்தி 'குறுந்தொகைப் பாடல்களில் பாலை உருவகம்' பற்றியும் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித் திருந்தனா

தாய்லந்தில் வழக்கிலுள்ள தேவாரப் பாட்டுக்களைப் பற்றி விரிவுரையாளர் திரு. எஸ் சிங்காரவேலு சமர்ப் பித்த கட்டுரையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வரலாறு, சமூக ஆய்வுத் துறைகளிலும் பல நல்ல கட்டுரைகள் படிக்கப்பட்டன மலாயா பல்கலைக் கழகத் தைச் சேர்ந்த குமாரி லோகநாயகி நன்னித்தம்பி, பேராசி ரியர் தனிநாயம், டாக்டர் எஸ் அரசரத்தினம் ஆகியோர் இப்பகுதியில் கட்டுரைகளை வழங்கியிருந்தனர்.

மலேசியத் தொலைக் காட்சியில் தயாரிப்பாளராகப் பணிபுரியும் குமாரி லியோ ''சரித்திரப் புதினம்'' பற்றி ஒரு கட்டுரை சமர்ப்பித்திருந்தார்.

அறிவியல், தொழில் நுட்பம் என்னும் தனிப் பகுதி யின் கீழ் பல நல்ல கட்டுரைகள் படிக்கப்பட்டன தமிழில் முதல் அச்சகத்தைத் தோற்றுவித்த ஹென்ரிக்கஸ் பாதிரி யாரைப் பற்றி ஓர் அருமையான கட்டுரையை பாளையங் கோட்டைச் சேவியர் கல்லூரிப் பேராசிரியர் எஸ். ராஜ மாணிக்கம் படித்தார். கோவாவில் 1577ம் ஆண்டிலேயே தமிழ் அச்சு எழுத்துக்கள் வார்க்கப்பட்டிருக்கும் உண்மையை அவர் தம் கட்டுரையில் நிலைநிறுத்தியிருக்

கிறார். ஹென்ரிக்கஸ் பாதிரியார் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன் அச்சிட்ட எழுத்துக்களையும் நூல்களையும் திரு. ராஜமாணிக்கம் காட்டினார். அந்த நூல்களை மீண்டும் பதிப்பிககின்ற முயற்சிகளையும் அவர் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது

தமிழில் அறிவியல் தொழில் நுட்ப நூல்களைப் பெரிதாக இயற்ற முடியும் என்பதற்கு இப்பகுதியில் படிக்கப் பட்ட கட்டுரைகள் நல்ல சான்றாக அமைந்தன. 'தமிழில் அறிவியல் நூல்கள்' என்னும் தலைப்பில் திண்டுக்கல் பேராசிரியர் திரு. ஜி. சண்முகசுந்தரம் என்பவர் படித்த கட்டுரையும் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

தமிழ்ப் பகுதியில் 27 கட்டுரைகள் படிக்கப்பட்டன. சிங்கப்பூர் வானொலியைச் சேர்ந்த கவிஞர் பெருமாள் 'உழைப்போர் இலக்கியம்' என்னும் தலைப்பில் நம் நாட்டில் வழங்கும் நாட்டுப் பாடல்களைப் பற்றி ஆராய்ந்திருந்தார். 'தமிழ்முரசு' துணையாசிரியர் திரு. மெ சிதம்பரம் தம் ஆராய்ச்சிக் கட்டுரையில் கிளப்பிய பல 'ஐயங்கள்' புதுமையாக அமைந்து பலரின் பாராட்டைப் பெற்றது. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் உலகத் தமிழ் மன்றத்தின் தலைவருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் 'கலைச் சொல்லாக்கம்' என்னும் தம் கட்டுரையில் மொழி பெயர்ப்பாளர்களின் சிந்தனையைத் தூண்டினார்.

'தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் உரைநடை' என்னும் தலைப்பில பிரபல எழுத்தாளர் அகிலன் சமர்ப்பித்த கட்டுரைக்கு நல்ல வரவேற்பு கிடைத்துக் காரசாரமான வாதங்கள் அதன்மீது நடைபெற்றன.

மலேசியப் பேராளர்களில் திருவாளர்கள் எஸ். எம். பொன்னையா (மாரா கல்லூரி விரிவுரையாளர்) சி. வி.

குட்புசாமி (மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்), புலவர்மணி திருமுரு பழ இரத்தினம் செட்டியார் ஆகியோர் சமர்ப்பித்திருந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் கருத்தரங்கில் படிக்கப்படாமற் போனது ஓர் ஏமாற்ற மாகவே அமைந்தது.

திரு. குப்புசாமி 'மலேசியாவும் தமிழரும்' என்னும் கட்டுரையையும் திரு. இரத்தினம் செட்டியார் 'சைவ சித் தாந்தத்தில் வினை' என்னும் கட்டுரையையும் சமர்ப்பித் திருந்தனர். திரு. பொன்னையா மூன்று கட்டுரைகளை வழங்கியிருந்தார்.

8

ஜனவரி 5ந் தேதி முற்பகலில் பூம்புகார் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழகப் புலவர் குழுவுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது.

முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ விசுவநாதம் தலைமையில் இயங்கும் தமிழகப் புலவர் குழு 49 பெரும் புலவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்குவ தாகும். தமிழகத்தின் எல்லா மாவட்டங்களையும் தமிழகப் புலவர் பெருமக்களில் தலைசிறந்த நன்மக்களையும் பிரதி நிதிக்கிற நல்ல அமைப்பாகத் தமிழகப் புலவர் குழு பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இப் புலவர் குழுவின் முடிவுகளுக்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பும் உண்டு.

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு. அதன்படி ஆன்றோர்— சான்றோரைக் கண்ணாரக் காண்பதே பெரும் புண்ணிய மாகும். ஆகவே, தமிழகத்தின் புலவர் குழுவை ஒரு சேரத் தரிசிக்கின்ற வாய்ப்பை நழுவவிட எனக்கு மன மில்லை. அதனால்தான் அன்று பூம்புகார் நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன்.

ஏற்கனவே தமிழகப் புலவர் குழுவின் சார்பில் உலகத் தமிழறிஞர்களுக்கு ஒரு வரவேற்பு ஜனவரி 3ந் தேதி அன்று நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறுவ தாக இருந்தது. பல்வேறு நாடுகளிலிருந்தும் உலகத் தமிழ்க் கருத்தரங்குக்கு வருகை புரிந்திருந்த அறிஞர் பெருமக்களுக்குத் தமிழகப் புலவர் குழு திட்டமிட்டபடி தனி வரவேற்பு வழங்கியிருந்தால் உலக அறிஞர்களை அந்நிகழ்ச்சி பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும், அது மட்டுமின்றித் தமிழகப் புலவர் பெருமக்களிடையே மகுடங்கள் என்று எண்ணத்தக்கவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுகின்ற வாய்ப்பும் உலக அறிஞர்களுக்குக் கிட்டியிருக்கும். அதைப்போலவே தமிழின்மாட்டு அக் கறை கொண்டு உலகின் பல பகுதிகளிலிருந்து நெடுந் தொலைவு கடந்து தமிழகத்திற்கு யாத்திரை வந்திருக்கும் கருத்தரங்கு அறிஞர்களை நேருக்கு நேர் சந்திக்கின்ற வாய்ப்பையும் தமிழகப் புலவர் குழு பெற்றிருக்கும்.

திடீரென்று இவ்வரவேற்பு நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்நேரத்தில் நூற்றாண்டு விழா மண்டபத்தில் இருந்தவர்கள் யாரிடமிருந்தும் இதற்குக் காரணத்தை அறிய முடியவில்லை. செய்தித் தாட்களிலும் இதுபற்றி அறிக்கை எதனையும் நான் காண

வில்லை. ஆனால் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் மீது தமிழகத்தின் புலவர்கள் பலருக்கு ஏற்பட்டிருந்த மனக குறையே இவ்வரவேற்பு நிறுத்தப்பட்டதற்குக் காரண மென்று சொன்னார்கள். தமிழகப் பெரும் புலவர் களுக்குக் கருத்தரங்கில் தக்க பிரதிநிதித்துவம் வழங்கப் படாததும் குறிப்பாக அறிஞர் பலரின் ஆராய்ச்சிக் கட்டு ரைகள் ஏற்கப்படாததும் இந்த மனக்குறைக்கும் மனத் தாங்கலுக்கும் காரணங்கள்.

விளைவுகளில் ஒன்று

முந்திய கட்டுரையில் நான் எழுதியபடி தமிழகப் புலவர்களை உலகக் கருத்தரங்கு நடத்தியவர்கள் முயன்றி அரவணைத்துக்கொண்டு காரியங்களைச் செய்திருக்க வேண்டும். எப்படியோ இரு சாராருக்கும் இடையே புரிந்துணர்வும் கூட்டுறவும் இல்லாமல் காரியங்கள் நடை பெற்றுவிட்டன. அதன் விளைவுகளில் ஒன்று தான் தமிழகப் புலவர் குழுவின் சார்பில் உலகத் தமிழறிஞர் களுக்கு அளிக்கப்பட இருந்த வரவேற்பு நிறுத்தப்பட்ட தாகும்.

கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் மீதுள்ள கோபதா பங்களை வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த அறிஞர்கள் பேராளர்கள் மீதும் வெளிப்படுத்துகிற மாதிரி இந்நிகழ்ச்சியை ரத்துச் செய்தது தவறு ஆகும். பூம் புகாருக்கு உலகத் தமிழறிஞர்களை முறைப்படி அழைக் காததற்கும் இதுதான் காரணமென்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

நூற்றாண்டு விழா மண்டபத்திற்கும் பூம்புகாருக்கும் இடையே நடைபெற்ற கெடுபிடிப்போரின் தவிர்க்க முடி

யாத பல விளைவுகளைக் கருத்தரங்குப் பேராளர்கள் எதிர் நோக்க நேரிட்டது. அதில் ஒன்றுதான் புலவர் குழுவின் வரவேற்பு ரத்து நடவடிக்கை.

நூற்றுண்டு விழா மண்டபத்தில் தமிழகப் புலவர் குழுவைச் சந்திக்க முடியாமற் போய்விட்டதால் பூம்புகார் வரவேற்பைக் காண்பதற்த என் ஆர்வம் பன்மடங்கு பெருகியது.

தமிழக முதல்வர் அண்ணு தலைமையில் இவ் வரவேற்பு நடைபெற்றது பொருத்தமே ஆகும். பேரா சிரியர் இலக்குவனரின் தொல்காப்பிய ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் இந்நிகழ்ச்சியின்போது அண்ணுவினுல் வெளியிடப்பட்டது. அமைச்சர் கருணுநிதி தமது உரை யில் பழந்தமிழ்ப் புலவர்களுக்கு முரசு கட்டிலை மட்டுமே வழங்கினுர்கள். இன்றையத் தமிழகம் புலவர்களுக்கு அரசு கட்டிலையே வழங்கியிருக்கிறது என்று பெருமிதத் தோடு குறிப்பிட்டார். புலவருக்கு புலவராய் புலவர் கோமாணுக அண்ணு தமிழக அரியாசனத்தில் வீற்றி ருக்கும் இனிய காட்சியைக் கருணுநிதி அழகாசச் சுட்டிக் காட்டினுர்.

முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் புலவர்களைப் போற் றும் மன்னர் என்று அண்ணுவைப் பாராட்டினுர். ஆனுல் அடக்கத்திற்கு பெயர்போன தமிழக முதல்வரோ, கருணு நிதி கூறியபடி தாம் ஒரு தமிழ்ப் புலவரல்ல வென்றும் கி. ஆ பெ வருணித்தப்படி பழங்கால மன்னர்களின் வரிசையில் வைத்து போற்றத்தக்க தகுதி தனக்கு இல்லை என்றும் மறுத்துப் பேசினுர்.

கருணுநிதி விடவில்லை. 'அண்ணுவை நான் முதன் முறையாக இன்று வென்றேன்' என்று அவர் வெற்றிப்

பரணி பாடினர். 'தமிழ்ப் புலவர்களின் பெரிய பண்பாடு அவையடக்கமாகும். அந்தப் பண்பாட்டின் அடிப்படையில்தான் நான் சொன்னதை அவர் மறுத்திருக்கிறார். அப்படி அடக்கத்தைப் புலப்படுத்தியதன் மூலம் தாம் ஒரு தமிழ்ப் புலவர் என்பதை அவர் ஒப்புக்கொண்டு விட்டார்' என்று கருணாநிதி தமது வெற்றிக்கு அளித்த விளக்கத்தைப் பூம்புகாரில் கூடியிருந்த பெருந்திரள் கையொலி மூலம் வழி மொழிந்தது.

மீண்டும் சங்ககாலம்

அண்ணாவைச் சுற்றிலும் பூம்புகார் மேடையில் தமிழகப் புலவர் குழுவினர் மாலையும் சின்னமும் அணிந்து அமர்ந்திருந்த பெருமிதக் காட்சி சங்ககாலம் தமிழகத்தில் மீண்டும் பிறந்திருக்கும் தோற்றத்தையே உண்டாக்கிற்று.

'தமிழ் இயல் காட்சி' என்னும் ஆராய்ச்சிக்கட்டுரைகளின் தொகுதியை திருமதி ராதா கருமுத்துத் தியாகராசன் வெளியிட்டார். இப்புத்தகத்தின் படிகளை இலங்கை மக்களின் சார்பில் பண்டிதர் கா.பொ. இரத்தினமும், மலேசிய மக்களின் சார்பில் நானும், ரஷிய மக்களின் சார்பில் திரு. செம்பியனும், சிங்கப்பூர் மக்களின் சார்பில் திரு. கா. பெருமாளும் பெற்றுக் கொண்டோம்.

காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வரும் 'வள்ளுவம்' நூலின் ஆசிரியருமான டாக்டர் வ. சுப. மாணிக்கம் பதிப்பித்திருக்கும் இந்தக் கட்டுரைத் தொகுதி சென்னை பாரி நிலையத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஜனவரி 5ந் தேதி மாலையில் சென்னை நகராட்சி உலகத் தமிழறிஞர்களுக்கும் தமிழகப் புலவர் குழுவுக்கும் நகர வரவேற்பு வழங்கிச் சிறப்பித்தது. மேயர் டாக்டர்

ஹபிபுல்லா பேக் வரவேற்புரை நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியிலும் உள்ளூர்ப் பேச்சுக் கச்சேரி மிதந்து பேராளர்களின் முறையான அறிமுகத்திற்குப் போதிய நேரமில்லாமல் செய்துவிட்டார்கள்.

ஜனவரி 5ந் தேதி மாலை சென்னை சட்டமன்ற உறுப்பினர்களின் புதிய விடுதியை இந்திய அதிபர் திறந்து வைத்தார். இவ்விடுதியில்தான் தமிழ்க் கருத்தரங்குக்கு வந்திருந்த பேராளர்களில் பெரும்பாலோர் தங்கியிருந்தனர். கருத்தரங்குக்காக இந்த விடுதி மிகவும் விரைவாகக் கட்டிமுடிக்கப்பட்டதாகக் கூறினர்கள்.

சட்டமன்ற விடுதித் திறப்பு விழா முடிந்த பின்னர் புதிய கட்டிடம் இந்திய அதிபருக்குச் சுற்றிக் காண்பிக்கப் பட்டது. முதலமைச்சர் அண்ணவும் அவருடன் கூடப் போனர். கருத்தரங்கை முன்னிட்டு மேற்படி விடுதியில் புத்தகக் கடைகள் வைத்திருந்தார்கள். அந்தக் கடைப் பக்கம் இந்திய அதிபர் சென்றபோது முப்பது நாளில் தமிழ் பயில்க. (*Learn Tamil in 30 Days*) என்னும் நூல் அண்ணவின் கண்ணில் பட்டது. உடனே அதில் ஒரு பிரதியை எடுத்து இந்திய அதிபரிடம் வழங்கினர். அப்புத்தகத்தின் மற்ெருரு பிரதி சென்னை மாநில ஆளுநர் உஜ்ஜல் சிங்குக்கு வழங்கப்பட்டது. அண்ணவுக்கும் அதில் ஒரு பிரதி வழங்கும்படி உஜ்ஜல் சிங் சிபாரிசு செய்தார்.

'எனக்கு ஏன்?' என்றுர் அண்ண.

'அதிபரும் நானும் தமிழ்ப் பயிற்சியில் அடையும் முன்னேற்றத்தை நீங்களும் சரிபார்க்க இப்புத்தகம் உங்களுக்கு உதவும்' என்று உஜ்ஜல் சிங் பதிலளித்தார்.

இப்புத்தக அன்பளிப்பைச் சாதாரண நிகழ்ச்சியாகத் தள்ளிவிடுவதற்கில்லை. கருத்தரங்கின் தொடக்கத்தி லிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளிலும் தமிழக முதல்வர் நிகழ்த்திய உரைகளின் பின்னணியோடு இப்புத்தக அன் பளிப்பையும் இணைத்துப் பார்த்தால்தான் உண்மையான பொருள் விளங்கும்.

பெரிய நம்பிக்கை

முதல்நாள் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் பேசும் போது அண்ணா தமிழ்மொழியின் எதிர்காலம் பற்றி பெரிய நம்பிக்கைகளை வெளியிட்டார். தமிழ் ஆட்சி மொழி இணைப்பு மொழி தேசியமொழி ஆகும், எதிர் காலம் குறித்து மிகுந்த நம்பிககையோடு அவர் பேசினார். ஆனால் எல்லாவற்றுக்கும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் அவர் தவறவில்லை.

கருத்தரங்கின் இறுதி நாளில் உலக அறிஞர்களின் முன்னிலையில் அண்ணா நிகழ்த்திய பேச்சு மிகவும் பொருள் பொதிந்ததாக அமைந்தது ஆங்கில மொழியில் தமிழக முதல்வர் நிகழ்த்திய அந்த உரை அறிஞர்களைப் பிரமிக்க வைத்தது. தமிழர்கள் தங்கள் தாய்மொழி யிடத்துக் கொண்டுள்ள இணையற்ற அன்பை உலகம் அறிவதற்கு இக்கருத்தரங்கு நன்கு உதவியிருப்பதாகக் குறிப்பிட்ட தமிழக முதல்வர், தாய் மொழிக்கு ஊறு என்றால் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை.

இந்தியாவில் நிலவும் கடுமையான மொழிச் சிக்க லுக்கு மத்தியில் தமிழக அரசாங்கத்தின் கொள்கை

நிலைக்கு உலகத் தமிழ்க் கருத்தரங்கை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துவதில் தமிழக முதல்வர் மிகவும் சாமர்த்திய மாக நடந்து கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவருடைய ஒவ்வொரு பேச்சிலும் புதுடில்லியை எச்சரிக்கும் குறிப்புக்கள் அடங்கிக் கிடந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய அதிபருக்கு 'தமிழ் ஆசான்' புத்தகத்தையும் எடுத்து வழங்கத் தவற வில்லை தமிழக முதல்வர். 'முப்பது நாளில் தமிழ் படி' என்று கட்டளையிடுகிறது அப்புத்தகம். இந்தியாவின் இணைப்பு மொழியாக, பொதுமொழியாகத் தமிழ் வரு கின்ற பொற்காலத்தைக் கணித்துக் கொண்டிருக்கிற தமிழக முதல்வர் இந்திய அதிபருக்குத் தமிழைப் படித்துக் கொள்ளும்படி சிபாரிசு செய்ததில் வியப்பில்லை.

9

கருத்தரங்கில் இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் கடுமையான மோதுதல்களை உண்டாக்கின.

'சங்ககாலத்திய தமிழ் பிராமி கல்வெட்டுக்கள்' பற்றி திரு. ஐராவதம் மகாதேவன் படித்த கட்டுரையும் 'தமிழ் மொழியின் வருங்காலம்' என்னும் தலைப்பில் திரு. க சந்தானம் படித்த கட்டுரையும் தீவிரக் கருத்து வேறுபாடுகளுக்கும் கொந்தளிப்புகளுக்கும் காரணமாக அமைந்தன.

ஐ ஏ எஸ். அதிகாரியான திரு ஐராவதம் மகாதேவன் இந்திய அரசாங்கத்தின் உணவுத் துறையில் துணைச்செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

கோலாலம்பூர் கருத்தரங்கிற்கும் திரு மகாதேவன் வந்திருந்தார். கோலாலம்பூரிலும் இதே தலைப்பில் ஒரு கட்டுரையை அவர் படித்தார் திரு மகாதேவனின் அரிய ஆராய்ச்சி முயற்சிகளும் அதனை அவர் கல்வெட்டுக்களின் படங்களைக் கொண்டு விளக்கிய முறையும் கருத்தரங்குப் பேராளர்களை பெரிதும் கவர்ந்தன

ஆனால் அவர் தமிழுக்கு வரிவடிவம் ஏற்பட்டது பற்றித் தமது கல்வெட்டு ஆராய்ச்சியைக் கொண்டு வெளியிட்ட முடிவு அறிஞர்களில் பெரும்பாலோருக்கு அதிர்ச்சியை அளித்தது. கி. மு இரண்டாவது நூற்றாண்டுக்கு முன்புவரை தமிழுக்கு எழுத்து இல்லை என்றும் அதன் பிறகுதான் முதன் முதலாக பிராமி எழுத்தில் தமிழ் எழுதப்பட்டதென்றும் அவர் வெளியிட்ட முடிவு ஏற்கத்தக்கதில்லை என்பது வெளிப்படை.

தமிழ் எழுத்தின் தோற்றத்தை நிர்ணயிப்பதற்குக் கல்வெட்டு ஆராய்ச்சி மட்டும் போதாது மற்றும் பல்வேறு துறை ஆராய்ச்சியாளர்களும் தத்தம் துறைகளை ஆய்ந்து அதன் பின்பு தமிழ் எழுத்தின் தோற்றம் பற்றிய காலம் தீர்மானிக்கப்படவேண்டும்.

திரு. மகாதேவன் தமது ஆராய்ச்சி உற்சாகத்தில் அவசரப்பட்டு இப்படியொரு திட்டவட்டமான முடிவைத் தமது கட்டுரையில் வெளியிட்டு விட்டார்.

பொதுவாக ஆராய்சிக் கருத்தரங்கில் உணர்ச்சிக்கும் பற்றுக்கும் இடமில்லை. உண்மையைத் தக்க ஆதாரங்

களோடு நிறுவுவதுதான் ஆராய்ச்சியாளர்களின் பணி என்றாலும் திரு. மகாதேவன் தமது முடிவுகளை மற்ற ஆராய்ச்சிப் பரப்புக்களை கருத்திற் கொள்ளாமல் அவசரப்பட்டுக் கூறி விட்டார் என்றே பேராளர்கள் பலர் கருதினர். பேராசிரியர் இலக்குவனார் உள்ளிட்ட பலர் கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டார்கள்.

சங்க இலக்கியத்தின் காலமே கி. மு. இரண்டாம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. திருவள்ளுவரின் காலமும் அதனை ஒட்டியே இருக்க வேண்டுமென்று சொல்கின்றனர். தொல்காப்பியம் இவற்றுக்கெல்லாம் முற்பட்ட நூல். அதன் காலம் பற்றிப் பல கருத்துக்கள் நிலவிய போதிலும் சங்க இலக்கியங்களுக்கு மிகவும் முற்பட்ட நூல் தொல்காப்பியம் என்பதில் யாருக்கும் ஐயப்பாடில்லை.

அப்படியிருக்கும்போது தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு—அதுவும் இரவல் எழுத்தில் தொடங்கிற்று என்று கூறுவது ஊற்றுக்கு நிற்காத வாதமாகும்.

திரு. மகாதேவன் ஆராய்ச்சிமீது மற்றோர் தனி விவாதம் நடைபெற்று அதில் தமது அவசரப்பட்ட முடிவுக்கு அவர் வருத்தம் தெரிவித்துக்கொண்டார். தமிழ் எழுத்தின் தோற்றம் பற்றிய தமது கருத்தை அவர் திரும்பப் பெற்றுக்கொண்டார் என்பதுதான் இதன் பொருள். அத்துடன் அப்பிரச்னை முடிவுற்றது.

மற்றொரு கட்டுரை

கருத்து வேறுபாடுகளைக் கிளப்பிய மற்றொரு கட்டுரையை எழுதிய திரு. க. சந்தானம் அரசியலில்

பெரிய பதவிகளை வகித்தவர். தமிழிலும் நீண்ட காலமாக எழுதிவருபவர். ஆகவே, ''தமிழ் மொழியின் வருங் காலம்'' பற்றித் தமது கருத்தை வெளியிடும் தகுதி அவருக்கு நிறைய உண்டு.

திரு. சந்தானம் தமது கட்டுரையை ஆங்கிலத்தில் படித்தார். அதனைத் தமிழில் தாமே மொழிபெயர்த்து அச்சிட்டுப் பேராளர்களுக்கு வழங்கவும் அவர் தவற வில்லை. அக்கட்டுரையில் முக்கியமாகத் தமிழில் அறி வியல்பாடங்களைப்போதிப்பது சம்மந்தமாக திரு. சந்தானம் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார். ''புதிய அறிவுத் துறைகளைக் கற்பிபபதற்கு இன்னும் முப்பது ஆண்டுக் காலமாவது ஆங்கிலத்தின் கையைப் பிடித்துக்கொண்டு தான் தமிழ் நங்கை நடந்தாக வேண்டும்'' என்னும் தொனியில் ஆங்கிலம் உயர்கல்விக்குப் பயிற்று மொழியாக நீடிக்கவேண்டும் என்பதை அவர் வற்புறுத்தி இருந்தார்.

இது அவருடைய கருத்து. இதனைச் சொல்ல அவருக்குள்ள உரிமையை வேறு யாரும் மறுப்பதற்கில்லை ஆனல் திரு சந்தானம் தமது கட்டுரையில் குறிப்பிட் டிருந்த பின்வரும் வாசகம் கடுமையான கண்டனத்திற்கு உரியதென்பதில் ஐயமில்லை.

''சில வெறியர்கள் நாளைக்கே எல்லாத் துறைகளிலும் தமிழ் ஒன்றே போதன மொழியென்று அரசாங்கமோ சர்வகலாசாலையோ தீர்மானித்துப் பிரகடனம் செய்து விட்டால் உடனே தமது நோக்கம் நிறைவேறி விடுமென்று எண்ணியுள்ளனர். இதைப்போல் தமிழின் வருங்காலத்துக்கு தீங்கு விளைவிக்கும் வழி வேறில்லை.''

இதில் "வெறியர்கள்" என்னும் சொல்லேச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. கடுமையாக எதிர்த்து திரு சந்தானம் அச்சொல்லேத் திரும்பப் பெருவிட்டால் தாம் வெளிநடப்புச் செய்யப் போவதாக அறிவித்தார். அவரைத் தொடர்ந்து மேலும் பலர் "வெறியர்கள்" என்னும் சொல்லேக் கண்டித்துப் பேசினுர்கள்.

திரு சந்தானம் தமது கட்டுரையில் மற்ருெரு பகுதியில் ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டுமென்று கூறுபவர்களேப் "பெரியோர்கள்" என்று கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

அப்பகுதி வருமாறு:—

"இப்பொழுது இருப்பதுபோலவே மக்கள் உணர்ச்சிக்கும் விஞேதத்திற்கும் பிரச்சாரத்திற்கும் தமிழ் கருவியாக இருந்து உயர்தரக் கல்வியும் விஞ்ஞானமும் இயந்திரத் தொழிலும் தேசிய உலக உறவுகளும் ஆங்கிலத்தில் இருந்து வருவதே நலம் என்று சில பெரியோர்கள் கூறுகின்றனர்."

ஆங்கிலம் பயிற்று மொழியாகவும் அதிகாரபீட உறவு மொழியாகவும் நீடிக்க வேண்டுமென்று சொல்கிறவர்களேப் "பெரியோர்கள்" என்று குறிப்பிட்ட திரு. சந்தானம் எல்லாத்துறைகளிலும் தமிழ் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்துபவர்களே "வெறியர்கள்" என்று வர்ணித்தது தமிழ்க் கருத்தரங்கில் தமிழ்ப் பற்றுக்கும் தமிழார்வத்திற்கும் இழைக்கப்பட்ட பெரிய அவமதிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழர்கள் அடங்கிய கூட்டம், தமிழ்நாடு ஆகிய இடங்களில் மட்டுமே யாரும் இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியும்!

திரு. சந்தானத்தின் பேச்சைக் கேட்டுச் சிலம்புச் செல்வருக்கு ஆவேசம் வந்ததில் வியப்பில்லை. உண்மை யான தமிழுணர்ச்சி கொண்ட யாருக்கும் "வெறியர்கள்" என்னும் சொல் ஆத்திரத்தை உண்டாக்கவே செய்யும்.

திரு ம பொ சி. கருத்தரங்கு நிகழ்ச்சியில் மிகவும் அக்கறையோடு பங்கெடுத்துக் கொண்டார். கோலாலம் பூரில் தமிழ்க் கட்டுரைகளை அச்சிட்டுக் கொடுக்கவில்லை என்பதற்காகப் போர்க்குரல் எழுப்பி ஏற்கனவே ஒரு முறை 'அமளிக்காரர்' என்று கெட்ட பெயர் எடுத்திருப் பதால், சென்னை நிகழ்ச்சிகளில் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருக்கிறார் என்று நினைத் தேன். ஆனால், திரு சந்தானத்தின் கட்டுரை அவருடைய பொறுமையையும் சோதித்துக் கொதித் தெழச் செய்துவிட்டது.

தயங்கி மயங்கி

தமிழில் அறிவியலைக் கற்பிப்பது இயலுமா என்று தமிழர்கள் இவ்வாறு தயங்கி மயங்கித் தடுமாறுவதைக் கண்டு இஸ்ரேல் பேராசிரியர் டாக்டர் ராபினுக்கு ஒரே சிரிப்பு. திரு. சந்தானம் கட்டுரைக்கு எழுந்த எதிர்ப்பில் அவரும் பங்கு கொண்டார் இஸ்ரேல் மிகப் புதிய நாடு. எனினும் தங்களின் தாய் மொழியான எபிரேயு (ஹீப்ரு) மொழியையே அறிவியல் பாடங்களுக்குப் பயிற்சிமொழி யாக கொண்டிருக்கிறார்கள். இதனைச் சுட்டிக்காட்டி தமிழ்மொழி இன்னும் முப்பது ஆண்டுகளுக்குக் காத் திருக்க வேண்டும் என்று கூறப்படுவதை ஒதுக்கித் தள்ளினார் டாக்டர் ராபின் சிலம்புச் செல்வரின் கருத்துக்கு அவர் பேச்சு பக்கபலமாக அமைந்தது.

இறுதியில் திரு. சந்தானம் 'வெறியர்கள்' என்னும் சொல்லேத் திரும்பப் பெற்றுக்கொண்டதால் வெளிநடப்புக்கு அவசியமில்லாமல் நெருக்கடி முடிவுக்கு வந்தது.

இந்த நெருக்கடியைத் தோற்றுவித்ததால் சிலம்புச் செல்வர் மீது சிலருக்குக் கோபம்! 'எங்கே போனுலும் இந்த மனிதர் ஏதாவது கலகத்தையே உண்டுபண்ணுகிருர்' என்று முணுமுணுத்தார்கள்.

ஆனுல் தமிழகத்தில் தமிழ் மொழியின் பாதுகாப்பு, பண்பு, எதிர்காலம் ஆகிய துறைகளில் தெளிவும் விட்டுக் கொடுக்காத மனக் உறுதியும் உள்ள ஒரே பெருமகனுக ம. பொ. சி. விளங்குகிருர் என்பதே என் கருத்து.

இந்தியை எதிர்க்கும் பலருக்கு அவருடைய ஆங்கில எதிர்ப்புப் பிடிக்கவில்லை. பயிற்சி மொழியைப் பொறுத்தவரையில் அவர் நெடுங்காலமாக வற்புறுத்தி வருகிற கொள்கையைத் தமிழக அரசாங்கம் இப்போதுதான் அதுவும் தமிழ்க் கருத்தரங்கிற்குப் பிறகுதான் ஏற்றுக் கொண்டிருக்கிறது

திரு சந்தானத்தின் கட்டுரையும் அதற்கு எழுந்த கடுமையான எதிர்ப்பும் தமிழக அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் என்று சொல்வதும் தவருகாது. அதற்கு முன்புவரை இதுபற்றிக் கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியனும் மற்றவர்களும் சற்று தயக்கமான கருத்துக்களேயே வெளியிட்டு வந்தார்கள்.

கருத்தரங்குக்கு வந்திருந்த இலங்கை ஊராட்சி மந்திரி திருச்செல்வமும் மற்றும் இலங்கைப் பேராளர்களும் இவ்வகையில் தமிழக அரசாங்கத்தின் தயக்கத்

தையும் பயத்தையும் போக்கிஞர்கள் என்று சொல்வதும் அவசியமாகும்.

இலங்கையில் பல்கலைக் கழகம் வரையில் எல்லா நிலைகளிலும் தமிழ் பயிற்சிமொழி ஆக்கப்பட்டுத் தமிழில் போதனை சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இதனை இலங்கை மந்திரி திருச்செல்வம் கடற்கரைப் பொதுக்கூட்டத்திலிருந்து தாம் பேசிய எல்லாக் கூட்டங் களிலும் குறிப்பிடத் தவறவில்லை. அது மட்டுமன்றிப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலும் அவர் களின் இச்சாதனையை அவர் அழுத்தமாகத் திரும்பத் திரும்பக் கூறி வந்தார், இலங்கை அரசாங்கத்தின் கலைச் சொல்லாக்கத் தொகுதிகளும் தமிழக அரசாங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தமிழ் மொழியின் பிறப்பிடமாகவும் நிலைக்களமாக வும் திகழ்கிற தமிழகத்தில் நிகழ்த்த இயலாத சாதனை களைச் சேய் நாடான இலங்கை துணிவோடு செய்து முடித்திருக்கிறது. பயிற்றுமொழி, ஆட்சிமொழி முதலான துறைகளில் தமிழகத்திற்கு இலங்கை வழிகாட்டிக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்கில மோகம்

ஏன் இந்த நிலை? தமிழகத்தில் படித்தவர்கள் எனப் படுவோரிடம் காணப்படுகிற ஆங்கில மோகமும் அடிமை மனப்பான்மையுமே இதற்குக் காரணமாகும். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் லெட்சுமணசாமி முதலி யார், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் போன்ற தமிழக மேதைகள் பலருக்குத் தமிழில் உண்மையான நம்பிக்கை கிடையாது. தமிழின் பெயரால் நடக்கிற

'அரசியல்' கிளர்ச்சிகள் தமிழ்நாட்டில் மிகுதி. அந்த அளவுக்குத் தமிழை வளர்க்கும் தொண்டுகளும் தமிழ் மொழியிடத்து நம்பிக்கையும் கிடையாது.

இலங்கை மந்திரியும் மற்றும் இலங்கை அறிஞர்களும் இடித்துக் காட்டிய பிறகு இவ்வகையில் தமிழகத்தில் ஒரு துணிவும் மனமாற்றமும் பிறந்திருக்கிறது. தமிழைச் சுற்றிப் படர்ந்திருக்கும் தாழ்ந்த மனப்பான்மையை அகற்றுவது தமிழக அறிஞர்களின் கடமையாகும். (தமிழுக்குத் துதிபாடிக் கொண்டிருப்பதால் மட்டும் தமிழ் வளர்ந்துவிடாது.) எல்லாத் துறைகளிலும் தமிழ் ஆட்சி செலுத்துகிற பொற்காலத்தைத் தமிழகத்தில் உருவாக்க அவர்கள் முற்பட வேண்டும். கடுமையான உழைப்பு இதற்குத் தேவை. அலங்காரப் பேச்சுக்களால் மட்டும் சாதிக்கக் கூடியதல்ல இது.

கருத்தரங்கின் முழுக் கூட்டம் ஒன்று முழுக்க முழுக்கத் தமிழில் நடைபெற்றது. மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பன்மொழிப்புலவர் தெ பொ. மீனுட்சிசுந்தரனுர் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர். 'காலந்தோறும் தமிழ்' என்னும் தலைப்பில் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர் தமிழின் வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டினுர். இக்கட்டுரை மீதும் நுணுக்கமான பல கேள்விகளைத் தமிழகப் புலவர்கள் எழுப்பினுர்கள். அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு எழுப்பிய கேள்விகள் சிந்தனைக்கு விருந்தாக அமைந்தன.

'தமிழ் மொழியைக் காட்டுமிராண்டி மொழி என்று பெரியார் சொன்னதை டாக்டர் மு வரதராசனுர் ஒப்புக் கொள்கிருரா?'—இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுக்

கருத்தரங்கில் விறுவிறுப்பை ஏற்படுத்தினர் தொழில் மேதை ஜி. டி. நாயுடு.

டாக்டர் மு. வ. இக்கேள்விக்கு யாது பதிலளிக்கப் போகிருர் என்பதை அறிய எல்லோரும் ஆவலோடு இருந்தார்கள்.

'இல்லை' என்று ஒரே வார்த்தையோடு தமது பதிலை ரத்தினச் சுருக்கமாக டாக்டர் மு. வ. முடித்துக் கொண்டது பலருக்கு ஏமாற்றமாக இருந்தது.

'காட்டுமிராண்டி மொழி' என்று பெரியார் வெளியிட்ட கருத்தைத் தமிழகப் புலவர் கூட்டம் கொதித்தெழுந்து கண்டித்திருக்க வேண்டும். அதற்கு மாருகப் பெரியார் வெளியிட்ட கருத்துக்குப் புது வியாக்கியானங்களும் சமாதானங்களும் சப்பைக்கட்டுகளும் தமிழகத்தில் மந்திரிகளாலும் தலைவர்களாலும் வெளியிடப்பட்டு வந்தது விந்தையே ஆகும்.

பெரியாருக்கு அவருடைய வயது, தொண்டு ஆகியவற்றுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பது முறையே ஆகும். ஆனல் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று அவர் சொல்லும்போது பெரும் புலவர்கள்கூட அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு மௌனிகளாக அமர்ந்திருப்பது அவர்கள் பயின்ற தமிழுக்குச் செய்கின்ற துரோகமாகும். பெரியார் பேச்சுக்கு மெருகும் விளக்கமும் கொடுத்து அதனை நிலைநிறுத்த முற்படுவது பெரிய அநீதி ஆகும்.

திரு. சந்தானம் 'வெறியர்' என்னும் சொல்லைத் தமது கட்டுரையில் சேர்த்ததற்காக பெரிய நெருக்கடியில் சிக்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆனல்

தமிழைக் 'காட்டுமிராண்டி மொழி' என்று கூறிய பெரியாரைத் தட்டிக் கேட்கவும் சுட்டிக் காட்டவும் எந்தப் புலவரும் முன்வரவில்லே. நக்கீரர் பரம்பரையில் வந்த தமிழ்ப் புலவர்களுக்கு இது பெருமை என்று சொல்ல முடியாது.

10

ஜனவரி 7ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலேயில் மாமல்ல புரத்திற்குச் செல்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. தமிழக அரசின் ஆறு பேருந்து வண்டிகளில் கருத்தரங்குக்கு வந்திருந்த பேராளர்களே மாமல்லபுரம் சிற்பக் கோயில்களேப் பார்க்க அழைத்துச் சென்ருர்கள்.

பேராளர்கள் சற்று ஓய்வாகத் தமிழகத்தின் வெளிப்புறத்தைக் காண்கின்ற முதல் வாய்ப்பாக மாமல்லபுரம் ஏற்பாடு அமைந்தது.

சென்னேயில் பல ஆண்டுகள் இருந்திருக்கின்றேன். எனினும் அப்போதெல்லாம் மாமல்லபுரத்திற்குச் செல்லாமல், உலகத் தமிழ்க் கருத்தரங்குப் பேராளன் என்னும் முறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க அத்துறைமுகத்தை இப்போதுதான் பார்க்கும் பேறு பெற்றேன்.

மாமல்லபுரத்தைப் பற்றியும் அதன் கலேச் சிறப்பு குறித்தும் விவரித்து எழுத நான் விரும்புவில்லே தமிழ் வாசகர்களுக்கு மாமல்லபுர வர்ணனே சற்று மிகையென்பதே என் கருத்து.

பல்லவ மன்னர்களில் மகேந்திரவர்மன் 'சித்திர காரப் புலி' என்னும் விருது பெற்றவன். அவனுக்கு ஓவியத்திலும் சிற்பத்திலும் இருந்த ஈடுபாடு மாமல்லபுரம் என்னும் கலைப்புதையலாக உருவெடுத்திருக்கிறது என்று கூறலாம்.

மகேந்திரவர்மனுக்குப் பிறகு அரியணை ஏறிய நர சிம்மவர்மன் 'மாமல்லன்' என்று புகழ்பட வாழ்ந்தான். அவன் பெயரிலேயே மாமல்லபுரத்தை மகேந்திரவர்வன் அமைத்தார் என்று சொல்கிறார்கள்.

'மகாபலிபுரம்' என்னும் பெயர் பிற்காலத்தில் புகுந்து விட்ட பெயராகும். 'மகாபலி'க்கும் மாமல்லபுரம் சிற்பங் களுக்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகத் தோன்ற வில்லை. புராண பக்தர்களின் திருவிளையாடல்களினாலோ அல்லது வழக்காற்றில் பெயர் திரிந்தோ மாமல்லபுரம் மகாபலிபுரமாகச் சிதைந்துவிட்டது. இன்னும் அந்த ஊரின் பெயர் மகாபலிபுரமாகவே காட்சியளிக்கிறது. உருமாறிச் சிதைந்து போயிருக்கும் ஊர்ப்பெயர்களை மாற் றம் செய்து வருகிற தமிழக அரசின் கடைக்கண் பார்வை மாமல்லபுரத்தின் மீதும் விரைவில் விழுமென்று நம்பலாம். மாமல்லபுரம் என்னும் பெயர் அதிகாரத்துவ முத்திரை பெறுவது அவசியமாகும்.

கலைகளின் பொற்காலம்

தமிழகத்தில் பல்லவர்களின் ஆட்சிக்காலம் கலை களின் பொற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும். கி பி 300 முதல் கி பி 800 வரை காஞ்சியைத் தலை நகரமாகக் கொண்டு பல்லவர்கள் ஆட்சி புரிந்து வந்தார் கள். அப்போது மாமல்லபுரம் பல்லவர்களின் அனைத்

துலகத் துறைமுகமாகத் திகழ்ந்து வந்திருக்கிறது. பேராசிரியர் கல்கி தமது 'பார்த்திபன் கனவு' 'சிவகாமி யின் சபதம்' ஆகிய வரலாற்றுப் புதினங்களில் மாமல்ல புரத்தின் ஏற்றமிகு அந்நாட்களைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இன்று மாமல்லபுரம் ஒரு காலத்தில் துறைமுகமாக விளங்கியது என்பதற்கு அத்தாட்சியாகப் பழைய கலங்கரை விளக்கம் ஒன்றும் புதிய கலங்கரை விளக்கம் ஒன்றும் இருக்கின்றன.

மிகவும் அமைதியான மீனவர் கிராமம்போல மாமல்லபுரம் இப்பொழுது இருக்கிறது. வெளிநாட்டுக் காரர்களையும் உல்லாசப் பிரயாணிகளையும் கலை ரசிகர் களையும் ஈர்க்கின்ற இந்த ஊரில் இப்பொழுது ஐநூறு வீடுகள் மட்டுமே இருக்கின்றன.

சென்னையிலிருந்து பேருந்து வண்டிப் பயணம் சுமார் இரண்டு மணி நேரம் பிடிக்கிறது. பெரும்பாலும் தமிழகத்திற்கு வருகிற சுற்றுப் பயணிகள் மாமல்லபுரத் திற்குச் செல்லத் தவறுவதில்லை. ஆகவே இந்தியாவின் சுற்றுப் பயணத்துறைக் கவர்ச்சிகளில் ஒன்றாக மாமல்ல புரம் புதிய புகழைப்பெற்று வருகிறது.

பேருந்து வண்டிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து புறப்பட்டன. நாங்கள் அமர்ந்திருந்த பேருந்து வண்டி முதல் வண்டியாகச் சென்றதால் 'வழி காட்டி' ஒருவரை எங்கள் வண்டியில் ஏறிக்கொள்ளும்படி அனுப்பி வைத்தார்கள்.

'வழிகாட்டி' உடன் வருவதால் மாமல்லபுரத்தைப் பற்றிய நுணுக்கங்களைச் சரிவரத் தெரிந்துகொள்ள முடியுமென்று நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்.

வழிகாட்டிக்கு டிரைவருக்குப் பக்கத்திலுள்ள முதல் ஆசனம் வழங்கப்பட்டது. சென்னை அரசாங்க உத்தி யோகஸ்தர் பாணியில் பஞ்சகச்சம், மேலங்கி, தலைப் பாகை சகிதம் 'வழிகாட்டி' தமது அசனத்தில் வந்து அமர்ந்தார். அரசாங்கத்தின் சுற்றுப்பயணத்துறையி லிருந்து வந்திருக்கக்கூடுமென்று கருதினேன்.

பிரயாணத்திற்கு இடையில் ஒலிபெருக்கும் கருவி மூலம் இடையிடையே அவர் விளக்கம் கூற முற்பட்டார். ஆனால் முதியவராக இருந்ததால் அவருடைய 'குரல்' எடுபடவில்லை. பலருக்கு அவர் கூறுவது யாது என் பதே விளங்கவில்லை. எல்லாரும் முணுமுணுத்தார்கள்.

உரத்த குரலில் பேசக்கூடிய இளைஞர் ஒருவரை வழிகாட்டியாக அனுப்பக்கூடாதா என்று வருத்தப்பட் டார்கள். வழிகாட்டியாக வந்த பெரியவர் எங்களின் முணுமுணுப்புக்களைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

மாமல்லபுரம் செல்லும் வழியில் சளுவன் குப்பம் என்னும் ஊரில் பேருந்து வண்டிகள் நிறுத்தப்பட்டன. கடற்கரை யோரமாக உள்ள இக்குப்பத்தில் 'புலிக் குகை'யைப் பார்ப்பதற்காக எங்களை அழைத்துச் சென் றார்கள்.

'புலிக்குகை' என்று அழைத்தாலும் அங்கேயிருப் பது சிங்கத்தின் குகையே ஆகும். வாய் திறந்து உறுமும் சிங்கத்தின் முக அமைப்போடு இக்குகை அமைந்திருக் கிறது. அப்படி இருக்கும்போது ஏன் இதற்குப் புலிக் குகை என்று பெயரிட்டார்கள் என்பது தெரியவில்லை,

குகை மண்டபத்திற்குப் பக்கத்தில் அதிரண சண்டன் மண்டபம் என்னும் பெயருள்ள பாறையில் குடையப்பட்ட மற்ருெரு மண்டபமும் இருக்கிறது. அதிரண சண்டன் என்பது ராசசிம்ம பல்லவனின் விருதுப் பெயராகும். அவன் காலத்தில்தான் இந்தப் புலிக்குகை அமைக்கப்பட்டிருக்கிறது.

புலிக்குகையின் சிறப்பு அங்கே போன பிறகுதான் தெரிந்தது குகை மண்டபத்தில் அமர்ந்து ஒருவர் பாடிஞல் நெடுந்தூரம்வரை அந்தப் பாட்டு இனிமையாகக் கேட்கிறது.

எங்களுடன் வந்த 'வழிகாட்டி' கையில் ஒரு பெட்டியைக் கொண்டு வந்திருந்தார். அந்தப் பெட்டிக்குள் ஒரு புல்லாங்குழல் இருந்தது. புலிக்குகையில் தான் தெரிந்தது. குகையில் அமர்ந்து புல்லாங்குழலே எடுத்து ஊதினுர். அந்தக் குழலோசை கண்ணபிரானின் குழலோசையைவிட இனிமையாக இருந்தது. குகையைவிட்டு மிகத்தூரத்தே சென்று கடலோரத்தில் நின்றுகூட அந்தக் குழலோசையைப் பருக முடிந்தது,

புலிக்குகையின் அமைப்பில் ஒருவகை ஒலிபெருக்கி நுட்பம் இருப்பதாகச் சொன்னுர்கள். நவீன ஒலிபெருக்கியின் துணையில்லாமல் ஒலியைப் பரப்பக்கூடிய அமைப்புடன் அந்த மண்டபத்தைக் கட்டி இருக்கிருர்கள்.

நல்ல நிலவுக் காலங்களில் புலிக்குகையில் இசை நிகழ்ச்சிகளே நடத்தலாம். திறந்த வெளித் தியேட்டர்களேப் போலக் கடற்கரை வெளியில் ஆயிரக்கணக்கில் மக்கள் அமர்ந்து அந்நிகழ்ச்சிகளே ரசிக்கலாம்.

புலிக்குகையை இசைக் குகையாக மாற்றி சுற்றுப் பயணிகளுக்கு இன்னும் கவர்ச்சியுள்ள இடமாகத் திகழச் செய்யும் வாய்ப்பு இருக்கிறது. திறந்த வெளி அரங்க மாக அதனைப் பயன்படுத்தி அந்த கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பார்க்கவேண்டும். குறிப்பாக வெளிநாட்டுப் பிரமுகர்கள் வரும்போது அவர்களுக்குப் புலிக்குகையில் ஒரு மணி நேரம் இசை நிகழ்ச்சியை நடத்தலாம்.

புலிக்குகை பேராளர்களை மிகவும் கவர்ந்தது. வழி காட்டியுடன் வந்த பயனையும் அங்கேதான் பெற்றோம்.

பின்னர் மாமல்லபுரத்தில் வழக்கமாக எல்லாரும் பார்க்கும் குகைமண்டபங்கள், ஐந்து ரதங்கள், கடற் கரைக் கோவில் ஆகியவற்றைப் பார்த்தோம்.

அவசர அவசரமாக

மாமல்லபுரம் கலைக்கோவில்களை ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரத்தில் அவசர அவசரமாகப் பார்ப்பது அந்தப் பழமையான கலைப் புதையலுக்கு நியாயம் செய்வ தாகாது எங்களின் நேரத்திட்டப்படி ஆற அமர அவற்றைப் பார்க்க முடியாது.

ஆகவே மாமல்லபுரத்தைப் பார்த்தோம் என்னும் மனநிறைவோடு வேகவேகமாக பாறைச் சரிவில் குடைந் தெடுக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு மண்டபங்களையும் பார்த்தோம். பிறகு பஞ்சபாண்டவர் ரதம் என்று அழைக்கப்படும் ஐந்து ரதக் கோவில்களைத் தரிசித்தோம். ஒரே பாறையில் இககோயிலைச் செதுக்கியிருக்கிறார்கள். ஒரே கல்லைச் செதுக்கி விமானம், மாடங்கள். கரு அறை, தூண்கள், சிற்பங்கள் அனைத்தும் கொண்ட கோவிலாக வடித்திருக்கிறார்கள்.

கடற்கரையில் அலைகளைத் தொட்டபடி காட்சி தருகிற கடற்கரைக் கோவில் என் உள்ளத்தைத் தொட்டது.

சிதைந்த நிலையில் காணப்படுகிற இக்கோவிலை எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

பஞ்சரதம், பாறைக் குடைவுகள் முதலியவற்றில் காணாத ஒருவிதமான அழகுக் கவர்ச்சி கடற்கரைக் கோவிலுக்கு இருக்கிறது. அங்கே செல்கிற யாரும் முழுமையாக மன அமைதியைப் பெறுவது திண்ணம்.

சைவ—வைணவ ஒற்றுமைக்கு அடிகோலுகிற முறையில் கடற்கரைக் கோவில் விமானத்தில் இரு கோபுரங்கள் இணைந்திருக்கின்றன.

சாசனக் குறிப்பு

கடற்கரைக் கோவிலிலுள்ள சாசனங்களில் இராசேந்திரன் கடாரம், இலங்கை — ஆகியவற்றை வென்றது பற்றிய குறிப்புகள் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

சுவிட்ஜர்லாந்து அறிஞர் கார்ல்கெல்லர் போன்ற மேனாட்டுப் பெரியோர்கள் கடற்கரைக் கோயிலை நான்கு திசையிலும் சென்று சென்று நின்று நின்று பார்த்து மெய்மறந்தார்கள்.

கடற்கரைக் கோயிலைவிட்டு எங்களுக்குப் புறப்பட மனமில்லை. இருந்தும் பகலுணவுக்குச் சென்னைக்குத் திரும்பவேண்டிய கட்டாயமிருந்ததால் பேருந்து வண்டிகளில் அமர்ந்தோம்.

திரும்பும்போது வழிகாட்டும் பெரியவர் எங்களுடன் வரவில்லை. அவரைத் தேட முற்பட்டு விசாரித்தபோது எங்களுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது.

'புலிக்குகையில் புல்லாங்குழல் வாசித்தாரே, அந்த வழிகாட்டியைத்தான் தேடிக்கொண்டிருக்கிறோம்' என்று சொன்னேன்.

'வழிகாட்டியா? அந்த பெரியவர் இசைப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அல்லவா?' என்று பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் என் காதோடு காதாகச் சொன்னார்.

எனக்குத் திடுக்கென்று தூக்கிவாரிப் போட்டது. சென்னை கர்னாடக இசைக் கல்லூரியின் முதல்வரான பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களை ஒரு சாதாரண வழிகாட்டி என்று நினைத்துவிட்ட சிறுமைக்காக என் மனம் பெரிதும் வருந்திற்று.

எத்துணை அடக்கம்! சான்றாண்மைக்கு இலக்கண மாக அப்பெரியவர் என் கண்முன்னே இப்போழுதும் காட்சி அளிக்கிறார்! சிறு பிள்ளை போல நாங்கள் எழுப்பிய கேள்விகளுக்கெல்லாம் முகவாட்டமில்லாமல் அவர் விளக்கம் கூறிக்கொண்டிருந்தார்,

நான் அவரை முன்பு பார்த்ததில்லை. அதனால்தான் தவறாக நினைத்துவிட்டேன். ஆனால் என்னுடன் வந்த மற்ற பேராளர்களுக்கும் அவர் யார் என்பது தெரியாமல் போனது துரதிர்ஷ்டமே ஆகும். ஆரவாரமும் சுய விளம்பரமும் நிறைந்த இந்த உலகத்திற்கு உண்மையில் அவர் ஒரு வழிகாட்டிதான்!

குடிசை உபசரிப்பு

மாமல்லபுரத்திலிருந்து திரும்பும் வழியில் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'குடிசை' இல்லத்தில் எங்களுக்கு உபசரிப்பு ஒன்று நடந்தது. திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிரசித்தி பெற்ற சத்தியமூர்த்தி அவர்களின் புதல்வியாவார். அந்த உபசாரின்போது தமிழகத்தின் பிரபல எழுத்தாளரான அகிலன் முதலான பலரைச் சந்தித்து அளவளாவ முடிந்தது.

அப்போது 'தீபம்' ஆசிரியர் திரு. நா. பார்த்தசாரதி ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். 'உங்களைத் தவிர வேறொரு முருகு சுப்பிரமணியமும் கருத்தரங்குக்கு வந்திருக்கிறார் போலிருக்கிறதே!' என்றார் அவர்.

அவருடைய கையில் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டிருந்த 'பேராளர்கள் யார் எவர்?' என்னும் (*Who is who*) புத்தகம் இருந்தது. அந்தப் புத்தகத்தில் என் பெயருக்கு பக்கத்தில் யாரோ ஒரு புண்ணியவானின் படத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதனை திரு. பார்த்தசாரதி என்னிடம் காட்டியபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

என்னுடைய புகைப்படத்தை வேறு யாருடைய பெயருடனாவது அச்சிட்டிருக்கிறார்களா என்று தேடிப் பார்த்தேன். என் படத்தைக் காண முடியவில்லை.

கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் வெளியிட்ட அந்த அறிமுகத் தொகுப்பில் இப்படிப் பல ஆள்மாறாட்டங்கள் இடம் பெற்றிருந்தன. பலருடைய பெயர்களுக்குப் பக்கத்தில் படங்களே இல்லை.

நல்ல வேளையாக அந்தப் புத்தகம் விநியோகிப்பதை இடையில் நிறுத்திவிட்டார்கள், மிகவும் கவனக்குறை வாகவும் வேண்டா வெறுப்புடனும் அந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டும்

11

சென்னை மாநகரம் இந்தியாவில் மேதைகளும் அறிஞர்களும் நிறைந்த நகரம் என்று போற்றப்படுவ தாகும். அமரர் ஜவஹர்லால் நேருவே சென்னையையும் தென்னிந்தியாவையும் அறிவுக் கூர்மைக்காகப் புகழ் வதுண்டு.

பாரத புண்ணிய பூமிக்கு மட்டுமன்றி அகில உலகத்துக்கும் அறிவுரை வழங்கி வழிகாட்டக்கூடிய தவப்புதல்வர்கள் பலரைப் பெற்றெடுத்த பெருமை தென்னாட்டுக்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் உண்டு. தமிழகத்தின் தலைநகராகத் திகழும் சிங்காரச் சென்னை எப்பொழுதுமே 'மூளை பலம்' மிக்கவர்களின் உறைவிட மாக இருந்து வந்திருக்கிறது. அத்தகைய அறிஞர்களின் திருநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு பெருவெற்றியாக அமைந்ததில் வியப் பில்லை.

சென்னையின் அறிவுப் பிரகாசத்தைவிட அதனுடைய கலைச்சிறப்பே என் உள்ளத்தைக் கவர்வ தாகும். அந்த நகரத்தில் நான் படித்த காலத்திலும் பின்னர் அங்கு 'பொன்னி' இதழை நடத்திய காலத் திலும் மெரினா கடற்கரையும் நாள் தவறாமல் வாரந் தவறாமல் நிகழ்கிற உரைக் கோவைகளும் பட்டிமன்றங்

களும் இசை மன்றங்களும் கலைமன்றங்களும் நடத்துகிற இசை, நாட்டிய, நாடக நிகழ்ச்சிகளும் என்னை மிகுதியாக ஈர்ப்பதுண்டு.

அந்தக் காலத்தில் சென்னை நகரத்திலுள்ள நல்ல சிற்றுண்டி சாலைகளில் தேர்ந்து எடுத்த பலகாரங்களைச் சாப்பிடுவதே தனி இன்பம். இன்றும் சென்னையில் பிரபல சிற்றுண்டி சாலைகளின் சிறப்பு மங்கியிருப்பதாகத் தோன்றவில்லை.

சிற்றுண்டிகளையும் மதுரமான காப்பியையும் சென்னை நகரத்தில் பெறமுடிவதைப்போல, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் முதல்தரமான கலைநிகழ்ச்சிகளையும் அங்கு ஆண்டு முழுவதும் காணமுடியும்.

டிசம்பர், ஜனவரி மாதங்களைச் சங்கீத சீசனுக—கலைநிகழ்ச்சிகளின் பருவகாலமாகச் சென்னை கொண்டாடி வருவதுண்டு. அப்பொழுதுதான் பெரும்பாலும் இசை விழாக்கள் நடைபெறும். எனினும் ஆண்டு முழுவதும் சென்னையில் கலைத்துறை மணம் வீசிக் கொண்டுதான் இருக்கும். தமிழகத்தின் தலைசிறந்த நாடகக் குழுக்கள், பரதநாட்டியமணிகள், இசை மன்னர்கள் எல்லாரும் சென்னையில்தான் வாசம் செய்கிறுர்கள். நாடகங்களையும் மற்ற கலைநிகழ்ச்சிகளையும் நடத்துவதற்குப் பொருத்தமான பல அரங்கங்களையும் சென்னை பெற்றிருக்கிறது. எல்லாவற்றையும்விட தரமான அத்தனை கலைநிகழ்ச்சிகளையும் காசு கொடுத்து காண்பதற்கு ஆயிரமாயிரம் ரசிகர்களும் சென்னையில் இருக்கிறுர்கள்.

தரங்கெடடுத் தடுமாறி உருமாறி மக்களேச் சோமாறிகளாக மாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்த் திரைப் படங்களுக்கு மத்தியிலும் தரமான தமிழ் நாடகங்களும் நாட்டிய இசை நிகழ்ச்சிகளும் செழித்து வளர்ந்தோங்கி வருவது தமிழகத்தின் நற்காலமே. தமிழ்நாட்டு மக்களிடையே தரமான கலேயை ரசிக்கும் தன்மை ஆழமாக வேரூன்றி இருப்பதுதான் இதற்குக் காரணம். மேனுட்டு அலங்கோலங்கள் திரைப்பட உலகில் புகுந்து பேயாட்டம் போட்ட போதிலும் மேடைக் கலேயுலகம் பளிங்கு நீர் போலத் தூய்மையாக விளங்கி வருவது தமிழ்க் கலேகளின் நற்பேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

பிராங்க்லின் கருத்து

தமிழ்த் திரைப்படங்களேப் பற்றியும் தமிழ் நுண்கலே களேப் பற்றியும் தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகள் அமெரிக்காவின் கான்சல் ஜெனரலாகப் பணியாற்றிய டாக்டர் ஆல்பிரட் பிராங்க்லின் அண்மையில் 'ஆனந்த விகட'னில் வெளியான ஒரு பேட்டிக் கட்டுரையில், பின்வருமாறு கூறுகிருர்:

'கர்நாடக இசையிலும் சரி, பரதநாட்டியத்திலும் சரி, 'டிசிப்ளின்' தலேயாய பங்கு வகிக்கிறது. அந்தக் கட்டுப்பாடே இந்தக் கலேகளின் உயர்வுக்கும் காரணம் என்று நினேக்கிறேன். இது தமிழ் அறிவுக்கும் காரண மாக இருக்கலாம்.

கர்நாடக இசையின் மற்ருெரு சிறப்பு, ஒரே பாடகர், ஒரே பாடலே எத்தனே முறை பாடினுலும் ஒவ்வொரு முறையும் புதுப்புது அழகைக் கொட்டுகிருர்.

'இசையிலும் நாட்டியத்திலும் உயர்ந்திருக்கும் அளவு தமிழ்ப் படங்கள் இல்லை. 'டிசிப்ளின்' இங்கே துளியும் இல்லைபோலத் தோன்றுகிறது. பல ஆண்டு களுக்குமுன் அமெரிக்காவில் 'வெரைட்டி ஷோ' என்று கதம்ப நிகழ்ச்சி காட்டுவார்கள். அதை நினைவூட்டு கின்றன இன்றைத் தமிழ்ப் படங்கள்.'

திரு. பிராங்க்லினின் மேற்கண்ட கருத்து தமிழ்க் கலை வளர்ச்சியின் இரு துருவங்களைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தமிழ்த் திரைப்படங்களில் ஏற்பட்டு வருகிற தர வீழ்ச்சியையும் கலைச் சரிவையும் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு தமிழகத்தின் பெருங் கலைஞர்களை யும், தரமான ரசிகர்களையும் சார்ந்ததாகும். இப் போக்கைப் பொறுப்புள்ளவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது சரியன்று.

தமிழக் கருத்தரங்குக்கு வந்த உலகத் தமிழ் அறிஞர்களுக்குத் திகைக்குமுக்காடுகிற விதத்தில் கலை விருந்தும் உணவு விருந்தும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் மாலை 5-30 மணி முதல் இரவு 8 மணி வரையில் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலும் ராஜா அண்ணாமலை மன்றத்திலும் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் நான்கு நிகழ்ச்சிகள்! ஒன்று கூடச் சோடையில்லை! எல்லாம் முதல்தரமானவை! தமிழகத்தின் தலைசிறந்த கலைஞர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி இக்கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய் திருந்தார்கள். வெளிநாடுகளிலிருந்து போயிருந்தவர்

களுக்கு எதைப் பார்ப்பது, எதை விடுவது என்பது பெரிய சங்கடமாகிவிட்டது. அத்துடன் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் முடிவடையாததால் இரவு நேர விருந்துக்குச் செல்வதும் தாமதமாயிற்று. மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அடையாற்றிலுள்ள தமது சத்தியா ஸ்டுடியோவில் நடத்திய விருந்துக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தபோது காலியாக இருந்த தட்டுக்களையே பார்க்க நேரிட்டது. பிறகு வேறு ஏற்பாடு செய்து சாப்பாடு கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அண்ணுமலை மன்றத்திலும் நூற்றூண்டு விழா மண்டபத்திலும் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளைத் தவிர்த்து இரவில் பிரமுகர்கள் அளித்த விருந்துக்குப் பின்னரும் ஒவ்வொரு நாளும் நடனங்களும் நாட்டிய நாடகங்களும் இருந்தன. 'போதும் போதும்' என்று தெவிட்டும் அளவுக்குக் கலை நிகழ்ச்சிகளை நடத்தினுர்கள். பூம்புகாரிலும் தனியே கலை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடந்து கொண்டிருந்தன.

ஓய்வற்ற நெருக்கடி

பேராளர்களுக்குக் காலை 9 மணி தொடங்கி இரவு 12 மணிவரை இப்படிப் பலவகையான விருந்துகளை ஒன்றுக்குப் பின் ஒன்ருக ஏற்பாடு செய்திருந்தது, ஓய்வே இல்லாத 'நெருக்கடி'க்கு அவர்களை உள்ளாக்கியது என்று சொல்வதும் மிகையாகாது. ஆனுல் பேராளர்களுக்குச் 'சுதந்திரம்' இருந்தது. விரும்புகிற எதையும் தேர்ந்தெடுத்து ரசிக்கலாம். இல்லையேல் தங்களின் சொந்த அலுவல்களைப் பார்க்கலாம்.

கலை நிகழ்ச்சிகளில் வாய்ப் பாட்டு, நடனம், நாடகம், நாட்டிய நாடகம் முதலியவை இடம் பெற்றிருந்தன. சில கலை நிகழ்ச்சிகளை மட்டுமே என்னால் அமைதியாகப் பார்க்க முடிந்தது.

சந்திரகாந்தா குழுவினர் நடத்திய 'பொன்னியின் செல்வி' எல்லாவகையிலும் முதல்தரமான படைப்பாக அமைந்து என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அண்ணாமலை மன்றத்தில் ஒருமுறையும் பின்னர் செட்டி நாட்டரசர் ராஜா சர் முத்தையா செட்டியார் அளித்த விருந்தில் மறுமுறையும் பார்த்தேன்.

புகழ்பெற்ற ஆதிமந்தி—ஆட்டனத்தி கதையைச் சந்திரகாந்தா குழுவினர் நாட்டிய நாடகமாகத் தயாரித்திருக்கின்றனர். நடன அமைப்பு காட்சிகளின் அமைப்பு, கதை யோட்டம், பாட்டு அத்தனையும் மிக உயர்வாக இருந்தன. தமிழ்க் கலையின் மகோன்னத வளர்ச்சியை 'பொன்னியின் செல்வி' முழுமையாக பிரதிபலிக்கிறது என்று சொல்லலாம்.

பாட்டு மிகமிக அருமை. மாயவநாதன் எழுதிய பாட்டுக்கள் என்று கூறினார்கள். அற்புதமான கவிதை இசையுடனும் ஆடலுடனும் இணைந்து இன்பத்தைப் பாய்ச்சுகிறது. 'ஆண்டவனே ஆடுகிற நாடு' என்னும் கருத்தில் ஒரு வரி வருகிறது. அதனைக் கேட்டபோது உள்ளபடியே மெய்சிலிர்த்தது. தமிழகத்திற்கும் அருங்கலைகளுக்கும் உள்ள பிரிக்கமுடியாத நிலையான உறவை நடராசப் பெருமானின் திருக்கோலம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது. 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகத்தில் இடம் பெற்றிருக்கிற அந்த வரி மிகவும் பொருள் பொதிந்ததாகும்.

பாரதிதாசன் சேர தாண்டவம்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 'சேர தாண்டவம்' என்னும் பெயரில் ஆதிமந்தி கதையை உரைநடையில் நாடகமாக இயற்றித் தந்திருக்கிறார். அந்த நாடகத்தை நாளெல்லாம் படித்துக்கொண்டிருக்கலாம். சந்திரகாந்தா குழுவினரின் 'பொன்னியின் செல்வி'யை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அண்ணாவின் 'சந்திரோதயம்' நாடகத்தில் சந்திராவாக நடித்து அதன்மூலம் 'சந்திரகாந்தா' என்னும் பெயர் பெற்றவர் சந்திரகாந்தா ஆவார். கே. ஆர். ராமசாமி, மனோகர், பாலாஜி, சேவா ஸ்டேஜ் முதலான பல குழுக்களில் நடித்துப் புகழ்பெற்றிருக்கும் இவர் இப்போது 'சிவகாமி கலை மன்றம்' என்னும் பெயரில் நாட்டிய நாடகங்களை நடத்தி வருகிறார்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்னும் பழமொழிப்படி தமிழகத்தின் கலைச்சிகரத்திற்கு இந்த நாட்டிய நாடகத்தை ஓர் எடுத்துக் காட்டாகச் சொன்னேன். அருங்கலைத் துறையில் தமிழகம் உலக நாடுகளிடையே தலைநிமிர்ந்து நிற்கிறது. தமிழகத்தின் கலைக்குழுக்கள் உலக நாடுகளுக்கு அதிகாரபூர்வமாக அடிக்கடி அனுப்பி வைக்கப்பட்டால் இந்த அங்கீகாரம் இன்னும் உறுதி அடையும்.

தமிழகத்தின் கலைத்துறையிலிருந்து மற்ற நாடுகள் கற்றுக்கொள்ளவேண்டிய நுணுக்கங்கள் ஏராளம்!

வாகினி ஸ்டுடியோவின் அதிபர் திரு. பி. நாகி ரெட்டி வடபழனியிலுள்ள தமது விஜயா தோட்டத்தில் அளித்த விருந்தில் 'கரக' ஆட்டத்திற்கு ஏற்பாடு

செய்திருந்தார். திருவிழாக் காலங்களில் கரக ஆட்டத்தைப் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போயிருந்த எனக்கு அன்றைய நிகழ்ச்சி பெரிய மாற்றமாக இருந்தது. கரக ஆட்டத்தில் எத்தனை எத்தனை புதுமைகளைச் செய்ய முடியும் என்பதை அன்று காட்டிவிட்டார்கள். சலிப்பில்லாமல் கரக ஆட்டத்தை உலக அறிஞர்கள் ஒருமணி நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் அதன் தனிச் சிறப்பை ஓரளவு ஊகித்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும் மதிய உணவு விருந்து பேராளர்கள் தங்கியிருந்த புதிய சட்டமன்ற விடுதியில் நடைபெற்றது. 'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ். எஸ். வாசனும், ஹோ அண்கோ அதிபர் திரு. வி. எம். எம்பெருமானுர் செட்டி முதலான தொழிலதிபர்களும் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இரவு நேரத்தில் ஒவ்வொரு நாளும் விருந்துக்காக ஒவ்வொரு பிரமுகர் வீட்டுக்குப் பேருந்து வண்டிகளில் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். இது நல்ல அனுபவமாகவே அமைந்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 'அப்போட்ஸ்பரி'யில் விருந்தளித்து, தாம் நடித்த படங்களின் தொகுப்பைத் திரையிட்டுக் காட்டிப் பேராளர்களின் உள்ளத்தைக் கவர்ந்தார்.

மகத்தான மாற்றம்

'மக்கள் திலகம் எம். ஜி. ஆர். தமது விருந்தின் போது 'மகத்தான மாற்றம்' (*The Big Change*) என்னும் ஓர் ஆங்கில நூலைப் பேராளர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

தமிழகத்தில் தி. மு. கழகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்த கதையைச் சித்தரிக்கும் இந்நூல் பிரபல பத்திரிகையாளரான திரு கே. எஸ். ராமானுஜத்தினுல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த ஆட்சி மாற்றத்தின் வரலாறு இந்நூலில் படம் பிடித்து காட்டப்பட்டிருக்கிறது. இந்நூலே எழுதியவர் பழைய காங்ரஸ் மந்திரி திரு. க. சந்தானம் அவர்களின் புதல்வராவார். செட்டிநாட்டரசர் அளித்த விருந்தில்தான் ஒரு கல்யாண வீடு போலக் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது. அப்போது ராஜா நிகழ்த்திய உரையும் குறிப்பிடத்தக்கதாகும்.

'கல்கி' சதாசிவம் தமது 'கல்கி' தோட்டத்தில் விருந்தளித்து எம். எஸ். சுப்புலெட்சுமியின் இன்னிசை விருந்தையும் வழங்கினுர். அங்கே இந்தியாவின் முதிய ராஜ தந்திரி ராஜாஜியைத் தரிசிக்கும் வாய்ப்பைப் பேரா ளர்கள் பெற்றுர்கள். படாதிபதி திரு. ஏ. வி மெய்யப்பன் தமது ஏ. வி. எம். ஸ்டூடியோவில் நடத்திய விருந்தில் பானுமதியின் பரத நாட்டியம் இடம் பெற்றது. 'இந்தியன் எக்ஸ்பிரல்' 'தினமணி' முதலான பத்திரிகைகளே நடத்தி வரும் திரு. ராமனுத் கோயங்கா தமது எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டில் விருந்தளித்து யாமினி கிருஷ்ணமூர்த்தி யின் பரத நாட்டிய விளக்கத்திற்கும் ஏற்பாடு செய்திருந் தார். அவ்விருந்தில் 'தினமணி' ஆசிரியர் திரு. ஏ என். சிவராமனேச் சந்தித்து பேசுகிற வாய்ப்புக் கிட்டிற்று. பிரியா விடைபெறுகிற இறுதி நாளில் முதலமைச்சர் அண்ணுவின் விருந்து சட்டமன்ற விடுதிககு அருகே நிர்மாணிக்கப்பட்டிருந்த தனிப் பந்தலில் நடைபெற்றது. அங்குதான் பேராளர்களுக்கு கலேயேடு, கொட்டாங்கச்சி முதலிய பரிசளிப்புக்கள் நடந்தன.

ஒவ்வொரு விருந்திலும் தட்டுக்களைத் தூக்கிக் கொண்டு திரிய நேர்ந்தது. அண்ணா அளித்த விருந்தில் தான் ஆற அமர்ந்து இலைச்சாப்பாட்டை சுவைத்துச் சாப்பிட முடிந்தது. தமிழ்ப் பண்பாடு முழுமையாகப் பிரதிபலிக்கும் விதத்தில் இவ்விருந்தை நடத்தினார்கள். அகக்குழு, புறக்குழு இருதரப்பாரும் அவ்விருந்திற்கு வந்திருந்தார்கள். இரு குழுக்களின் சார்பிலும் நன்றி யுரைகள் நிகழ்த்தப்பட்டன

ராயப்பேட்டையிலுள்ள புதுக்கல்லூரியில் மலேசிய சிங்கப்பூர் பேராளர்களுக்கு ஜனவரி 7ந் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை தேநீர் விருந்து நடத்தினார்கள். மேற்படி கல்லூரியின் நிர்வாகிகளும் அங்கு பயில்கிற மலேசிய, சிங்கப்பூர் மாணவர்களும் சேர்ந்து இவ்வரவேற்பை நடத்தினார்கள். புதுக்கல்லூரியின் தலைவர் திரு. எம். எஸ். ஏ. மஜீது மலேசிய சிங்கப்பூர் குழுவினரை மிகவும் பரிவோடு வரவேற்று பேசினார். அக்கல்லூரியில் நமது மாணவர்கள் பலர் பயில்வது குறிப்பிடத்தக்கது. மலேசிய மாணவர்களுக்குக் குறிப்பாக இடம் வழங்கும் சில கல்லூரிகளில் புதுக் கல்லூரியும் ஒன்றுஎன்பதையறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

ஜனவரி 9ந் தேதியன்று சென்னை நிருபர் சங்கம் கருத்தரங்குக்கு வந்திருக்கும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்குத் தமது அலுவலகத்தில் வரவேற்பு அளித்தது. இலங்கை மலேசிய, சிங்கப்பூர் பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். சென்னை நகரப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடுகின்ற நல்வாய்ப்பு அங்கு கிட்டியது.

12

உலகத் தமிழ்க் கருத்தரங்குக்கு வருகை புரிந்த உலக அறிஞர்களின் தமிழகச் சுற்றுலா, கருத்தரங்கு ஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்.

ஜனவரி 11ந் தேதி இரவு சென்னை எழும்பூரிலிருந்து ஒரு தனி ரயில் வண்டி கருத்தரங்கு அறிஞர்களை ஏற்றிக் கொண்டு தமிழகத்தின் தென்பகுதிக்குப் புறப்பட்டது.

அத்தனையும் முதல் வகுப்புப் பெட்டிகள். மொத்தம் 12 முதல் வகுப்புப் பெட்டிகள். குளியல் வசதி, உணவு வசதி, படுக்கை வசதி ஆகியவற்றுடன் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் குளிப்பதற்கு வெந்நீர் கூடக் கொடுத்தார்கள். காலைப் பலகாரம் ரயிலிலேயே கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் ரயில் பிரயாணம் இரவில் நிகழ்ந்தது. பிரயாணத்தின்போது ரயிலில் நாங்கள் நிம்மதியாகத் தூங்கவும் முடிந்தது.

பகல் நேரத்தில் ஊர்களைச் சுற்றிப் பார்த்தோம். அந்த நேரத்தில் ரயில் நிலையங்களில் எங்கள் ரயிலுக்குப் பலத்த போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது.

இந்திய அதிபர் போன்ற பெருமக்களின் பயணத்திற்குத்தான் இப்படித் தனி ரயில்கள் விடப்படுவது வழக்கமாம். தமிழுக்காக ஒரு தனி ரயில் தமிழறிர்களைச் சுமந்துகொண்டு பவனி வந்தது வரலாற்றுப் பெருமை மிக்க - என்றும் நினைவில் கொள்ளத்தக்க நிகழ்ச்சியாகும்.

4 லட்சம் ரூபாய்

முதல் வகுப்புப் பெட்டி ஒன்றுக்கு ஒரு நாளைக்குரிய பணம் ரூ. 5000 என்றும் அப்படிக் கணக்கிட்டால் ஏழு

நாட்களுக்கு இந்தச் சுற்றுப் பயணத்திற்கு மட்டும் ரயில்வேக்கு 4 லட்சம் ரூபாய்க்குமேல் கொடுக்க வேண்டியிருக்கு மென்றும் சொன்னார்கள். இயந்திரம், ஆள் பேர் மாகாணம் முதலியவற்றுடன் ஒரு விசேஷ ரயிலை நேர அட்டவணைப்படி விடுவதென்பது பெரிய காரியம். ஆனால் ரயில்வே நிறுவனத்தின் கனிவான உதவியின் பலனாகவே இச்சுற்றுலா இத்துணை சிறப்பாக நடந்ததென்று சொல்லவேண்டும்.

சுற்றுலாவின் தலைவராக தமிழக உணவு மந்திரி மாண்புமிகு மதியழகன் ஆங்காங்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார். மற்றும் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் ம பொ. சி, திருவாசகமணி, கே. எம். பாலசுப்பிரமணியன், கருத்தரங்குப் பொறுப்பாளர்களான வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார், திரு. ஏ. சுப்பையா முதலான பெரியவர்களும் எங்களுடன் ரயிலில் பிரயாணம் செய்தனர். தமிழ் நாட்டுப் பேராளர்கள் சிலரும் உடன் வந்தனர். ஏறத்தாழ 200 பேர் கொண்ட இக்குழுவினர் சிதம்பரம், திருவாரூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி ஆகிய தமிழகத்தின் பெரிய நகரங்களைப் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

ஒவ்வொரு ஊரிலும் ரயிலடியிலும் மற்றும் நிகழ்ச்சிகளின் போதும் அளிக்கப்பட்ட வரவேற்பு மிகவும் அருமை. நூற்றுக்கணக்கில் ரோஜாப்பூ மாலைகளையும் சிவந்திப்பூ மாலைகளையும் கொண்டுவந்து காத்திருந்து ஒவ்வொருவரையும் தேடி மாலையணிவித்து மேளதாளம் பொய்க்கால் குதிரை ஆட்டம் முதலியவற்றுடன்

வரவேற்றுப் பேருந்து வண்டிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

முதல் நாள் ஜனவரி 12ந் தேதி காலையில் சிதம்பரம் போய்ச் சேர்ந்தோம். 'கோயில்' என்று சிறப்பாக அழைக்கப் படுகிற தில்லை நடராசர் திருக்கோவிலை முதலில் சுற்றிக் காண்பித்தார்கள். சிதம்பரம் கோவில் தில்லை மூவாயிரவர் என்று அழைக்கப்படும் தீட்சிதர் களின் ஆளுகையில் இருந்து வருகிறது. இப்பொழு துள்ள தீட்சிதர்களின் எண்ணிக்கை முந்நூறுதான் இருக்குமென்று கூறினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகக் தமிழ்த்துறை ஆராய்ச்சிப் பேராசிரியர் திரு ஏ. ராமசாமிப்பிள்ளை எங்களுக்கு கோவில் பற்றிய எல்லா விவரங்களையும் விளக்கமாகக் கூறினார்.

சிதம்பரம் கோயில் பலவகையில் பெருமை வாய்ந் தது. சேக்கிழாரின் 'பெரிய புராணம்' அங்குதான் அரங் கேற்றப்பெற்றது. திருவாசகத்தை மாணிக்கவாசகர் சொல்ல அதனை ஏட்டில் எழுதியவர் தில்லை நடராசர் என்றும் கூறப்படுகிறது. முதலாவது இராசராச சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி சிதம்பரம் கோவிலில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த தேவாரம் திருவாசகம் முதலிய திருப்பதிகங்களைத் தொகுத்து வெளியிட்டார் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. திரு முறைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்தையும் எங்களுக்குக் காட்டினார்கள்.

திருவாசகம் முழுவதும் சிதம்பரம் கோவில் சிவ கங்கை குளத்தைச் சுற்றிலும் பொறித்து வைக்கப்பட் டிருக்கின்றன. திருப்பனந்தாள் மடம் இந்த நற்காரி யத்தைச் செய்திருக்கிறது. நடராசர் கோயிலை யொட்டி

யுள்ள புதிய சுப்பிரமணியர் கோவிலில் கந்தபுராணம் முழுவதும் ஓவியர் கோவிந்தராசன் அவர்களால் வண்ணச் சித்திரமாகத் தீட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

கோவிலைப் பார்த்த பிறகு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ருேம். தமிழ்ப் பல்கலைக்கழகமாக இயங்கி வருகிற பெரிய அமைப்பு அண்ணுமலைப் பல்கலைக்கழகம். இன்று தமிழகத்தில் முகிழ்த்திருக்கிற தமிழ்ப் புத்துணர்ச்சிக்கு அண்ணுமலைப் பல்கலைக்கழகம் பெரிய நிலைக்களன் என்று சொல்வதும் மிகையாகாது.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தை நினைக்கும் போதெல்லாம் கவிமணியின் பாட்டு என் உள்ளத்தில் தோன்றும்.

தில்லைப் பதியுடையான்
சிற்றம் பலந்தன்னில்
அல்லும் பகலும் நின்
ருடுகின்ருன்—எல்லைக்கண்
அண்ணுமலை மன்
அமைத்த கலைக்கழகம்
கண்ணுரக் கண்டு களித்து.

தில்லைப் பதியுடையானின் திருத்தாண்டவக் களிப்புக்கு அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தின் அமைப்பும் காரணமாகிவிட்டதாகக் கவிமணி பூரிப்போடு கூறுகிருர்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகம் தமிழுக்கு அன்று முதல் இன்றுவரை செய்துவருகிற அரும்பணி தமிழர்களின் உள்ளத்தைக் குளிர்விப்பதாகும். பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த பெருந்தகை ராஜா சர். அண்ணு

மலைச் செட்டியார் அவர்களும் இன்று தம் தந்தையார் வழியில் அதனைப் போற்றி புரந்துவருகிற ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும் தமிழ்ச் சமுதாயத்தின் ஒருமுகமான நன்றிக்கு உரியவர்கள்.

பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளையும் பார்த்தோம். பல்கலைக்கழகத்தில் பணிபாற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களில் சிலர் என் பழைய நண்பர்கள். அவர்களின் திருமுகங்களை மீண்டும் பார்க்கவும் அவர்களுடன் உரையாடவும் வாய்ப்புக் கிட்டியதற்காக மகிழ்ச்சியடைந்தேன்.

தமிழ்ப் பகுதி என் கவனத்தை மிகவும் கவர்ந்தது. தமிழ்ப் புலவர்கள் வரலாறு ஒன்றை அப்பகுதி இப்பொழுது தயாரித்துக் கொண்டிருக்கிறது. ஆறுயிரம் தமிழ்ப் புலவர்களின் வரலாறு அதில் இடம் பெறுமென்று சொன்னுர்கள். வாழ்கிற புலவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் அதில் சேர்க்கப்படுவதாகவும் சொன்னுர்கள்.

50-க்கு மேற்பட்ட ஏடுகளின் துணையோடு, கம்பராமாயணத்தை மிகவும் சிறப்பான முறையில் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் பதிப்பித்து வருகிறது.

சிதம்பரம் நகரசபை உலக அறிஞர்களுக்கு ஒரு வரவேற்பு வழங்கியது. பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் உணவு மந்திரி திரு. மதியழகன் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடந்தது. பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு சந்திராரெட்டி தமிழில் பேசி எல்லாரையும் மகிழ்வித்தார். பல்கலைக்கழகத்தின் வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கின்ற முறையில் மலேசியாவின் சார்பில் நானும் அக்கூட்டத்தில் சில வார்த்தைகள்

சொன்னேன். முத்தமிழ்க் காவலர், சிலப்புச் செல்வர், திருவாசகமணி முதலிய பலரும் பேசினார்கள்.

பிரும்மாண்ட அரிசி ஆலை

மறுநாள் காலையில் திருவாரூருக்குச் சென்றோம். அங்கு ரயில் நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் பிரும்மாண்ட அரிசி ஆலை (ரைஸ்மில்) கருத்தரங்குப் பிரதிநிதிகளை மிகவும் கவர்ந்தது. ஒரு மணிககு 4 டன் நெல்லை இந்த ஆலையில் அரைக்கமுடியுமாம். மேற்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு இந்த ஆலை இயங்குகிறது. இந்தியாவிலேயே பெரிய அரிசி ஆலையான இதனைத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம் நடத்துகிறது. ரூ. 38 லட்சம் முதலீட்டில் இது அமைக்கப்பட்டிருககிறது.

நெல்லை அவிப்பது முதல் அரைப்பதுவரை, தரம் பிரித்து மூட்டை மூட்டையாகக் கட்டுகிற எல்லாக் காரியங்களுமே இயந்திரங்களினால் செய்யப்படுகின்றன. திரு. தியாகராஜ முதலியார் ஆலையின் பல பகுதிகளையும் சுற்றிக காண்பித்து நல்ல விளக்கம் அளித்தார்.

திருவாரூர் தியாகராஜர் கோவிலும் மிகவும் பிரசித்தி பெற்றது. அங்கு கருத்தரஙகுப் பிரதிநிதிகள் சுவாமி தரிசனம் செய்துகொணடிருக்கும்போது திருவாசகமணி அவர்களுக்கு ஆவேசம்வந்து ஒரு கவிதையையே பொழிந்துவிட்டார்.

திருவாரூரில் எல்லாரையும் ஒருமுகமாகக் கவர்ந்த ஒன்று அஙகே இருக்கிற பிருமமாண்டமான தேரே ஆகும். தமிழ் நாட்டிலேயே அதுதான் பெரிய தேர் என்று சொல்கிறார்கள். தேரின் பிரும்மாண்ட அளவு ஒரு

புறமிருக்க அதிலுள்ள கலை வேலைப்பாடுகள் மிகவும் சிறப்பானவை. எத்தனை நாள் வேண்டுமானாலும் அந்தத் தேரை அணு அணுவாகப் பார்த்துக் கொண்டிருக்கலாம். அத்துணை கலையழகை அது தன்னகத்தே அடக்கி வைத்திருக்கிறது.

அன்று மாலையிலேயே தஞ்சாவூருக்குச் சென்றோம். அங்கே சரஸ்வதி மகால் நூல் நிலையம், கலைக்கூடம் பெருவுடையார் கோவில் முதலியவற்றை அவசர அவசரமாகப் பார்த்தோம்.

தஞ்சையிலுள்ள பெரிய கோவில் எல்லாவகையிலும் பெரிய கோயிலாகத் திகழ்வது உண்மை. அங்கே இருக்கிற ஆவுடையார், நந்தி, கோவில் கோபுரம் அத்தனையும் பிரும்மாண்டமாக—மனிதனின் கற்பனையையும், கனவையும் மிஞ்சுகிற விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. வானளாவிய சிந்தனையுள்ளவர்கள் தமிழர்கள் என்பதை இவை மெய்ப்பிக்கின்றன.

சரபோஜி மகாராஜாவின் சரஸ்வதி மகால் நூல் நிலையம் அறிவுப் புதையலாகத் தஞ்சையில் திகழ்ந்து வருகிறது. அதனை நாங்கள் ஓய்வாக நின்று நிலைத்துப் பார்க்கமுடியவில்லை. 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட பழஞ்சுவடிகள் அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னரின் சொந்த முயற்சியினால் இத்துணை அறிவுச் செல்வம் கிடைத்திருக்கிறது. அந்தச் சுவடிகளையெல்லாம் துருவித் துருவிப் படித்து நூல்களாக அச்சிட்டு வருகிறார்கள். தமிழ் இலக்கியங்கள், தெலுங்கு, தேவநாகரி எழுத்திலும் வடமொழி இலக்கியங்கள் தெலுங்கு முதலான பிறமொழி எழுத்திலும் எழுதப்பட்டிருப்பது இந்நூல் நிலையத்திலுள்ள

பழஞ்சுவடிகளில் ஒரு புதுமையாகும். இத்தகைய மொழி ஒருமைப்பாட்டு முயற்சிகளைத் தூரநோக்கோடு தஞ்சை மன்னர்கள் செய்து பார்த்திருக்கிறார்கள்.

சரஸ்வதி மகாலிலுள்ள ஏடுகளையெல்லாம் பதிப்பித்து முடிக்க இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குமேல் பிடிக்கும் என்று கூறுகிறார்கள். குறிப்பாக ஏராளமான மருத்துவ நூல்கள் அந்நூல் நிலையத்தில் இருக்கின்றன.

தஞ்சாவூர் நகரசபையாரும் வரவேற்பு வழங்கி ஒரு பொதுக்கூட்டம் நடத்தினார்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரும் உணர்ச்சிப் பிழம்பான வரவேற்பு விழாவை நடத்தினார்கள்.

பேராளர் அறிமுகம்

ஒவ்வொரு ஊரிலும் சுற்றுலாவில் நிகழ்ச்சிகளை அதிகம் ஏற்பாடு செய்திருந்ததால் பேராளர்கள் எதனையும் ஊன்றிப்பார்க்க முடியாமற் போய்விட்டது. அதுமட்டுமன்றி ஒவ்வொரு ஊரிலும் நடத்தப்பட்ட பொதுக் கூட்டங்களில் வெளிநாட்டுப் பேராளர்களை அறிமுகப் படுத்துவதற்குச் சரியான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

பெரும்பாலும் எல்லாக் கூட்டங்களிலும் முத்தமிழ்க் காவலர் விசுவநாதமும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யும் இடைவிடாமல் நீண்ட நேரம் பேசி எல்லோருடைய பொறுமையையும் சோதித்தார்கள். கருத்தரங்கிற்கு வந்திருந்த பல்வேறு நாட்டு அறிஞர்களையும் ஊருக்குப் பத்துப் பேராக மேடையில் நிறுத்தி அறிமுகம் செய்து பேசவைக்காமல் முத்தமிழ்க் காவலரும் சிலம்புச் செல்வரும் தாங்களே ஒவ்வொரு கூட்டத்திலும் பேசிக் கொண்டிருந்தது பிரதிநிதிகள் பலருக்கு எரிச்சலாக இருந்தது. எல்லாரும் முணுமுணுத்தார்கள்.

ஆனால் சுவிட்ஜர்லாந்து அறிஞரான டாக்டர் கார்ல்கெல்லர் சளசளவென்று பேசிககொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் பேச்சாளர்களுக்கு மறைமுகமாகச் சாட்டையடி கொடுக்கத் தயங்கவில்லை. ஒவ்வொரு கூட்டத்திலும் மிகவும் கருத்தோடு டாக்டர் கார்ல் கெல்லர் பேசினர். தஞ்சாவூர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது 'தமிழ் நாட்டின் திருத்தலங்களில் நான் எல்லா மூர்த்திகளையும் பார்த்துவிட்டேன். ஆனால் மௌனகுரு மூர்த்தியைத்தான் பார்க்க முடியவில்லை என்று குறிப்பிட்டுத் தமிழ்நாட்டில் மணிக்கணக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அர்த்தமற்ற பேச்சுக் கச்சேரிகளை மறைமுகமாகச் சாடினர்.

உலகத் தமிழ் கருத்தரங்கு தமிழகத்தையும் தமிழ் மக்களையும் நேரில் சென்று காண்கிற ஒரு நல்ல வாய்ப்பை வழங்கிற்று. இப்பயணத்தில் யான் பெற்ற அனுபவம் மற்ற வெளிநாடுகளின் சுற்றுப்பயணங்களின் போது பெற்ற அனுபவத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். தமிழகத்தின் பல்வேறு சிறப்புககளையும் ஒருங்கு உணர்வதற்கு இப்பயணம் பயனபட்டது. தமிழகத்திற்கு அப்பால் பரந்து கிடக்கும் தமிழ்கூறு நல்லுகத்தினை மனவெளியில் தரிசிக்கவும் இப்பயணம் உதவிற்று.

இக்கட்டுரைகளை—கருத்தரங்கு பற்றிய என் கருத்துக் கோவையாகவே எழுதினேன். சில கருத்துக்களை அழுத்தமாகக் கூறியிருப்பேன். ஆனால், தனிப்பட்ட யாருடைய மனத்தையும் புண்படுத்துவது என் நோக்கமன்று. தமிழின் எதிர்கால வளர்ச்சியில் உண்மையான அக்கறையுள்ள அனைவரும் என் கருத்துக்களை மனமுவந்து வரவேற்பர் என்பதே என் நம்பிக்கை.